தேவியின் கண்மணி

29-09-2021
ரூ.20

ஆதலையூர் சூரியகுமார்



# காதல் கதவுகள்!



பெண்மணி
எஸ்.பர்வின்பானு
செப்டம்பர் - 2021
நீ இரவு... நான் விண்மீன்!
–முழு நாவல்
ஆன்மிகம்:
நல்லருள் தரும் நாமம்!
சின்னத்திரை:
நல்லவர்களுடன் பழகப் பிடிக்கும்!
–கேப்ரெலா
கோவில்:
திருமணத்தடைநீக்கும் புளியறை சதாசிவமூர்த்தி லிஸ்கேஸ்வரர்!
சுற்றுலா:
இந்தியாவின் சர்க்கரைக் கிண்ணம் கோல்காப்பூர்!
இசை:
நாட்டியம், சங்கீதத்தில் மூன்று தலைமுறை!
–ஜெயஸ்ரீ நாயர்
சுவையான மூலிகை வகை தொக்குகள்!
ரூ.1000/- பரிசு அறிவுத்திறன் போட்டி
விலை ரூ.28/-

# வாழ்க தமிழர் நாம்...
# வாழட்டும் தமிழ்நாடு!



அன்புத்தமிழர்களே!
வணக்கம்.

நாம் அறிந்து கொள்ள விழைவோர் பலர் நம் தமிழினத்தில் பிறந்திருந்தாலும் அவர்களில் தமிழரின் இனம் பேசி, மொழி பேசி எழுந்தவர்கள் சிலரே! அதிலும் தமிழர் நம்நிலத்தின் பரப்புகளையும் தமிழரின் பண்புகளையும் பேசி எழுந்தவர் என குறிப்பிடத்தக்க ஒருவராக இருப்பவர் நம் தமிழர்த் தந்தையென போற்றி மகிழ்ந்த பெருந்தகை சி.பா.ஆதித்தனார் அவர்கள் என்றால் மிகையல்ல.

27.9.2021

## தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார்
## பிறந்த நாள்

சிறப்புக் கட்டுரை

அன்னாரின் பிறந்தநாள், அதுவும் நூற்றாண்டுகளை கடந்ததாக இருப்பதில் பெரும் மகிழ்வு, ஆம் 116 ஆம் ஆண்டு.

நம் இனம் எப்படிப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக தென்பாண்டிநாடு விளங்குகிறது. அங்கே தோன்றிய 'கப்பலோட்டிய தமிழர்' என போற்றப்படுகின்ற வ.உ.சி தம்பரனார், சுப்பிரமணிய சிவா, கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் என நீளும் வரலாற்றுக்கிடையே நாம் தமிழர்! என முழக்கமிட்டு எழுந்தவரே! நம் சி.பாலசுப்பிரமணிய ஆதித்தனார் அவர்கள்.

எல்லாம் மேல்தட்டு மக்களுக்கே என ஏடுகள் நடத்திய செய்தித்தாள் முதலாளிகளிடையே ஏழைகளுக்கும் இல்லாதவர்களுக்கும் என செய்தி ஏட்டினை நடத்திய பெருமைக்கு உரியவர் ஐயா அவர்கள். அவர் முன்மொழிந்தது தான் 'உயிர் தமிழுக்கு உடல் மண்ணிற்கு'! என்றது.

மண்ணிழந்த மக்களும் மொழியிழந்த நாடும் அடிமை



போல ஆகும் என்பதை நன்கு உணர்ந்த ஐயா ஆதித்தனார் அவர்கள் தீர்க்கமான மாமனிதர். நாம் காணும் உலகம் அப்படித்தானே அமைந்துள்ளது. ஒவ்வொரு நாடும் இனமும் அப்படித்தானே இருக்கின்றன. அதுபோலவே தமிழர் நாமும் அடிப்படை மொழியையும் இனத்தின் பெருமையையும் இழந்து விடக்கூடாது என்பது போல நாமும் உணர்ந்து வாழ வேண்டும்.

இந்தியா பன்மொழியினரின் நாடு, பல்வேறு இனங்கள் வாழுகின்ற நிலம். அது

வடக்குத் தெற்காக விரிந்து பரந்து கிடக்கிறது. அதன் உள்ளே தமிழர் நாமும் இருக்கின்றோம். நாம் பண்டைய பெருமைகள் பலவற்றிற்கு சொந்தக்காரர்கள். நாம் பலமொழிகளுடன் இருந்து வாழ வேண்டும்.


ஆனாலும் நமது மொழியும் தாய் மண்ணும் காப்பாற்றப்பட வேண்டும். அதற்கான அச்சாணி போல தாங்கி நின்றவரே சி.பா. ஆதித்தனார் அவர்கள்.

**வா**னளந்தவர்கள் நாம். மண்ணளந்தவர்கள் நாம். இயற்கையையும், வளங்களையும் பகுத்தறிந்தவர்கள் நாம். நாம் நாமாக இருக்க நம்மை நாம் சீர்தூக்கி பார்க்க வேண்டும் அப்படி பார்க்கின்ற போதே நம்மை நாம் சரி செய்து கொள்ள இயலும். நாம் நம் காலங்களில் நிற்பதைப் போல நம் மொழியில் பயின்று எழ வேண்டும். குழந்தைகளுக்கு தாய்ப்பால் போல... தமிழர் குடும்பத்திற்கு தமிழே உயிர்ப்பாலாக நிற்கும் என்பதை உணர்ந்து உரைத்த பெருந்தகையே நம்... நாம் தமிழர்! என சொல்லி எழுந்த ஐயா ஆதித்தனார் அவர்கள்.

அவர்களின் வழியை பின்பற்றி வளரும் தலைமுறைகள் எழ வேண்டும். அதுவே உயிர்த் தமிழுக்கும் உடல் மண்ணிற்கும் என வாழ்ந்த தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் பெருமையை பேசும்.

**மொழியின்றி இனமில்லை..**
**இனமின்றி பெயரில்லை...**

பெயர் சொல்லும் பிள்ளைகளாக தமிழ்நாட்டு செல்வங்கள் வளர வேண்டும் என்னும் ஆவலை ஐயா அவர்களுக்கு மாலையாக்கி சூடி மகிழ்கிறோம்.



**-பாவலர் மு.இராமச்சந்திரன்**
**தலைவர், தமிழ்த் தன்னுரிமை இயக்கம்**

# அரசியல்ல... இது சாதாரணமப்பா


சுஷ்மிதா தேவ்

திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த மானஸ் புனியா, மேற்கு வங்காள சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து ராஜ்ய சபை எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து சுஷ்மிதாவை ராஜ்ய சபைக்கு மம்தா பானர்ஜி அனுப்பி வைத்தார். காங்கிரஸ் கட்சியில் மகளிர் அணித் தலைவியாக இருந்து வந்த சுஷ்மிதா தேவ், சில வாரங்களுக்கு முன் தான் திரிணாமுல் காங்கிரசில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

கொரோனா பரவலை காரணமாக காட்டி மூத்த குடிமக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த ரெயில் பயணகட்டணச் சலுகை பறிக்கப்பட்டு விட்டது. மூத்த குடிமக்களின் பொருளாதாரச் சுமை அதிகரித்துள்ளதால் அவர்கள் மிகுந்த வேதனைக்கு ஆளாகியுள்ளனர். எனவே மூத்த குடிமக்கள் தினமான அக்டோபர் முதல் நாளில் இருந்தாவது, பறிக்கப்பட்ட ரெயில் பயணக் கட்டண சலுகையை மீண்டும் வழங்க வேண்டும் என்று மூத்த குடிமக்கள், மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---


பூபேந்திர படேல்

குஜராத் முதல்வராக இருந்து வந்த விஜய் ரூபானி அண்மையில் மாற்றப்பட்டார். குஜராத்தின் புதிய முதல்வராக பா.ஜ.க.வைச் சேர்ந்தவரும் பெரும்பான்மையினராக உள்ள படேல் சமூகத்தைச் சேர்ந்தவருமான பூபேந்திர படேல் பதவியேற்றுள்ளார். இந்நிலையில் இமாசலப்பிரதேச முதல்வர் ஜெயராம் தாகூரை மாற்ற வேண்டும் என்று பா.ஜ.க. அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

**2017-ம்** ஆண்டு ஜூலை முதல் 2021-ம் ஆண்டு ஆகஸ்ட் வரை லாட்டரி மீதான சரக்கு சேவை வரி வாயிலாக மத்திய மாநில அரசுகளுக்கு ரூ. 20 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக வருவாய் கிடைத்துள்ளது. இந்நிலையில் மத்தியப் பிரதேசத்தில், தடை செய்யப்பட்டிருந்த லாட்டரி விற்பனைக்கு மீண்டும் அனுமதி அளித்து, அம்மாநில முதல்வரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான சிவராஜ் சிங் சவுகான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.




---

**த**மிழ்நாட்டில் தாம்பரம், காஞ்சிபுரம், கடலூர், கரூர், கும்பகோணம், சிவகாசி என புதிதாக 6 மாநகராட்சி கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இயங்கி வரும் 15 மாநகராட்சி களையும் சேர்த்தால், தமிழ்நாட்டில் இவற்றின் எண்ணிக்கை 21 ஆகி விடுகிறது. இந்நிலையில் 1866- ம் ஆண்டிலேயே முனிசிபாலிட்டி ஆகிவிட்ட உதகமண்டலத்தை மாநகராட்சியாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

---








**செ**ப்டம்பர் மாதம் 25-ம் தேதி முன்னாள் துணை பிரதமர் தேவிலாலின் பிறந்த நாள், ஜிந்த் நகரில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. லோக் தளத்தின் தலைவரும் அரியான மாநில முன்னாள் முதல்வருமான ஓம் பிரகாஷ் சவுதாலா இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளார். இக்கூட்டத்தில் ஐக்கிய ஜனதா தளம் சார்பில் கே.சி.தியாகி கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஐக்கிய ஜனதா தளம் மீதான பா.ஜ.க.வின் அதிருப்தியை உச்சப்படுத்தியுள்ளது.

ற நீத




அம்மாவின் ஆசையை நிறைவேற்ற அரசியலில் கால் பதித்து சாதிப்பவன் இந்த 'கோடியில் ஒருவன்'.

பஞ்சாயத்து தேர்தலில் பெண் வேட்பாளரை தன் சார்பில் நிற்க வைத்து ஜெயிக்க வைக்கும் உள்ளூர் பெரிய கையான பூ ராமு, தன் பேச்சை கேட்காமல் மக்களுக்கு நல்லது செய்ய நினைக்கும் அந்த பெண்மணியை (திவ்ய பாரதி) எரித்துக் கொல்லப் பார்க்கிறார்.

கர்ப்பிணியாக இருக்கும் அந்த பெண் தீக்காயத்துடன் உயிருக்குப் போராடி ஒரு குழந்தையை பெற்றெடுக்கிறார். அவள் உயிர் பிரியும் நேரத்தில் குழந்தையின் பிஞ்சு விரல் தன் தாயின் உயிரை மீட்டுத் தருகிறது. வீட்டுக்குள்ளேயே சிறைவாசம் இருக்கும் திவ்யபாரதி, தன் மகனை ஐ.ஏ.எஸ். அதிகாரியாக்கி பெரிய பொறுப்பில் அமர்த்த நினைக்கிறார்.

வளர்ந்து ஆளாகும் மகன் விஜயராகவன் (விஜய் ஆண்டனி), சென்னையில் தங்கி மாஸ்டர் டிகிரி படித்துக் கொண்டே தன் ஏரியா பிள்ளைகளுக்கு டியூசன் மாஸ்டராகிறார். முதலில் குப்பைமேடாக காட்சியளிக்கும் அந்த ஏரியாவை மாற்ற நினைக்கும் விஜய் ஆண்டனி, துப்புரவு பணி செய்வது, ஏரியாவை அசுத்தமாக்கும் சிறுவர்களுக்கு புத்தி சொல்லித் திருத்துவது என சிவில் சர்வீஸ் தேர்வுக்குப் படித்துக் கொண்டே சோஷியல் சர்வீஸ் செய்கிறார்.

ஆனால் காலேஜில் படிக்கும் அவரிடம் ஏரியா ரவுடி சுல்லு வம்பிழுக்க, ஒரு கட்டத்தில் பொறுமை இழந்து விஜய் ஆண்டனியும் திருப்பி அடிக்க, ஆளுங்கட்சி கவுன்சிலர், அவரது

அடியாளான கான்பிரன்ஸ் கருணாவின் பகையை சம்பாதிக்கிறார். ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் பாஸ் ஆன விஜய் ஆண்டனி, நேர்காணலுக்கு டெல்லி செல்ல வேண்டிய நேரத்தில் கருணாவின் ஆட்கள் அவரை அடித்து குற்றுயிராக்கி கூவத்தில் வீசி விட்டு சர்டிபிகேட்டை கிழித்துப் போடுகிறார்கள்.

தோற்றுப் போனவனாக ஊருக்கு திரும்பும் விஜய் ஆண்டனி, தன் அம்மா கொடுத்த ஊக்கத்தால் மீண்டும் திரும்பி வந்து உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு ஏரியா கவுன்சிலர் ஆகிறார். எதிரிகளை தன் பக்கத்தில் வைத்துக் கொண்டால் தான் பலம் என்று புரிந்து கொண்டு, ஆளுங்கட்சி பெரும்புள்ளி பெத்த பெருமாளை தன் வலையில் வீழ்த்தி தன் வார்டை தமிழ்நாட்டிலேயே நம்பர் 1 ஆக மாற்றிக் காட்டுகிறார்.

இதனால் மற்ற கவுன்சிலர்கள், மேயர் எதிர்ப்புக்கு ஆளாகிறார். ஒரு கட்டத்தில் தன் கட்சியில் சேராமல் ஏமாற்றிய விஜய் ஆண்டனியை அம்மா செண்டிமெண்ட் வைத்து மிரட்டி ராஜினாமா செய்ய வைக்கிறார் பெத்த பெருமாள். ஆனால் கவுன்சிலர் பதவி போனால் போகட்டுமென்று, தனக்கு இருக்கும் பிரபலத்தை பயன்படுத்தி எம்.எல்.ஏ எலக்‌ஷனில் நிற்கிறார்.

இவன் தேர்தலில் நின்னா நம்ம கட்சி தோத்துடும் என்று முதல்வரே பயப்பட, விஜய் ஆண்டனி தேர்தலில் வென்றாரா? தன் அம்மாவின் கனவை நிறைவேற்றினாரா? அவரது லட்சியப் பாதையில் ஏற்படும் சிக்கல்கள் என்ன என்பது மீதிக்கதை.

பிச்சைக்காரனுக்குப் பிறகு விஜய் ஆண்டனி கம்பேக் கொடுத்திருக்கும் படம். ஆக்‌ஷனிலும், செண்டிமெண்ட் காட்சிகளிலும் ஸ்கோர் செய்திருக்கிறார். ஆனால், ரொமான்ஸ் போலவே ஆக்ரோஷமாக பேசும் சீன்களில் செயற்கைத்தனம்.

ஆத்மிகாவுக்கு நடிக்க பெரிய அளவில் ஸ்கோப் இல்லை, கிடைத்த கேப்பில் ஸ்க்ரீனில் வந்து போகிறார்.

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| விஜய் ஆண்டனி | ● | ● | ● | ○ | ○ |
| ஆத்மிகா | ● | ● | ◐ | ○ | ○ |
| கதை | ● | ● | ◐ | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ◐ | ○ | ○ |
| இயக்கம் | ● | ● | ● | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ● | ○ | ○ |
| இசை | ● | ● | ● | ○ | ○ |
| மொத்தத்தில் | ★ | ★ | ★ | ☆ | ☆ |

விஜய் ஆண்டனிக்கு அம்மாவாக நடித்திருக்கும் திவ்ய பாரதி நேர்த்தியான நடிப்பில் மிளிர்கிறார். குணச்சித்திர வேடங்களில் தோன்றும் பூ ராமு, இதில் வில்லனாக மிரட்டுகிறார்.

வட சென்னை வில்லன்களாக சூப்பர் சுப்பராயன், சூரஜ், கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள். கே.ஜி.எப் வில்லன் ராமச்சந்திர ராஜூ, தோற்றத்தில் மிரட்டி பில்டப் கொடுத்து கடைசியில் புஸ்வானம் ஆகி விடுகிறார்.

நிவாஸ் கே.பிரசன்னா இசையில் ‘சிலநாள் கருவில்’, ‘அவன் பாத்து சிரிக்கல’ பாடல்கள் ரசிக்க வைக்கிறது.

ஹரிஷ் அர்ஜூனின் பின்னணி இசை விறுவிறுப்பைக் கூட்டுகிறது.

உதயகுமாரின் ஒளிப்பதிவு ஸ்லம் ஏரியாவை சிங்கப்பூர் ரேஞ்சுக்கு திரையில் காட்டியிருக்கிறது.

லியோ ஜான் பாலின் படத்தொகுப்பில் இரண்டாம் பாதியை இன்னும் மெருகேற்றியிருக்கலாம்.

ஸ்க்ரிப்டில் எழுதியதை கிட்டத்தட்ட ஸ்க்ரீனில் கொண்டு வந்த வகையில் வெற்றி பெற்றிருக்கிறார் இயக்குனர் ஆனந்த கிருஷ்ணன். ஆனால் முதல்




பாதி திரைக்கதையில் இருந்த நேர்த்தி பிற்பாதியில் இல்லை. சில இடங்களில் ஒன்மேன் ஷோ ஓவர் டோஸ் ஆகி விடுகிறது.

ஐ.ஏ.எஸ். ஆக முடியாத நிலையில் பழகிய மக்களின் ஆதரவால் ஏரியா கவுன்சிலர் ஆனது வரை ஓகே, ஆனால் ஹீரோ இஷ்டப்படும் போதெல்லாம் தேர்தல் நடக்கிறது. அவரும், எம்.எல்.ஏ., சி.எம் என்று ஹைப் ஏற்றுகிறார் என்பதெல்லாம் டூமச் (நிஜத்தில் உள்ளாட்சி தேர்தல் நடக்க எத்தனை காலம் காத்திருக்கிறோம் என்பது தனிகதை).

லாஜிக்கை தாண்டிய மேஜிக் நிறைந்த கதையில் இரண்டாம் பாகத்திற்கும் வீடு கொடுத்திருக்கிறார்கள்.

–தவா.



**தி**ருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் உள்ள ஒருஹோட்டலில் சாப்பிட்ட கூலித் தொழிலாளி ஆனந்தனின் 10 வயது மகள் லோஷினி உயிரிழந்தார். அவளது குடும்பத்தினருக்கும், அங்கு சாப்பிட்ட 40க்கு மேற்பட்ட பிறருக்கும் உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து ஓட்டல் உரிமையாளர் காதர்பாஷாவும் சமையல் மாஸ்டரும் கைது செய்யப்பட்டனர்.

# விஷமாகும் ஓட்டல் உணவுகள்... ஏன்?



ஒரு அப்பாவி சிறுமியின் உயிர் பறிபோனபின்பே விழித்த சுகாதார அதிகாரிகள் அந்த ஓட்டலில் சோதனை நடத்தி கெட்டுப்போன இறைச்சியை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் திடீர் ஆய்வு நடந்து பல்வேறு ஓட்டல்களில் கெட்டுப்போன இறைச்சியை கைப்பற்றியுள்ளனர்.

அதுமட்டுமல்ல, இந்த மாத தொடக்கத்தில் சென்னை சிந்தாதிரிபேட்டை தனியார் மீன் குடோனில் விற்பனைக்கு அனுப்ப இருந்த 200 கிலோ கெட்டுப் போன மீன்களை உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

பல நாட்களுக்கு முன்பு பதுக்கி வைக்கப்பட்டு, கெட்டுப்போன அந்த மீன்களை ரசாயன மருந்து தெளித்து விற்பனைக்கு அனுப்ப முயன்றது கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல், கடந்த மாதமும் இந்த மாதமும் சேலம், சாத்தூர், திருச்சி பகுதிகளில் பதப்படுத்திய மீன்கள் கிலோக்கணக்கில் கைப்பற்றப்பட்டன.

**உ**ணவே நஞ்சாகி



லோசினி

உயிர் பறித்த இந்த கொடுமைக்கு... உடனடியாக உண்ணவேண்டிய உணவுகளை பதப்படுத்தி பல நாட்கள் வைப்பதால் ஏற்படும் பிரச்சினையே காரணம்.

இயற்கையிலேயே சில நாட்கள் கெடாமல் இருக்கக்கூடிய உணவுப்பொருட்களை செயற்கையாக கூடுதலாக சில நாட்கள் பாதுகாக்க குளிர்பதனப்பெட்டி போன்ற சில சாதனங்களை பயன்படுத்துகிறோம். அதுவே உணவுப்பொருள் நஞ்சாக காரணமாக அமைந்துவிடுகிறது. அதுவும் ரசாயனங்களாலும் இந்த கெடுதி ஏற்படுகிறது.

குறிப்பாக, நம்மிடம் பரவிவிட்ட மிதமிஞ்சிய சிக்கன் உணவுப்பழக்கம் இவ்வாறு கெட்டுப்போன உணவுகள் புழக்கத்துக்கு காரணமாகிவிட்டது. கிரில் சிக்கன், சவர்மா போன்ற பல்வித அந்நிய முறை உணவு வகைகள் மக்களுக்கு பிரியமாகிவிட்டன.

அதன் காரணமாக கொரோனாவுக்கு பின்பு இதுபோன்ற உணவுகளை விற்கும் நிறைய உடனடி, துரித உணவகங்கள் சென்னை,

மதுரை போன்ற பெரு நகரங்களில் தொடங்கப்பட்டு உள்ளன.

தரமான உணவகங்களில் இறைச்சி, மீன் உணவுகள் குறிப்பிட்ட நேரமே கிடைக்கும். ஆனால், பல துரித உணவகங்களிலும், கவர்ச்சிகரமாக நகரங்களில் திறக்கப்படும் 'பள பள' சிக்கன் தந்தூரிஉணவகங்களிலும் எப்போதும் அசைவ உணவு கிடைக்கும். அதற்காக அவர்கள் இறைச்சி, மீனை குளிர்பதன நிலையில் வைத்திருக்கிறார்கள்.

மசாலா சேர்க்கப்படாத, காயவைக்கப்பட்ட ஊறுகாய் எதையும் ஃபிரிட்ஜில் வைக்கக்கூடாது. 'காயக் காயத்தான் பூண்டின் சுவை கூடும்' என்பார்கள். அதனால் திறந்தவெளியில் பூண்டை வைக்கவேண்டும்.



சென்னை மார்க்கெட்டில் கைப்பற்றப்பட்ட கெட்டுப்போன மீன்



அதுபோல, வினிகர், மிளகாய் சாஸ் போன்ற உணவுக்கு சுவையூட்டும் பொருள்களைச் சாதாரண சூழலில் பாட்டில்களில் பாது காத்து வைப்பதே சிறந்தது. காய் மற்றும் கனிகளை கொண்டு செய்யப்படும் சாலடுகளுக்கு அலங்கரிக்கவும், சுவையூட்டவும் பயன்படும் எந்த வித க்ரீம்களையும் ஃபிரிட்ஜில் வைக்க கூடாது. 'இனிப்புத் தயிர்' எனப்படும் யோகர்ட் உள்ளிட்ட க்ரீம்கள், ஃபிரிட்ஜில் நீர்த்துப்போய் கெட்டுவிடும்.

முந்திரி, பாதாம், பிஸ்தா, வால்நட் போன்ற எந்த உலர்க்கொட்டைகளும் ஃபிரிட்ஜில் வைக்கத் தேவையில்லாத பொருட்கள். குளிர்ந்த ஈரப்பதம் இந்த வகை நட்ஸ்களின் உள்ளிருக்கும் எண்ணெய் பொருள்களைப் பாதித்து, கெட்டுவிடச் செய்துவிடும். மேலும் ஃபிரிட்ஜில் இருக்கும் வேறு

பொருள்களின் வாசத்தால் மாறிவிடும்.

ஆனால், இதையெல்லாம் ஓட்டல்களில் பெரும்பாலும் பிரிசரில் வைத்தே பயன்படுத்தும் சூழல் உள்ளது. இவையே இப்படி என்றால், இறைச்சியை பிரிட்ஜில் வைத்து பயன்படுத்துவது வேண்டவே வேண்டாம் என்பதுதான் உணவு நிபுணர்களின் ஆலோசனை.

கூடியவரை இறைச்சியை உடனடியாக வெட்டி வாங்கி சமையலுக்கு பயன்படுத்தினால்தான் அதில் உள்ள புரத சத்துக்கள் முழுமையாக கிடைக்கும். பெரும்பாலும், இறைச்சியை வெட்டிய ஓரிரு மணி நேரத்தில் சமைத்தாலே சத்து இழப்பிலிருந்தும் பாக்டீரியா பாதிப்பிலிருந்தும் தப்பலாம். ஆடு, மாடு, கோழி வளர்ப்பு பண்ணை முறையில் தாராளமாக கிடைப்பதால் இப்படி சேமித்து பயன்படுத்த வேண்டிய தேவையில்லை.

அவ்வாறு இல்லாமல் வார கணக்கில் இறைச்சியை ஃபிரிட்ஜில் வைத்து எடுத்து, பின்னர் அதனை சமைப்பதினால் அதிலுள்ள புரத சத்துக்கள் அழிந்துவிடுவதோடு மட்டுமல்லாது, அதன் தூய்மையும் பாதிக்கப்பட்டு, சமயங்களில் அது விஷ உணவாக மாறவும் வாய்ப்புண்டு என்று எச்சரிக்கிறார்கள் .

அதேப்போன்று நோய் தாக்கிய ஆடு,மாடு அல்லது

**உருளைக் கிழங்கு, வாழைப்பழம், அவகேடோ, ஆரஞ்சு, எலுமிச்சை, கீரை, மூலிகையை பிரிட்ஜில் வைக்கக் கூடாது. அதன் சத்துகள் கெட்டு தன்மை மாறிவிடும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். குறிப்பாக, உருளைக்கிழங்கிலிருந்து வெளியாகும் வாயு சூழலை கெடுத்துவிடும். வாழைப்பழம் அழுகி கெட்டு அருத்த பொருட்களையும் கெடுத்துவிடும்.**

**தேனை பிரிட்ஜில் குளிர்ந்த சூழலில் வைத்திருக்கும்போது அது தனது நிலையை மாற்றிக்கொண்டு, மணல்போலக் கடினமாகவும், சுவை மாறியும் போய்விடும். உபயோகிக்க முடியாததாகிவிடும்.**

கோழி போன்ற இறைச்சியில் புரதங்கள் மற்றும் வைட்டமின் சத்துக்கள் இழந்திருக்கலாம். அப்படியான ஒரு நிலையில், இத்தகைய இறைச்சியை ஃபிரிட்ஜில் வைத்து உண்பதினால் நோய்தான் வரும் என்கிறார்கள்.

அதேபோல், பிரிட்ஜில் வைத்த பொருட்களுக்கென்று ஒரு கெடு இருக்கிறது. - ஃபிரஷ் சிக்கனை தோல் நீக்காமல் 1 - 2 நாட்கள் வைத்திருக்கலாம். ஃபிரஷ் மட்டன், பீஃப் பை 1 -3 நாட்கள் வைக்கலாம். மீனை 1 - 2 நாட்கள் வைக்கலாம். எறா, நண்டுகளை இரண்டு நாட்கள் வைக்கலாம்.

கீரை மற்றும் இட்லி மாவு போன்றவற்றை வாரக் கணக்கில் பிரிட்ஜில் வைத்திருக்காமல் கூடிய வரை ஃபிரஷ்ஷாக பயன்படுத்துவதே நல்லது என்கின்றனர் உணவியல் வல்லுநர்கள்.

விலங்குகள் துடிக்க துடிக்க கொல்லப்படும்போதோ, ரத்தம் அதிகம் வெளியேறும் போதோ, அதன் உடலின் செல்களில் தற்காப்பாக டாக்சின் உருவாக்கப்படுகிறது. அது உடலில் உள்ள ரத்தத்தில் கலந்து ஓரளவு வெளியேறினாலும், பல விஷங்கள் அதன் கறிப்பகுதிகளில் தங்குகின்றன. இவை நியூரோ டாக்ஸின் எனப்படும் மூளையையும் நரம்பையும் பாதிக்கும் விஷங்கள். எனவே, விலங்கு இறைச்சி இயல்பிலேயே பயமுறுத்தும் சமாச்சாரம். இதில், பதப்படுத்துதல் வேறு வித்தியாசமான விஷம் என்கின்றனர்.

**2015** அக்டோபரில் குடல் புற்றுநோய் குறித்து 10 நாடுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட

**பொதுவாகவே கடல் மீன்களில்தான் ஃபார்மலின் என்னும் ரசாயணம் கலக்கப்படுகிறது.**

**உணவுப் பொருட்களில் ஃபார்மலினை பயன்படுத்தினால் புற்றுநோய் அபாயம் உண்டு என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது.**

**மேலும், கண்களில் எரிச்சல், தோலில் எரிச்சல், தொண்டை எரிச்சல், வயிற்றெரிச்சல், குமட்டல், வாந்தி, மயக்கம் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்'என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.**

**நீண்ட நாட்கள் பிரிட்ஜில் வைத்திருக்கும் மாமிசத்தில் பாக்டீரியா உருவாகிவிடும். அத்தகைய இறைச்சியை சரிவர சமைக்காமல் உண்டுவிட்டால், இரைப்பையில் நோய் தாக்கிவிடும். அது மட்டுமல்லாது, ஈரல், சிறு நீரகம் மற்றும் மூளையின் செயல்பாடு ஆகியவற்றின் செயல்பாட்டை பாதிக்கும் என்றும் எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். ஈரல் தொடர்பான நோய் மஞ்சள் காமாலையை ஏற்படுத்திவிடலாம்.**

விஞ்ஞானிகள் தங்களது ஆராய்சி முடிவை உலக சுகாதார அமைப்பிடம் தாக்கல் செய்தனர். அதில், குடல் புற்றுநோய்க்கு கடைகளில் விற்பனையாகும் பதப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சி, சாஸ்ஜேஜ் போன்றவற்றை உண்பதே முக்கிய காரணம் என சுட்டிக் காட்டப்பட்டது. இதனால், உடலுக்கு தீங்கு விளைவிக்கும் சிகரெட், மது ஆகியவற்றின் பட்டியலில் பதப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சியும் சேர்க்கப்பட்டது.

பதப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சி உடலுக்கு கேடு விளைவிக்க கூடியது மட்டுமல்ல, புற்றுநோய் வரும் வாய்ப்பையும் அதிகரிக்கிறது என உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது. அப்போது இந்த ஆய்வின் முடிவை இறைச்சி தொழில் நிறுவனங்கள் விமர்சித்தன.

அதையடுத்து, 'இறைச்சிகளால் உடலுக்கு கிடைக்கும் சத்துக்களையும் மறுக்க முடியாது' எனத் தெரிவித்த ஆராய்ச்சியாளர்கள், 'உடனடியாக அனைவரும் பதப்படுத்தப்பட்ட இறைச்சியை சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும் எனக் கூறவில்லை. அதற்குப் பதில் அதிகப்படியாக எடுத்துக் கொள்ளும் அத்தகைய உணவுகளின் அளவைக்



குறைத்துக் கொள்ளலாம்' என அறிவுரை கூறினர்.

அப்படி இருக்கையில்... சில மாதத்துக்கு முன்பு வெளிநாட்டில் வெட்டி நறுக்கப்பட்ட கோழி இறைச்சியை, குளிர் பதனக்கிடங்குகளில் வைத்து, கப்பல் அல்லது விமானம் மூலம் கொண்டுவந்து இங்கும் கிடங்கில் வைத்து பல நாட்கள் வைத்திருந்து விற்பது நிச்சயம் உணவை விஷமாக்கும் விஷயமே.

**பறவைகள், விலங்குகளின் குடலில் வாழக் கூடிய ஒரு வகை நல்ல பாக்டீரியா சால்மோனெல்லா. ஆனால், இது விலங்குகளின் உடலை விட்டு வெளியே வந்து விட்டால், மனிதனுக்கு தீங்கை விளைவிக்கும். இவை முட்டையின் மேல் ஓட்டிலும், உட்பகுதியில் இருக்கிறது. பிரிட்ஜில் முட்டையை வைத்தால் அந்த பாக்டீரியா அப்படியே இருக்கும், வளரும். வேகவைக்கும்போது அந்த பாக்டீரியா அழிந்துவிடும் என்றாலும், பிரிட்ஜில் வைத்து பயனில்லை என்கின்றனர்.**



**கெ**ட்டுப்போன இறைச்சிகளில் பாக்டீரியாக்களும் வைரஸ்களும் சில மணி நேரங்களில் பல கோடியாக பெருகிவிடுகின்றன. இவற்றில் கேம்பிலோபாக்டர், கிளாஸ்டிரிடியம் பெர்ஃபிரின்ஜென்ஸ், இ-கோலி எனும் பாக்டீரியாக்கள் அதிக வீரியமுள்ளவையாக கருதப்படுகின்றன. இவை அசைவ உணவை உடனே கெட்டுப்போகச் செய்துவிடும்.


இவற்றால் நம் இரைப்பை மற்றும் குடல் சீக்கிரத்தில் சீர்குலைத்துவிடும். அதனால்தான் நச்சு உணவைச் சாப்பிட்டவர்களுக்கு உடனடியாகக் குமட்டலும் வாந்தியும் வயிற்றுவலியும் ஏற்படும்.

அடுத்ததாக, இந்தக் கிருமிகளின் நச்சுக் கூறுகள் ரத்த ஓட்டத்தில் கலந்து உடலின் முழு நலனையும் பாதிக்கும்.

அப்போது, கடுமையான வயிற்றுப்போக்கு, காய்ச்சல், தலைவலி போன்றவை உண்டாகும். வயிற்றுப்போக்கு நீடிக்குமானால், உடலிலிருந்து நீர்ச் சத்து வெகுவாகக் குறைந்து, சிறுநீர் பிரியாமல் போய்விடும். இந்த நீரிழப்பைச் சரிசெய்யாவிட்டால், ரத்த அழுத்தம் குறைந்து, உயிருக்கு ஆபத்தைக் கொடுக்கும்.

அதுமட்டுமின்றி, பிரிட்ஜில் வைத்து வண்ணமும் திடமும் குறைந்துவிட்ட இறைச்சியில், வாடிக்கையாளர்களை கவர செயற்கை நிறமிகளை அதிகமாகச் சேர்ப்பதும் உணவை விஷமாக்கிவிடுகிறது. செயற்கை நிறமிகளில் இறைச்சியை ஊற வைக்கும் நேரம் அதிகமாகும்போது, நிறமிகளில் கலந்திருக்கும் ரசாயனங்கள் இறைச்சியை நஞ்சாகிவிடும்.

எனவே, வேளை கெட்ட வேளையில் அசைவ உணவுக்கு அலையக்கூடாது.



**அவகேடோ ஆரஞ்சு, எலுமிச்சை, மிளகாயையும் பரங்கிக்காய், சுரைக்காய் போன்ற குளிர்ச்சியை தரக்கூடிய காய் வகைகளையும் , எந்த எண்ணெய்யையும் பிரிட்ஜில் வைக்கக் கூடாது. சுவையும் சத்தும் கெட்டுவிடும்.**

அதிலும் இறைச்சியை ஃபிரெஷாக வாங்கி விரைவாக நம் கையால், நம் நாட்டு மசாலாக்களை தடவி சமைத்து உண்பதே சிறந்த பழக்கமாக இருக்கமுடியும்.

இறைச்சியை நாட்கணக்கில் சமைத்து ஃப்ரிட்ஜில் வைத்து, பின்னர் அடிக்கடி எடுத்து சூடு செய்து சாப்பிடுவதை நோய்களை நாமே காசு கொடுத்து அழைப்பதற்கு சமமாகும். எனவே உணவுகளை தினசரி சமைத்து உண்பதே ஆரோக்கியம் என்பதனை நினைவில் கொண்டு, பணத்தை கொடுத்து உடல் நலத்தை கெடுத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

**–நெல்லை பரிதி.**

# வலையில் வசீகரித்தது

**ஊர்க்காவலன் ™@oorkkavalaan**

என்னதான் கடிகாரம் உயர்ந்த இடத்தில் இருந்தாலும் அதுவும் 'நேரத்துக்கு' தகுந்தாற் போல் தன் முட்களை மாற்றி கொள்ளதான் செய்கிறது..!

---

**நெல்லை அண்ணாச்சி@drkvm**

குஜராத்தியை தாய்மொழியாக கொண்ட மோடியும் , அமீத்ஷாவும் ஹிந்தி படித்ததினால் தான் பெரிய பதவிக்கு வர முடிந்ததாம்..# ஓஹோ..இவ்வளவு சிக்கலுக்கும் ஹிந்தி தான் காரணமா...??

---

**கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar**

தட்டில் மிச்சமாகும் குழம்புக்கு ஒரு இட்லி வைத்து, அந்த இட்லிக்கு கொஞ்சம் அதிகமாக குழம்பு ஊற்றி அதற்கு இன்னும் ஒரு இட்லி வைத்து அதிகமாக ரெண்டு இட்லியை சாப்பிட வைப்பதில் அம்மாக்கள் கில்லாடிகள்!!

**மயக்குநன் @LAKSHMANAN_KL**

கொரோனா காலத்தில் பல படிப்பினைகள் கிடைத்துள்ளன! - வெங்கய்ய நாயுடு.#அதில் ஒண்ணு, 'ஆன்லைன்' படிப்பு... அப்படித்தானே ஜீ..?!

---

**கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar**

நம்ம Calll Missed Call ஆக்கிட்டு, நாலைந்து நாள் கழிச்சு நாம் கூப்பிட்ட காரணத்தையே மறந்த பிறகு அழைத்து 'கூப்பிட்டு இருந்த போல' என்று கேட்பதெல்லாம் அதீத கடுப்பேற்றும் செயல்!!!


---

**ஊர்க்காவலன் ™ @oorkkavalaan**

முதியோர் இல்லம் என்பது நிராகரிக்கப்பட்ட நூலகம்...சிறுவர் இல்லம் என்பது பராமரிக்கப்படாத பூங்கா...



twitter @ Simran
@SimranbaggaOffc
பிள்ளையார் சதுர்த்தி... சிம்ரன்



எமகாதகன் @Aaathithamizhan

18 வயதுக்கு கீழுள்ள மாணவர்கள் வாகனம் ஓட்டினால் 25 வயது வரை லைசென்ஸ் கிடையாது
#நல்லதா போச்சு நாம்ம 25 வயசு வர லைசென்ஸ் இல்லாமலே ஓட்டிக்கலாமில்லடா



மயக்குநன் @LAKSHMANAN_KL

சராசரியாக ஒரு இந்திய விவசாயக் குடும்பத்தின் கடன்சுமை ரூ.74,121!- தேசிய புள்ளியியல் அலுவலகம் தகவல். #வருமானத்தை ரெட்டிப்பாக்குறதா சொல்லிட்டு... கடனைத்தான் ரெட்டிப்பா ஆக்கியிருக்காங்க போல..?

balebalu @balebalu

சென்னை - புதுச்சேரி இ.சி.ஆர் சாலையில் போர் விமானம் தரையிறங்கும் வசதி: மத்திய போக்குவரத்து துறை அமைச்சர்
#அடுத்து அதுக்கும் ஒரு டோல் கேட் போட்டு வரி வசூல் ஆரம்பிச்சுடுவாங்களோ ?

நாகராஜசோழன். MA.MLA.@prabhu65290

வாட்ஸ்அப் ஸ்டேட்ஸ் வைக்கறது என்னமோ தினசரி கடமை மாதிரி செஞ்சிட்டு இருக்காங்களே... இதுல ஹைலைட் என்னன்னா ஸ்டேட்டஸ் வைக்காதவங்களை என்னமோ வேஸ்ட் பீஸ் மாதிரி பாக்கறது தான்...

இதயவன் @itz_idhayavan

சமையல் சார்ந்த நிகழ்ச்சிகளில் தொகுப்பாளர்..
வாயில வச்சதும் கரைஞ்சி ஓடுதுங்க..



# ஏன்டா நாங்க மட்டும் கடப்பாரை வச்சி குத்தவா செய்றோம்?!

செங்காந்தள் @kumarfaculty

மணியையும், நிமிடத்தையும், நொடியையும் மிச்சப்படுத்த நினைத்து வாழ்நாளைத் தொலைத்து விடுகிறார்கள் வேகமாக ஓட்டும் வாகன ஓட்டிகள்...!!!

கர்ணன் .. @karuva_official

'உங்கள் கவலைகளை விளம்பரப்படுத்தி பயனில்லை; ஏனெனில் அவற்றை யாரும் வாங்கப் போவதில்லை'

**தர்மஅடி தர்மலிங்கம் @Vkarthik_puthur**

தமிழக கவர்னர் நியமனத்தை காங்கிரஸ் எதிர்ப்பது ஏன்? - எச்.ராஜா.#ஏன்னா புதுச்சேரி சம்பவமெல்லாம் கண்ணு முன்னாடி வந்து போகுமா இல்லையா..??.

**செங்காந்தள் @kumarfaculty**

போனில் சார்ஜ் இல்லாத போதும்,போனை எடுத்து வர மறந்து விட்ட போதிலும் முக்கியமான போன் கால்கள் வரும் என நினைப்பது உலகப் பொதுமறை...!!!

**A.P.Perumal @pachaiperumal23**

குழந்தைகளுக்கு பள்ளியில் தரும் வீட்டுப் பாடங்களால் பட்டை தீட்டப்படுவது பெரும்பாலும் அம்மாக்களே.




**படப்பொட்டி @teakkadai1**

டிக்டாக், மோஜ், டக்காடக் போன்ற செயலிகள், இப்போது கலக்கிக் கொண்டிருக்கும் இன்ஸ்டா ரீல்ஸ் இதெல்லாம் 2கே கிட்ஸ்க்கு அதிலும் குறிப்பா பெண் பிள்ளைகளுக்கு என்ன விசயத்தை கடத்துதுன்னா... ஒரு பெண் என்றால் அழகு முக்கியம், அது இருந்தால் தான் நம்மால் எல்லோரையும் கவர முடியும் என்கிற தவறான தகவலை.

வேறு எந்த வழியிலும் உன்னால் சாதிக்க முடியாது. அழகு படுத்திக் கொள், அழகாய் உடுத்திக் கொள், அழகாய் ஆடப் பழகு அது போதும் உனக்கு. நீ வெற்றி பெறலாம் என்பதை மறைமுகமாய் கடத்து கிறது.

சென்ற மார்ச் முதல் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகள், பள்ளி, கல்லூரி இல்லாமல் வேறு அவுட்லெட்களும் இல்லாமல் இதில் மூழ்கிய பெண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இது எப்படிப்பட்ட விளைவுகளை இனி கொண்டு வரும் எனத் தெரியவில்லை.

கடந்த வாரம் நடந்த எக்கச்சக்க திருமணங்களில் முதலில் மண்டபம் புக் செய்தார்களோ இல்லையோ பியூட்டி பார்லரைத்தான் புக் செய்தார்கள். மணப்பெண் வீட்டார் மட்டுமல்ல,மணமகன் வீட்டாருக்கும் பிரத்யேக அலங்கார நிபுணர்கள்.



balebalu @balebalu

ஏண்ணே அவனை அடிக்கிறீங்க ? பின்ன என்ன? செவன் டிஜிட் சேலரி ன்னா வாரத்துல 7 நாளும் சம்பளம் தருவாங்களா ன்னு கேக்குறாம்ப்பா

PrabuG @HariprabuGuru

கண்ணு, மூக்கு, வாய்னு எதுக்கு பிரச்சனை வந்தாலும் கண்ணாடி, மாஸ்க்னு எல்லாத்தையும் தாங்குற காதுக்கு ஒரு பிரச்சனை வந்தா அதையும் அதேதான் தாங்கனும்... குடும்பத் தலைவன் மாதிரி

மயக்குநன் @LAKSHMANAN_KL

2021-ல் பெண்களுக்கு எதிரான குற்றம் 46 சதவீதம் அதிகரிப்பு! - தேசிய மகளிர் ஆணையம் தகவல். #கேஸ் விலை உயர்வுக்கு தாலிபான்களை காரணம் சொன்ன மாதிரி... இதுக்கு யாரைக் காரணம் சொல்லப் போறாங்கன்னு தெரியலியே..?!

கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar

4ஜியும், மோடிஜியும் ஒண்ணு தான்!! வேகமா சுத்தும்,ஆனா வேலை நடக்காது!!

தர்மஅடி தர்மலிங்கம் @Vkarthik_puthur

மத்திய அரசின் தேசிய பணமாக்குதல் திட்டம் மூலம் பொதுத்துறைக்கே மூடுவிழா வரும் - ப.சிதம்பரம்.#திறப்பு விழா தான் நடத்த முடியல அட்லீஸ்ட் அதுக்கு மூடுவிழாவது நடத்தலாம்னு முடிவு பண்ணிட்டாங்களோ என்னவோ..??

கிரீஸ் டப்பாவை எப்படி உதைச்ச..? @GreeseDabba2

பிரச்சினைகளை தீர்க்கிறேன் பேர்வழி என்று நாம் களத்தில் இறங்காத வரை, விளைவுகள் சாதரணமாக தான் இருக்கின்றன

சரவணன். @saravankavi

எல்லோரிடமும் நமது ஸ்டேட்டஸ் காட்ட முடிவது வாட்ஸ்அப்பில் மட்டும் தான்...!






**கா**தலுக்காக கட்டப்பட்ட அரண்மனையில் காமெடி பேய்கள் புகுந்து செய்யும் அட்டகாசம் தான் 'அனபெல் சேதுபதி.'

1948-ம் வருடம் ராஜா வீர சேதுபதி (விஜய் சேதுபதி) கட்டிய பிரமாண்ட மாளிகையின் அழகைக் கண்டு வியந்து போகிறான் குறுநில மன்னனான கதிரேசன் (ஜெகபதி பாபு). 8 நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட 8 கட்டிடக் கலைஞர்களை வைத்து கட்டப்பட்ட அந்த மாளிகை போன்றே தனக்கும் ஒரு அரண்மனை வேண்டும் என்று கதிரேசன் சொல்ல, 'இது ராஜா வீர சேதுபதியின் ஐடியாவில் உருவானது. முடிந்தால் நீங்களும் இது போல ஒரு பிளானுடன் வந்தால் கட்டித் தருகிறோம்' என்கிறார்கள்.

ஆனால் 'எனக்கு நகல் வேண்டாம், அசல் தான் வேண்டும்' என்று முடிவெடுக்கும் கதிரேசன், வீர சேதுபதியிடம் போய் அரண்மனையை விலை பேசுகிறான். 'தன் காதல் மனைவி அனபெல்லுக்காக கட்டிய இந்த கோட்டையை தர முடியாது' என்று சேதுபதி சொல்கிறார்.

அனபெல்- சேதுபதியை தீர்த்துக் கட்ட ஆட்களை அனுப்பி தோற்றுப் போன கதிரேசன், விஷம் வைத்து காதல் ஜோடியைக் கொல்கிறான். வீர சேதுபதியின் விசுவாசியான சமையல்காரன் சண்முகம் (யோகிபாபு) தன் முதலாளியைக் கொன்ற கதிரேசன் குடும்பத்துக்கே ஒட்டுமொத்தமாக விஷம் வைக்கிறான்.

அதன் பிறகு வீர சேதுபதி கட்டிய மாளிகையில் கதிரேசனின் வாரிசுகள் பல வருடங்களாக பேயாக அலைகிறார்கள். அந்த மாளிகைக்குள் வரும் யாராக இருந்தாலும் பவுர்ணமி நாளில் சமையல்காரன் யோகிபாபு கையால் விருந்து சாப்பிட்டால் பேயாக அலைவது நிச்சயம்.

கதிரேசன் பரம்பரையில் மிஞ்சி இருப்பது சுரேஷ்



மேனனும், அவரது இன்ஸ்பெக்டர் பேரனும் தான். அவர்கள், திருட்டு கேஸில் தன்னிடம் மாட்டும் டாப்சி, ராஜேந்திர பிரசாத், ராதிகா, சுனில் பேமிலியை அரண்மனையில் தங்க வைக்கிறார்கள். நான்கு பேரும் பவுர்ணமி வரை உயிர் பிழைத்தால் அந்த அரண்மனையை விற்று விடலாம் என்பது பிளான்.

ஆனால் டாப்சி அரண்மனைக்குள் கால் வைத்த உடனே, பேய்களுக்கு ஒரு பாசிட்டிவ் வைப்ரேஷன் ஏற்படுகிறது(?). மனிதர்களை தொட முடியாத அந்த பேய்களுக்கு, பொருட்களை மட்டும் தூக்கி எரியும் சக்தி இருக்கிறது. வீட்டுக்குள் நுழைந்த ராதிகா பேமிலியை பயமுறுத்தி ஆட்டம் காட்டுகின்றன.

அந்த அரண்மனையின் அழகில் மயங்கிப் போகும் டாப்சி, அங்குள்ள பொருட்களை திருடுவதிலேயே குறியாய் இருக்கிறார். ஒரு கட்டத்தில் அந்த பவுர்ணமி நாளும் வருகிறது. ராதிகா உடலுக்குள் ஆவியாய் புகுந்து விடும் யோகி பாபு சமைத்து வைக்க, அந்த உணவை சாப்பிட்ட டாப்சி மயங்கி விடுகிறார். ராதிகா உள்ளிட்ட மற்ற மூவரும் கோவிலுக்கு போனதால் எஸ்கேப் ஆகி விடுகின்றனர்.

திடீரென மயக்கத்தில் இருந்து எழும் டாப்சியின் கண்களுக்கு தன்னை சுற்றி நிற்கும் பேய்கள் தெரிய ஆரம்பிக்கிறது. 'இந்த பொண்ணும் செத்துப் போச்சா' என்று பேய்கள் நினைக்கும் போது தான், உயிரோடு இருக்கும் டாப்சியின் கண்களுக்கு பேய் தெரிவது விளங்குகிறது.

'என்னை ஞாபகம் இருக்கா...' எனக் கேட்கும் யோகிபாபு, 'போன ஜென்மத்துல இந்த அரண்மனைக்கு சொந்தமான அனபெல் நீங்கதான்' என்று டாப்சியிடம் பிளாஷ்பேக் ஓபன் செய்கிறார்.

பிளாஷ்பேக்கில் அனபெல் - சேதுபதியின் காதல் கதை நீள, கடைசியில் அந்த அரண்மனை யார் கைக்கு போனது என்பதை

சொல்கிறது மீதிக்கதை.

இரண்டாம் பாதியில் என்ட்ரி கொடுத்திருக்கும் விஜய் சேதுபதி சற்றே நீளமான கவுரவ வேடத்தில் வருகிறார். லாபம், துக்ளக் தர்பார் வரிசையில் இதிலும் அலட்டிக் கொள்ளாமல் நடித்து ஏமாற்றியிருக்கிறார்.

மார்டன் திருடி, லண்டனில் இருந்து வந்த வெள்ளைக்கார பெண் அனபெல் என ரெண்டு வேடத்திலும் தோற்றத்தில் பொருந்தி நடித்திருக்கிறார் டாப்சி.

பொறாமைப் பிடித்த மன்னனாக கோட் சூட் போட்டு வரும் ஜெகபதி பாபு நடிப்பு ஓகே. ஆனால் காமெடி என்ற பெயரில் பேய்கள் செய்யும் கலாட்டா கடுப்பைக் கிளப்புகிறது.

அதிலும் ராஜேந்திர பிரசாத், ராதிகா, தேவதர்ஷினி, சுப்பு பஞ்சு, ஜார்ஜ் மரியான், சுரேகா வாணி, சேத்தன் என பல சீனியர் நடிகர்கள் இருந்தும் காட்சிகள் அமெச்சூர்தனமாக இருக்கிறது.

சமையல்காரராக வரும் யோகி பாபுவின் கவுண்ட்டர்கள் ஒரு சில இடங்களில் சிரிப்பை வரவழைக்கிறது.

கிருஷ்ண கிஷோரின் இசையில் பாடல்கள் எதுவும் மனதில் ஒட்டவில்லை. பின்னணி இசை பரவாயில்லை

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| விஜய்சேதுபதி | ● | ● | ◐ | ○ | ○ |
| டாப்சி | ● | ● | ◐ | ○ | ○ |
| கதை | ● | ● | ◐ | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ◐ | ○ | ○ |
| இயக்கம் | ● | ● | ◐ | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ● | ○ | ○ |
| இசை | ● | ● | ◐ | ○ | ○ |
| மொத்தத்தில் | ★ | ★ | ½★ | ☆ | ☆ |

ரகம். அரண்மனையின் கலை வடிவமைப்பை, அதனை கண் குளிர பல கோணங்களில் காட்டியிருக்கும் கவுதம் ஜார்ஜின் ஒளிப்பதிவு அருமை.

இயக்குனர் சுந்தர்ராஜனின் மகன் தீபக் தன் அறிமுக படத்தில் ... கதைக்கான நல்ல அடித்தளமும், நட்சத்திரப் பட்டாளமும் கிடைத்தும் 'அடுத்து என்ன நடக்கும் என்பதை குழந்தை கூட சொல்லும் அளவுக்கு வீக்கான ஸ்க்ரீன் ப்ளே காரணமாக மேக்கிங்கில்' கோட்டை விட்டிருக்கிறார்.

விஜய் சேதுபதி - டாப்சி பிளாஷ்பேக் லவ் போர்ஷனில் செலுத்திய கவனத்தை, ஆடை, அலங்காரம், கலை வடிவமைப்பில் காட்டிய நேர்த்தியை, திரைக்கதையிலும், காமெடியிலும் காட்டியிருந்தால் படத்தை ரசித்திருக்கலாம்.

# ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார்



## நினைவு நாவல் போட்டி

## ரூ.2½ லட்சம் பரிசுடன்

- என்றென்றும் வாசகர்கள், முகவர்கள் மற்றும் எழுத்தாளர்களிடம் நம்பர் 1 இடத்தைப் பிடித்து இருக்கும் கண்மணி, மீண்டும் ஒரு நாவல் போட்டியை அறிவிப்பதில் பெருமை அடைகிறது.
- புதுபுது எழுத்தாளர்களை உருவாக்கும் உத்வேகத்துடன் தன் கடைசி காலம் வரை வாழ்ந்த தேவி ஆசிரியர் ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார் நினைவாக நடத்தும் மெகா நாவல் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ள படைப்பாளர்களை வரவேற்கிறது கண்மணி.
- நிகழ்கால சமூகச் சூழலில்... கூட்டுக்குடும்பத்தின் குதூகலம், உறவுகளின் உன்னதம், பெண்மையை போற்றும், பாரம்பரியத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் விதத்தில் குடும்ப நாவல்கள், கிரைம், காதல், திகில், சரித்திரம், சஸ்பென்ஸ்... என எந்த வகை நாவல்களையும் போட்டிக்கு அனுப்பலாம்.
- நாவலில் 12,000-க்கு குறையாமல் வார்த்தைகள் இடம் பெற வேண்டும். காகிதத்தின் ஒரு பக்கம் மட்டுமே எழுத்துகளை டைப் செய்ய வேண்டும்.

| முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு | ஆறுதல் பரிசு |
|---|---|---|---|
| ரூ. 1 லட்சம் | ரூ. 50 ஆயிரம் | ரூ. 25 ஆயிரம் | 5 பேருக்கு தலா ரூ. 15 ஆயிரம் |

- ★ எதிலும் வெளிவராததாகவும், வேறு எந்த பத்திரிகைக்கும் அனுப்பப்படாததாகவும், சொந்த கற்பனையாகவும், புதிய படைப்பாகவும் இருக்க வேண்டும். அதற்கான உறுதிமொழி கடிதமும் இணைத்து அனுப்ப வேண்டும்.
- ★ பரிசுக்குரிய நாவல் ஒரே தரத்தில் பல இருந்தால் பரிசுகள் பகிர்ந்து அளிக்கப்படும்.
- ★ பரிசு பெற்ற நாவல்கள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நாவல்களின் விபரம் கண்மணி, பெண்மணி இதழ்களில் வெளியிடப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு நாவல் பிரசுரிக்கப்படும்.
- ★ தேர்வு பெறாத கதைகள் திருப்பி அனுப்பப்படாது.
- ★ குறுநாவல்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படாது.
- ★ நாவல் தொடர்பான தொலைபேசி, கடித தொடர்புகளுக்கு நிச்சயம் அனுமதியில்லை.
- ★ நாவல் அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 11-10-2021

நாவல் அனுப்ப வேண்டிய முகவரி:

# நாவல் போட்டி

தேவியின் கண்மணி

மாலைமுரசு பில்டிங், 246, அண்ணா சாலை, சென்னை - 600 006.

# போதையில் தள்ளாடும் திரையுலகம்!

கன்னட படவுலகில் போதைப்பொருள் பயன்படுத்தியதாக கன்னட நடிகை ராகினி, சஞ்சனா கல்ராணி, சோனியா அகர்வால் என பலரும் கைதாகினர். அவர்களிடம் விசாரணை இன்னும் முடிந்த பாடில்லை.

இந்நிலையில், சாண்டல்வுட்டை தொடர்ந்து டோலிவுட்டும் போதையின் பிடியில் சிக்கிக் கொண்டு திண்டாடுகிறது. தெலுங்கு படவுலகில் 12 பெரும் புள்ளிகள் போதைப் பொருள் விவகாரத்தில் சிக்கியிருப்பதாகவும், அவர்கள் அனைவர்க்கும் சம்மன் அனுப்பிய நிலையில் ஒவ்வொருவராக நேரில் ஆஜராகி வருகின்றனர்.

அந்த வகையில் சமீபத்தில் பாகுபலி வில்லன் ராணா டகுபதி, நடிகர் ரவி தேஜா இருவரையும் அமலாக்கத்துறையினர் கேள்விகளால் துளைத்தெடுத்துள்ளனர்.

முன்னதாக நடிகை சார்மியிடம் 8 மணி நேரம் விசாரணை நடத்திய அதிகாரிகள் குறுகிய காலத்தில் அவர் ஈட்டிய சொத்துக்கள் பற்றி கேட்டு வறுத்தெடுத்துள்ளனர். நடிகை ரகுல் பரீத், இயக்குனர் புரி ஜெகநாத் போன்றவர்களும் மாட்டியுள்ளனர்.





மினி தொடர்

# இறுக்கம், இறக்கம்!

**ஆப்கானிஸ்தான் பூர்வீகக் குடிகள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் முரட்டுத்தன்மை கொண்டவர்கள். அவர்களை நேருக்கு நேர் போரிட்டு வெல்வது எளிதல்ல. ஆங்கிலேயர்கள் 3 தடவை ஆப்கானிஸ்தானியர்களுடன் போரிட்டனர். இந்த 3 போரிலும் ஆங்கிலேயர்கள் தோல்வி அடைந்தனர் என்பது வரலாறு ஆகும்.**



# ஆப்கான் தலிபான் -4




பஞ்சாபைச் சேர்ந்த மாமன்னர் ரஞ்சித் சிங், ஆப்கானிஸ்தானை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். ஆப்கானிஸ்தானில் சீக்கிய மதம் பரவுவதற்கு இதுவே மூலகாரணம். இப்போதும் ஆப்கானிஸ்தானில் சீக்கியர்கள், சிறுபான்மையினராக உள்ளனர்.

பஞ்சாப் சிங்கம் என்று சரித்திரப் பேராசிரியர்களால் பாராட்டப்படும் ரஞ்சித் சிங் பல்வேறு சீர்திருத்தங்களை அமலாக்கினால் சீக்கியர்கள், இந்துக்கள் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என அனைத்து தரப்பினரையும் பாரபட்சமின்றி நடத்தியதால்தான் ரஞ்சித் சிங்கின் பெருமையை பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டனர்.

ரஞ்சித் சிங்கின் ராணுவத்திலேயே மத ரீதியான வேற்றுமைக்கு இடம் கிடையாது என்பது சிறப்பு அம்சமாகும். ரஞ்சித் சிங் 1801-ம் ஆண்டு, ஏப்ரல் 12-ம் தேதியில் இருந்து, 1839-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதி வரை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தார்.

அவரை தங்களது சொந்த மன்னராக எல்லா சமயத்தினரும் நினைத்ததால்தான் 38 ஆண்டுகளுக்கும் மேலாக அவரால் செம்மையான முறையில் நிர்வாகத்தை நடத்த முடிந்தது. ரஞ்சித் சிங்கின் மறைவுக்குப் பிறகு அவரது மகன் காரக் சிங் பதவிக்கு வந்தார். எனினும் சீக்கியர்களின் ஆதிக்கம் இதன் பிறகு படிப்படியாக குறையத் தொடங்கிவிட்டது.

பஞ்சாப் மக்களுக்கும் ஆப்கானிஸ்தானியர்களுக்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.


சண்டை போட
சளைக்காதவர்கள் என்று
ஆப்கானிஸ்தானியர்களையும்
கூறலாம். சீக்கியர்களையும்
சொல்லலாம். இதைப்போல
மதக் கட்டுப்பாடுகளிலும்
இரு பிரிவினரும் பற்றுறுதி
கொண்டவர்கள். இறுக்கமாக
நடந்து கொள்பவர்கள்.
கொள்கை சார்ந்த
இளக்கத்துக்கு இடம்
கொடுக்காதவர்கள்.

**ஆ**ப்கானிஸ்தானுக்கு
சுமார் 5 ஆயிரம் ஆண்டு
கால வரலாறு உள்ளது என்ற
போதிலும், பெரும்பாலான
முஸ்லிம் மன்னர்கள்
கெடுபிடிகளையே
அரங்கேற்றினார்கள்.
பெண்கள் சுதந்திரம் என்பது
கானல் நீராகவே இருந்து
வந்தது. மாமன்னர்கள்
அமானுல்லா கானும் முகமது
ஜாகிர்ஷாவும் ஓரளவுக்கு
இளக்கம் காட்டினார்கள்.
பெண்களுக்கு சில
உரிமைகளை அளித்தார்கள்.
ஆப்கானிஸ்தானின் கடைசி

**ஆப்கானிஸ்தானில் அரசியல் மாற்றம் ஏற்பட்ட பிறகும் தமிழ்நாடு மற்றும் கேரளா வழியாக வெளிநாடுகளுக்கு குறிப்பாக ஆப்பிரிக்க தேசங்களுக்கு ஹெராயின் உள்ளிட்ட போதைப்பொருட்களை கடத்துவது சற்றும் குறையவில்லை.**

**ஆப்கானிஸ்தானில் இருந்து சாலை மார்க்கமாக பாகிஸ்தானுக்கு போதைப்பொருளை கடத்துவது முதல் நிலையாகும். அங்கிருந்து கடல் மார்க்கமாக இலங்கை வழியாக தமிழ்நாட்டில் உள்ள தூத்துக்குடி, வேதாரண்யம், கோடிக்கரை, மண்டபம் ஆகிய ஊர்களுக்கும் கேரளாவில் உள்ள விழிஞ்ஞம், கொச்சி துறைமுகங்களுக்கும் போதைப்பொருள் கடத்தப்படுவது இரண்டாம் நிலையாகும்.**

**இங்கிருந்து ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றுக்கு போதைப்பொருட்கள் கடத்தப்படுவது இறுதி நிலையாகும். போதைப்பொருள் கடத்தலுடன் ஆயுதக் கடத்தலும் இரண்டறக் கலந்துள்ளது. ஆண்டுதோறும் இதில் பல்லாயிரம் கோடி ரூபாய் புழக்கம் நடைபெறுகிறது என்பதால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அவற்றையும் மீறி சட்டவிரோத செயல்பாடுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.**



முகமது ஜாகிர்ஷா

மன்னர் என்று கருதப்படும் முகமது ஜாகிர்ஷாவின் ஆட்சிக் காலத்தில்தான் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையை மதவெறியர்கள் மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்த மனோபாவத்தில் இருந்து ஆப்கானிஸ்தான் இன்னும் முழுமையாக விடுபடவில்லை என்பதையே அண்மைக்கால நிகழ்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

பொது உடைமைவாதிகளில் கம்யூனிஸ்ட்கள், மார்க்சிஸ்ட்கள், லெனினிஸ்ட்கள், மாவோயிஸ்ட்கள் என பல பிரிவுகள் உள்ளன. பிரதான கொள்கை ஒன்றுதான் என்றபோதிலும், மற்ற பிரச்சினைகளில் எழுந்த மாறுபாடுகள் அடிப்படையில் வெவ்வேறு பிரிவுகள் சமகாலத்தில் இயங்குவதை தவிர்க்க முடியவில்லை.

முஜாகிதீன்கள், அல்கொய்தாக்கள், தலிபான்கள் என இஸ்லாமிய தீவிரவாதிகள் மீது முத்திரைகள் குத்தப்பட்டுள்ள போதிலும், அவர்களது ஆணிவேர் பயங்கரவாதம்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**ஆ**ப்கானிஸ்தான், பூகோள ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ளது.

**ஆப்கானிஸ்தானில் விளைகின்ற மாதுளைகளுக்கு உலகம் முழுவதும் கிராக்கி உள்ளது. குறிப்பாக காந்தகார் மாகாணத்தில் உள்ள ஆர்கன்தாப் மாவட்டத்தில் ரத்தச்சிவப்பு நிறத்தில் திரட்சியாக மிளிரும் மாதுளைகள் பெருமளவு விளைகின்றன. இவை பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.**

**ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற யுத்தம், மாதுளை வர்த்தகத்தையும் நிலைகுலைய வைத்துவிட்டது. போரின்மை நிரந்தரமானால்தான் வேளாண்மையும் விவசாய வர்த்தகமும் செழிக்கும் என்று காந்தகார்வாசிகள் தெரிவித்துள்ளனர்.**

இதனால்தான் ரஷ்யாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு ஆப்கானிஸ்தான் மீது ஆதிக்கம் செலுத்தின. இந்த பனிப்போரில் சிக்கி ஆப்கானிஸ்தான் இழந்ததுதான் அதிகமே தவிர, பெற்றது குறைவுதான்.

ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவின் ஆதிக்கம் மேலோங்கி இருந்த காலத்தில் இதற்கு எதிராக முஜாகிதீன்களுக்கு அமெரிக்கா எல்லா உதவிகளையும் செய்து வந்தது. இதில் ஆயுத சப்ளையும் பொருள் உதவியும் அடங்கும்.

ரஷ்யாவின் ஆதிக்கத்தை ஆப்கானிஸ்தானில் இருந்து அகற்ற வேண்டும் என்பதற்காக 1970-களின் கடைசிப் பகுதியில் இருந்து 1980-களின் இறுதிப் பகுதி வரை முஜாகிதீன்களை அமெரிக்கா கொம்பு சீவி வளர்த்துவிட்டுக் கொண்டே இருந்தது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கம் தளரத் தொடங்கிய வேளையில், முஜாகிதீன்கள் இடையே கருத்து மோதல் வலுக்கத் தொடங்கியது. முல்லா முகமது உமர் தலைமையில் தலிபான் இயக்கம் உருவானது. 1990-களில்தான் தலிபான்களின் நடவடிக்கைகள் வேகம் எடுக்கத் தொடங்கின. தலிபான்களை ஊக்குவித்த அமெரிக்காவுக்கு தலிபான்களாலேயே ஆபத்து ஏற்பட்டது என்பதுதான் சரித்திர முரண்பாடாகும். ஆனால் வரலாற்றில் இத்தகைய நிகழ்வுகள் சகஜமானவையே.

**-காதவம்புல்லுநர்**

**(தொடரும்)**



# காதல் கதவுகள்!



**பெரும் சப்தத்துடன் ரயில் கடந்து சென்றது. ரயில்வே கேட்டின் இருபுறமும் காத்துக் கிடந்தவர்கள் கொஞ்சமாய் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள்.**

–ஆதலையூர் சூரியகுமார்

அரவிந்தன் வண்டியை உதைத்து ஸ்டார்ட் செய்து கொண்டு புறப்படுவதற்கு தயாரான போது பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் இவனை ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

கேட் கீப்பர் வந்து கேட்டைத் திறப்பதற்கான அறிகுறியையே காணோம்.

சாவியைத் திருப்பி வண்டியை ஆப் செய்து விட்டு ஹெல்மெட்டைக் கழட்டினான். முகம் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. கைகளாலேயே துடைத்து விட்டு அருகில் இருந்தவர்களிடம் கேட்டான்.

''சார் அதான் ட்ரெய்ன் போயிடுச்சே அப்புறம் ஏன் இன்னும் கேட் திறக்கல!''

அவர் அரவிந்தனை ஏற இறங்கப் பார்த்தார். அப்புறம் வண்டியின் ரிஜிஸ்டர் நம்பரைப் பார்த்தார். அது உள்ளூர் வாகனம் என்று சொன்னது.

ஏன் தம்பி நீங்க ஊருக்குப் புதுசா?

அரவிந்தனுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. இருந்தாலும் சமாளித்தான்.

'' நான் இந்த ஊர்தான் சார். ஆனா சின்னப்புள்ளையிலேயே சென்னைக்கு போயிட்டேன். எப்பவாச்சும் தான் ஊர் பக்கம் வருவேன்.''

'' அதான் உங்களுக்கு தெரியல''

அவர் கொஞ்சம் வெறுமையாக புன்னகைத்தார்.

''என்ன சார் சிரிக்கிறீங்க? '' அரவிந்தன் கேட்டான்.

''தம்பி இந்த கேட் உலகபேமஸ். இந்த சென்னையில இருந்தேன்னு சொல்றீங்க.. இந்த கேட்டைப் பற்றி கேள்விப்பட்டதே கிடையாதா?''

''என்னப்பா இவர்? இந்த கேட்டை ஏதோ ஏழு அதிசயங்கள்ல ஒன்று மாதிரி பில்டப் கொடுக்கறாரு?''

- மனசுக்குள் நினைத்துக் கொண்டான் அரவிந்தன்.

''ஆமா தம்பி இது ஏழு அதிசயங்கள்ல ஒன்றுதான். அப்படிகூட சொல்லக்கூடாது. உலகத்தில் இருக்கற ஏழு அதிசயங்கள்ல இது தான் ஒண்ணாவது அதிசயம்.''

- அவர் வெறுப்பாய் பேசினார். இருந்தாலும் அவர் அப்படி சொன்ன போது சிரிப்பை அடக்க முடியாமல் வாய்விட்டு சிரித்தான்

அரவிந்தன்.

''என்ன தம்பி சிரிப்பா இருக்கா''?

''ஸாரி சார் கோச்சுக்காதீங்க... நீங்க பேசறதே சிரிப்பு வர்ற மாதிரிதான் பேசறீங்க...''

''என்ன தம்பி இதுக்குப் போயி உடனே சாரி கேட்கறீங்க... நான் உண்மையிலேயே தமாசாதான் சொன்னேன்.''

- சொல்லிவிட்டு அவரும் சிரித்தார்.

''இப்ப சொன்னது ஜோக் மட்டும் இல்ல தம்பி. உண்மையிலேயே இந்த ரயில்வே கேட் பத்தி ஒரு பழமொழி இருக்கு தெரியுமா?''

''அப்படியா? நான் கேள்விப்பட்டதே இல்லையே சார்?''

''திண்டுக்கல்லுக்கு பூட்டு, நீடாமங்கலத்துக்கு கேட்டு'' அப்படீங்கறது இந்த டெல்டா மாவட்டம் முழுக்க பேமசான பழமொழி. என்னதான் நீங்க இந்த ஊர்ல பொறந்து இருந்தாலும், இப்ப நீங்க ஊருக்குப் புதுசுதான். அதனால தான் இந்த கேட்டோட புகழ் உங்களுக்குத் தெரியல...''

''ஓ! அப்படீன்னா, தமிழ் நாட்டிலயே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்துலதான் நான் நின்னுகிட்டு இருக்கேனா?''

- அரவிந்தன் கிண்டலாக சொல்லிவிட்டுச் சிரித்தான்.

''இல்ல தம்பி... தப்பு, இது தமிழ் நாட்டு அளவுல பேமஸானது இல்ல. உலகப் புகழ் பெற்ற கேட், நீங்க வேண்ணா கூகுள்ல நீ டாமங்கலம் கேட்னு பாருங்களேன், கேட் தெரியாது, பெரிய டிராபிக் தான் தெரியும். அவ்வளவு ஃபேமஸ்''

அவர் கிண்டலாகத்தான் சிரித்தார். ஆனால் அதன் ஓரத்தில் கொஞ்சம் வலி இருப்பதை அரவிந்தன் உணர்ந்தான்.

''சார், இந்தப் பக்கம் இன்னொரு ட்ரெய்ன் போயிடுச்சி சார். கேட் திறந்திடுவாங்க இல்ல?''

''ஏன் அவசரப்படறீங்க தம்பி? பொறுமையா இருங்க. புத்தருக்கு போதி மரம் ஞானத்தைக் கற்றுக் கொடுத்த மாதிரி நமக்கு இந்த கேட் பொறுமையைக் கத்துக் கொடுக்குது. இந்த கேட்ல மட்டும் நீங்க நின்னு பழகிட்டீங்கன்னா, வாழ்க்கையில் உங்க முன்னேற்றத்திற்கு யாராலயும் கேட் போட முடியாது. இதைவிட ஒரு பெரிய கேட் உங்க வாழ்க்கையில யாரும் போட முடியாது.''

ஒரு வேளை டிரிங்ஸ் பண்ணியிருப்பாரோ, கொஞ்சம் ஓரக் கண்ணால் பார்த்தான்.. அரவிந்தன்.

-        அப்படி எதுவும் தெரியவில்லை.

''தம்பி அப்படியே உங்க மொபைல்ல மணி எத்தனை ஆகுதுன்னு பாருங்க?''

''சார் கரெக்டா பத்து மணி சார்! ''அரவிந்தன் சொன்னான்.

''அப்ப வண்டிய ஸ்டாண்ட் போட்டுட்டு அப்படி ஓரமா நிழல்ல நிக்கலாம் வாங்க தம்பி''

ஏன் சார்?

''இப்ப இன்னொரு கூட்ஸ் வண்டி கிராஸ் ஆகணும் தம்பி... அப்ப தான் கேட் திறப்பாங்க''

''என்ன சார் ஒரே நேரத்துல மூணு ட்ரெய்னா?''

''ஆமா தம்பி! இது தான், இது தான் நீடாமங்கலம் கேட்டோட பெருமை. ஒரு தடவை கேட் போட்டாங்கன்னா கொறஞ்சது அரை மணி நேரம் ஆகும்.''

அப்போது தான் கேட் அருகில் நின்று கொண்டு ஏதோ சொல்ல வந்த அவளைக் கவனித்தான்.

பளிச்சிடுகிற வெண்மை நிறத்தில் லெகின்சும், டைட் பிட்டிங் டாப்சும் அணிந்திருந்தாள்.

மேட்சிங்காக நீல நிறத்தில் வளையல்கள் அணிந்திருந்தாள்.

முகத்தில் கொஞ்சமாக பூசியிருந்த மஞ்சள் காலை வெயில் பட்டு மின்னியது.  சூடியிருந்த பூவில் இருந்து வாசம் மிதந்து கொண்டு வந்தது.

''சுய சார்பு என்றால் என்ன அமைச்சரே?''

''அந்தப்புர சாவியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது போல தான் மன்னா!''

-சீர்காழி ஆர்.சீதாராமன்.



''எல்லோரும் கவனிங்க''

கேட் திறப்பதற்காக காத்திருந்தவர்களில் அவள் குரல் கொடுத்தாள்.

''டிரெயின் வர இன்னும் அரை மணி நேரம் ஆகும். டூவீலர்ல மன்னார்குடிக்கு போறவங்க அஞ்சு கிலோ மீட்டர் கிழக்கே போனா ஒரு சின்ன மண் ரோடு வரும். அந்த மண் ரோட்ல ரெண்டு கிலோ மீட்டர் தூரம் போனா, மன்னார்குடி மெயின் ரோடு வந்திடும். இங்க காத்திருக்காதீங்க.... அப்புறம் நெல் மூட்டை ஏத்திகிட்டு, தஞ்சாவூர் டி.என்.சி.எஸ்.சி. சென்டருக்கு போறதுக்கு காத்துகிட்டு இருக்கிறவங்க நேரா திருவாரூர் போயிடுங்க. அது தான் நல்லது. மழை வர்ற மாதிரி இருக்கு, இங்கேயே காத்துகிட்டு நின்னா அப்புறம் மழையில நெல் நனைஞ்சிடும். நனைஞ்சிப் போன நெல்லை சென்டர்ல எடுக்க மாட்டாங்க. காய வச்சி தான் விக்கணும். காய வைக்கிறதுக்கு இடம் கிடைக்காது பாத்துக்கோங்க.''

அவள் நீண்ட உரை நிகழ்த்தினாள்.

''டூவீலர்ல வந்திருக்கறவங்க யாராச்சும் அவசரமா ஹாஸ்பிடல் போகணும்னா அப்படியே வண்டியை ஓரமா நிறுத்திட்டு நடந்து வாங்க. கேட்டுக்கு அந்தப் பக்கம் போய் ஆட்டோ புடிச்சிப் போயிடுங்க''

பேசி முடித்துவிட்டு தன் கைகளில் இருந்த கூல்ட்ரிங்ஸ் பெட்டியைத்திறந்து அங்கு காத்திருந்தவர்களிடம் கொடுத்துக் கொண்டே வந்தாள்.

அரவிந்தனின் அருகில் வந்த போது அவள் கழுத்தில் தொங்கிய அடையாள அட்டையைக் கவனித்தான்.

அதைப்புரிந்து கொண்டு அவளே தன்னை அரவிந்தனிடம் அறிமுகம்படுத்திக் கொண்டாள்.

''வணக்கம் சார், நான் மாலதி, இங்க மன்னை காலேஜ்ல படிக்கிறேன். என்.எஸ்.எஸ். ஸ்டூடண்ட். இது என்னோட தினசரி வேலை. வெயில் நூறு டிகிரியைத் தாண்டி அடிக்குது சார். கூல் டிரிங்ஸ்சை எடுத்துக்கங்க...'' அவன் கைகளில் திணித்துவிட்டு போனாள்.

கொஞ்ச தூரம் போனவள், திரும்பவும் இவனை நோக்கி வந்தாள்.

''சார்.. உங்க வண்டியோட ஸ்டாண்டை எடுத்து விடுங்க சார். டிரெய்ன் கிராஸ் ஆன உடனே அவசரத்துல ஸ்டாண்ட் எடுக்காம

வண்டியை எடுத்துடுறீங்க. தண்டவாளத்துல சிக்கிடுது சார். இப்படி இங்க நிறைய விபத்துக்கள் நடந்திருக்கு சார்...''

ஒரு சின்ன புன்னகையோடு சொல்லி விட்டு வேகமாக நகர்ந்து விட்டாள் மாலதி.

திடீரென்று எங்கேயோ புறப்பட்ட சூறாவளி ஒன்று வேகமாக வந்து தன்னை தென்றலாக தழுவி விட்டுச் செல்வது போல் உணர்ந்தான் அரவிந்தன். கிராமமும் இல்லாமல் நகரமும் இல்லாமல் ஒரு புதுவிதமான வாசனையை அவன் தன் மேனி எங்கும் உணர்ந்தான். அவன் கைகளில் இருந்த குளிர் பானம் சூடாகி க்கொண்டிருந்தது.

நீகடந்து சென்ற போதே என்னுள்
குளிரடிக்கத் தொடங்கி விட்டதடி! குளிர்பானம்
எதற்குகூடுதலாக?

அவன் மனதில் அவசரமாக கவிதைப் படித்து சிரித்தான்.

அவன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டே அந்த தருணத்தில் மாலதி அவனை திரும்பிப் பார்த்தாள்.

தன்னைப் பற்றித்தான் ஏதோ நினைத்துச் சிரிக்கிறான் என்று அவளுக்கு உள்ளே இருந்து ஒரு குரல் ஒலித்தது. அவள் உதடுகளும் புன்னகையைச் சிந்தின.

மாலதி அங்கு நின்றிருந்த பேருந்துக்குள் அட்டைப் பெட்டியுடன் ஏறினாள்.

பேருந்தில் ஏறியவுடனே மாலதிக்கு சிலர் வணக்கம் சொன்னார்கள்.

''வாம்மா... மாலதி ட்ரெய்ன் எப்ப வரும்?''

''இன்னும் அரை மணி நேரம் ஆகும். நீ அரசாங்க ஆஸ்பத்திரிக்குத்தானே ஆத்தா போறே...? சீக்கிரமா இறங்கி நடந்து போயிடு... அப்புறம் டாக்டர் போயிடுவாரு..''

''நீடாமங்கலம் இறங்கறவங்க இங்கேயே இறங்கிக்குங்க... டிரெய்ன் வர லேட் ஆகும். அதுக்கப்புறம் கேட் திறக்கவும் லேட் ஆகும். அவ்வளவு நேரம் பஸ்லேயே வீணா உட்கார்ந்திருக்க வேண்டாம்.''

''சாலியமங்கலம், ஆதனூர் மண்டபம் போறவங்க இறங்கி நடந்து போய் கேட்டைக் கிராஸ் பண்ணி நில்லுங்க, அந்தப் பக்கம் டவுன் பஸ் வரும் ஏறிப் போயிடுங்க. புன்னைநல்லூர் மாரியம்மன்

கோயிலுக்கு போறவங்க கூட இறங்கி அந்தப் பக்கம் போய் தஞ்சாவூர் டவுன் பஸ்ல ஏறிப் போய்டுங்க.''

''அஞ்சலையம்மாள் காலேஜ், கோவில் வெண்ணி வரைக்கும் போணும்னா கூட கேட்டுக்கு அந்தப் பக்கம் ஷேர் ஆட்டோ நிக்குது போகலாம்.''

ஆசுவாசமாக சொல்லி முடித்தாள்.

தண்ணீர்; பாட்டிலைத் திறந்து இரண்டு மடக்கு தண்ணீர்; குடித்துக் கொண்டாள்.

''ஏம்மா, யாரும்மா நீ இப்படி பஸ்ல ஏறி கூட்டத்தையெல்லாம் இறக்கி விடற? ஏன்ன பிரச்சனை? ஏதாவது ஆக்ஸிடெண்டா?''

பேருந்தில் கடைசி இருக்கையில் உட்கார்ந்து கொண்டே சப்தமாக வாய்ஸ் கொடுத்தார் ஒரு பெரியவர்.

''ஐயா, வணக்கம்! நீங்க இந்த ரூட்ல புதுசா வர்றீங்கன்னு நினைக்கிறேன்..''

''அட ஆமாம்மா, நான் வெளியூர்க்காரன் தான்''

- அவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

''ஐயா, இந்த ஊர் பேரு நீடாமங்கலம். இங்க இந்த ரயில்வே கேட் போட்டாங்கன்னா, திறக்கறதுக்கு ரொம்ப நேரம் ஆகும். இது தினசரி நடக்கறப் பிரச்சனை ஐயா... நான் பக்கத்துல இருக்கற கல்லூரியில் படிக்கற மாணவி. ஈவ்னிங் காலேஜ். அதனால காலையில் வந்து இது மாதிரி கொஞ்ச நேரம் சர்வீஸ் பண்ணிட்டு போவோம். புதுசா வற்றவங்க என்ன பண்றதுன்னு தெரியாம தவிச்சுப் போய் நிப்பாங்க ஐயா! அதான்...''

''அப்படியாம்மா... நல்ல வேள சொன்னம்மா... ரொம்ப நன்றிம்மா...''

''நான் இப்ப திருவாரூர் கலெக்டர் ஆபீசுக்கு அர்ஜெண்டா போகணும்... என்ன பண்றதும்மா!''

இருக்கையில் எழுந்து கொண்டே கேட்டார் பெரியவர்.

''ஒன்றும் பதட்டப்படாதீங்கய்யா....

திருவாரூர் போறதுக்கு கேட் கிராஸ் பண்ணத் தேவையில்ல. இங்கயே இறங்கிக்கலாம். ஆனா நீங்க திருவாரூர் பஸ் கேட்டுக்கு அந்தப் பக்கத்துலேர்ந்து தான் வரணும். அதோ பாருங்க கேட்டுக்கு அந்தப் பக்கம் 'லட்சுமி ரோடுவேஸ்'னு ஒரு பஸ் நிக்குது பாருங்க அது திருவாரூர் போகும். ஆனா கேட் திறந்தா தான் இந்தப் பக்கம்

வரும். ரொம்ப அவசரம்னா, நெல் மூட்டை ஏத்திகிட்டு போற லாரியில ஏறி லிப்ட் கேட்டு பாருங்க.''

''இங்கிருந்து திருவாரூர் எவ்வளவு தூரம்மா! ''பெரியவர் கேட்டார்.

''ஐயா கரெக்டா முப்பது கிலோ மீட்டர் தூரம்.''

''எவ்வளவு நேரம் ஆகும்மா!''

''பஸ்ல போனா கொறஞ்சது ஒரு மணி நேரம் ஆயிடுங்கய்யா... ஏன்னா ரோடு சுமாராகத்தான் இருக்கும். ரோடு அகலப்படுத்தற வேலை வேற நடந்துகிட்டு இருக்கு.''

''இன்னும் அந்த திருவாரூர் ரோடு போடலையா! எனக்குத் தெரிஞ்சே பத்து வருசமா ரோடு போட்டுகிட்டு இருக்காங்களே!''

இன்னொரு பயணி சலித்துக் கொண்டார்.

''ஐயா, நீங்க லிப்ட் கேட்டு கொரடாச்சேரி வரைக்கும் போயிட்டாக் கூட அங்க இருந்து டவுன் பஸ் வரும் அதுல ஏறி நீங்க திருவாரூர் போய்டலாம்.'' ஒண்ணும் பயப்படாதீங்கய்யா நம்ம ஊரு விவசாயிங்கதான் நெல் மூட்டை ஏத்திகிட்டு போவாங்க... அவங்க கூட போறதுக்கு ஒன்னும் பயப்பட வேணாம். எல்லாம் வெகுளித்தனமான மனுஷங்க...''

- மாலதி சொன்னாள்.

மாலதி ஒவ்வொரு பேருந்தாக ஏறிச்சென்று விபரம் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

*''வழக்கமா 500 ரூபாய் வாங்குவேன்.*
*நீங்க 100 ரூபாய் மட்டும் கொடுங்க*

*''ஏன் சார்?''*

*''இது லஞ்ச ஒழிப்பு வாரம் ஆச்சே''*

**-எஸ்.மோகன், கோவில்பட்டி.**



''கூல்ட்டிரிங்ஸ் ஒரு பாக்ஸ் நிறைய கொண்டு வந்தேங்க.. நிறைய தீர்ந்து போயிடுச்சி. அஞ்சு பாக்கெட்தான் இருக்கு. பஸ்ல இருக்கறவங்களுக்கு யாருக்காவது அவசியமா தேவைப்பட்டா மட்டும் இலவசமா வாங்கிக்கோங்க.''

மாலதி சொன்னாள்.

இரண்டு, மூன்று பேர் மட்டுமே கை தூக்கினார்கள். சந்தோஷமாய் கொண்டு போய் கொடுத்தாள்.

''ஏம்மா.. மாலதி நீ தெனமும் நீடாமங்கலம் ரயில்வே கேட்ல நின்னு இப்படி சர்வீஸ் பண்றதை பாத்துகிட்டுத்தாம்மா இருக்கேன். உன்னோட சேவையில நானும் பங்கெடுத்துக்கலாமா? நான் இங்க குடவாசல்லதான் உதவி தாசில்தாரா இருக்கேம்மா..''

ஜன்னலோரத்தில் உட்கார்ந்து கொண்டே கேட்டார். அவர்.

தாராளமா செய்யலாம். சார் என்ன மாதிரி உதவி செய்யலாம்னு இருக்கீங்க சார்?

''என்னால இது மாதிரி வெயில் மழையில எல்லாம் அலைய முடியாதும்மா. நான் ஒரு ஐநூறு ரூவா பணம் தாரேன் வச்சு க்கம்மா!''

அவள் உடனே தன் ஹேண்ட் பேக்கில் இருந்து ஒரு ரசீது புத்தகத்தை எடுத்தாள்.

ஐயா உங்க பேரு...? தெரிஞ்சுக்கலாமா...?

''மணிவண்ணன். உதவி தாசில்தார், குடவாசல்...''

அவள் ஐந்நூறு ரூபாய்க்கு அவரது பெயரில் இருந்த ஒரு ரசீதை கிழித்துக் கொடுத்துவிட்டு அவரிடம் இருந்து பணத்தை வாங்கிக் கொண்டாள்.

மீதம் இருந்த இரண்டு கூல்டிரிங்ஸ் பாக்கெட்டுகளை அவரிடம் கொடுத்து விட்டு நன்றி சொன்னாள்.

- எல்லோரும் எதிர் பார்த்து காத்திருந்த கூட்ஸ் தடதடத்துக் கடந்தது.

ரயில் போன பிறகும் ஏதோ ஒரு கவனத்தில் வண்டியை ஸ்டார்ட் செய்யாமல் அப்படியே கனவில் மிதந்து கொண்டிருந்தான் அரவிந்தன்.

''தம்பி இப்படியே கனவுல மிதந்தீங்கன்னா மறுபடியும் கேட் போட்டுடுவாங்க. அப்புறம் நீங்க நாளைக்குத்தான் கிராஸ் பண்ண முடியும்.''

பக்கத்திலிருந்தவர் கிண்டலடித்த போது, அசடு வழிய வண்டியை உதைத்தப்படி கிளம்பினான் அரவிந்தன்.

## 2

**வி**சாலமாக இருந்தது அந்த கோயில் பிரகாரம். உயரமான மதிற் சுவர்கள். கோட்டைச் சுவர்கள் மாதிரி இருந்தன. சுவரில் சீரான இடைவெளியில் 'சிவ, சிவ' என்று அச்சுப் பதித்திருந்தார்கள். ஒரு சின்ன சப்தம் கொடுத்தாலும் கோயில் விமானத்தின் புறாக்கள் படபடவென்று பறந்து சென்று மீண்டும் வந்து அமர்ந்து கொண்டன.

தெளிவான நீல வானத்தில் நிலா மெல்ல மெல்ல முகம் காட்டியது.

தன் நண்பர்களுடன் பிரகாரத்தில் அமர்ந்து இருந்தான் அரவிந்தன்.

''எனக்கு அஞ்சு வயசு இருக்கறப்போ இந்த கோயிலுக்கு வந்ததா ஞாபகம் இருக்குடா சிவா. எப்படி அஞ்சு வயசுன்னு கரெக்டா சொல்றேன்னா, அப்ப தான் ஒண்ணாங்கிளாஸ்ல சேர்க்கறதுக்காக எங்க அப்பா, தோ பக்கத்துல இருக்கற ஓரத்தூர் பள்ளிக்கூடத்துக்கு அழைச்சிக்கிட்டுப் போனார். அப்பதான் சென்னையில இருந்து எங்க பெரியப்பா, நான் இவனை சென்னையில படிக்க வைக்கறேன்னு சொல்லி என்னை கூட்டிட்டு போயிட்டார். பெரியப்பாவுக்கு குழந்தை இல்ல அதனால கூப்பிட்டு போயிட்டார். அப்ப போனவன்தான். இதோ பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன்ல டிகிரி முடிச்சிட்டேன். ஆனா இந்த கிராமத்தை எல்லாம் ரொம்ப மிஸ் பண்ணிட்டேன்டா.''

அதான் ஊருக்கு வந்திட்டியே மாப்ள, அப்புறம் எதுக்கு பீல் பண்ற? இனிமே இங்க தான் இருப்பியா. இல்ல மறுபடியும் சென்னைக்கு கிளம்பிடுவியா?

''இல்ல மாப்ள சென்னைக்கு போகல! பெரியப்பாவுக்கு ரொம்ப வயசாயிடுச்சி. அதனால பெரியப்பா நீடாமங்கலத்துக்கே வரப்போறதா சொல்லிட்டார். பூர்வீக வீட்டை சரி பண்ணிட்டு இங்க வந்துடுவார். சென்னையில இருக்கற வீட்டை விலை பேசிகிட்டு இருக்கார்.''

- அரவிந்தன் சொன்னான்.

''அப்ப நீ கண்டிப்பா இனிமே சென்னைக்கு போகப்போறதில்ல!''

''இல்ல சிவா! இங்கேயே அப்பா கூட இருந்து அப்பாவோட பிஸினஸைப் பார்த்துக்கலாம்னு இருக்கேன்.''

- சிவா வேண்டுமென்றே சிரித்து புரையேறியது போல ஆக்ட் செய்து தலையில தட்டிக் கொண்டான்.என்னடா சிரிக்கற?

- அரவிந்தன் கேட்டான்.

''மச்சி, சிவா, உன்னை கிண்டல் பண்றான்!''

அரவிந்தனிடம் சொல்லி, சொல்லிவிட்டு மற்ற நண்பர்கள் சிரித்தார்கள்.

''எதுக்குடா சிரிக்கறீங்க!''

கொஞ்சம் கோப முகம் காட்டினான் அரவிந்தன்.

''இல்ல, நீ முன்னாடி பேசறப்ப எல்லாம், ஏதோ (ஐ பி எம்) கோர்ஸ் முடிச்சிட்டு அமெரிக்காவுக்குப் பறக்கப் போறதா சொன்னியே, இப்ப நீடாமங்கலத்துலேயே நீட்டி மடக்கி படுக்கலாம்னு வந்துட்டியே. அத நெனச்சாதான் சிரிப்பு வந்துடுச்சி.''

எல்லோரும் கோரசாக சிரித்தார்கள்.

''ஏய் நிறுத்துங்கடா, நான் அமெரிக்காவுக்கு போறேன்னு சொன்னது எதுக்கு? சுதந்திர தேவி சிலை முன்னாடி நின்று போஸ் கொடுக்கவா!''

அரவிந்தன் உண்மையாகவே கோபப்பட்டான்.

''ஏய்... அரவிந்த் கூல்டவுன், கூல்டவுன், ஸாரிடா...''

''ஏய்ய்.... ஸாரியெல்லாம் வேணாம். நீ கேட்ட கேள்வி நல்ல கேள்வி தான். அதுக்கு நான் சரியா பதில் சொல்லியாகணும்.''

- நண்பர்கள் அமைதியாக இருந்தார்கள்.

''நான் அமெரிக்காவுக்கு போகணும்னு சொன்னதே அங்க போய் பிஸினஸ் பத்தி நெறைய தெரிஞ்சிகிட்டு வந்தா நம்ம நாட்ல, நம் ஊர்ல செயல்படுத்த தான்.''

''நான் அமெரிக்கா போய் கிரீன் கார்டு வாங்கிகிட்டு அங்கேயே செட்டிலாகிடலாம்னு நெனைக்கல. என்னைப் பொறுத்தவரைக்கும் முதல்ல என் பெற்றோர், சொந்தக்காரங்க, நண்பர்கள், அப்புறம் நம்ப பொறந்த ஊர், அப்புறம் நம்ம நாடு, இது தான் முக்கியம். நம்மளால முடிஞ்ச விஷயத்தை நாம மக்களுக்கு செய்யணும். நாலு பேருக்கு வேலை கொடுக்கணும்.''

''இண்ட்ரஸ்டிங் அரவிந்த்''

''இன்னும் நிறைய கனவுகள் இருக்கு தம்பிகளா...!''

''சொல்லு அரவிந்த். உண்மையிலயே நீ சொல்றத கேட்கறதே.... மகிழ்ச்சியா இருக்கு. ஐயம் கெட்டிங் பூஸ்ட்டட்.''

''யெஸ்.... சிவா, சொல்றேன்''

''நம்ம நாட்டோட ரிசோர்ஸைப் பயன்படுத்தி படிச்சி, நம்ம அறிவை வளர்த்துகிட்டு, நம் அறிவையெல்லாம் கொண்டு போய் வெளிநாட்ல விக்கிறதுல எனக்கு உடன்பாடில்லை. நம்ம படிச்சதை வச்சி நம்ம நாட்டோட பொருளாதாரத்தை உயர்த்தணும். நான் அமெரிக்காவுக்கு போவேன், ஆனா அங்கேயே செட்டிலாயிட மாட்டேன்னு சொன்னதுக்கு இது ஒரு காரணம்.''

''நாம படிக்கிறது, வேலைக்கு போறது, இல்லன்னா பிஸினஸ் பண்ணி சம்பாதிக்கிறது எல்லாமே வயசான காலத்தில பெற்றோரை பாத்துக் குறதுக்குத்தான்.''

எத்தனையோ பெற்றோர்கள் தங்களோட பசங்களை வெளிநாட்டுக்கு அனுப்பிட்டு, வயசான காலத்துல ஒரு வாய்ப் பேச்சுக்கு கூட ஆள் இல்லாம தவிக்கிறாங்கத் தெரியுமா?''

- அரவிந்த் சென்டிமெண்டாகப் பேசினான்.

''நீ சென்னையில போய் இருந்தாலும் நம்மளோட கிராமத்து வேர்களை மறக்கல அரவிந்த். அதே மாதிரி நகரத்தோட கலாச்சார பாதிப்பு உன்கிட்ட கொஞ்சம் கூட இல்ல.''

- சிவா சொன்னான்.

''நாமதான் நகரத்துல இருக்கிற இளைஞர்கள் மேல ஒரு தப்பான அபிப்ராயம் வச்சிருக்கோம் சிவா. நகரத்துப் பசங்கள்னா எப்பப் பார்த்தாலும் பணம், பணம்னு இருப்பாங்க, பாசம் இருக்காது, பீட்சா சாப்பிடறவங்க.. இதெல்லாம் நம்மளோட கற்பனைதான் சிவா. பட், எல்லார்கிட்டயும் ஓர் உன்னதமான லட்சியம் உறங்கிகிட்டு இருக்குன்னுதான் நான் சொல்வேன்.''

''சூப்பர் அரவிந்த் கிரேட்! நீ அப்படி ஒரு லட்சியத்தோட இருக்கறதாலதான் நீ பார்க்கற எல்லோரும் லட்சியவாதிகளா தெரியறாங்க அரவிந்த். இன்னும் ஏதாவது சொல்ல வேண்டி இருக்கா...?

- சிவா கேட்டான்.

''ஆமாண்டா, எங்கப்பா போன வருசமே பெண் தேடுதல் படலத்தை ஆரம்பிச்சுட்டார். நான் தான் மனசுக்கு புடிச்ச ஒரு

பொண்ணை தேடிட்டு இருக்கேன். அப்படித் தேடிப் புடிச்சிகிட்டுப் போய் அப்பா முன்னாடி நிறுத்தி சம்மதம் கேட்டா, ஓகேன்னு சொல்லிடுவார்.''

''ஏன் சென்னையில உன் மனசைக் கவர்ந்த மங்கை ஒருத்தி கூடவா இல்லை?''

சிவா நக்கலடித்தான்.

''என் மனசுக்குள்ள சிறகடிக்கற ஒரு பட்டாம்பூச்சி நம்ம மாவட்டத்துக்குள்ளேயே இருக்கற மாதிரி ஒருஃபீலிங் இருக்கு சி வா.''

''ஏய்...ஏய்...எங்களுக்குத் தெரியாமலேயே யாரையாவது பார்த்து கரெக்ட் பண்ணிட்டியா? சும்மா... மறைச்சு மறைச்சுப் பேசாதடா.''

பட்டாம் பூச்சியைப் பார்த்தது என்னவோ உண்மை தான் மாப்ள.

- அரவிந்தன் இழுத்தான்.

ஏய்... பாருடா? எங்க பார்த்த? எப்ப பார்த்த? ஆர்வ மிகுதியில் நண்பர்கள் அரவிந்தனை நெருக்கியடித்துக் கொண்டு வந்தார்கள்.

''இருங்கடா இருங்க... அவசரப்படாதீங்க... நேத்து நீடாமங்கலம் ரயில்வே கேட்ல பார்த்தேன்.''

நண்பர்கள் ஓரளவு யூகித்தார்கள்.

'2சஸ்பெண்ட் வைக்காம சீக்கிரம் சொல்லு அரவிந்த்? யார் அந்த மங்கை? அடியேனின் தங்கை?''

''பேரு மாலதி... மன்னை காலேஜ்ல படிக்கறாங்க..''

- அரவிந்த் சொன்னான்.

''மீதியை நான் சொல்றேன். அவங்க அப்பா பேரு பரமசிவம். நீடாமங்கலம் கடைத்தெருவில் சின்ன மளிகைக்கடை வெச்சிருக்கார். ஒரே பொண்ணு. மாலதி காலேஜ்ல என்.எஸ்.எஸ். லீடர். பாரம்பரியமான குடும்பம். மாலதியோட கேரக்டருக்கு ச ர்டிபிகேட் கொடுக்கறதுக்கு எங்க யாருக்குமே தகுதி கிடையாது. நான்லாம் அவங்க கிராஸ் பண்றப்ப சிகரெட்டை பின்னாடி மறைச்சி வச்சிக்குவேன். இல்லைன்னா கீழ போட்டுட்டு ஷூ காலால மிதிச்சிடுவேன்.''

சிவா சொல்லிவிட்டு மூச்சு வாங்கினான்.

''மாலதி நம்மள விட மூணு, நாலு வயது சின்னவங்க தான். எனக்கென்னவோ அவங்களப் பார்த்தா காதலிக்கவெல்லாம் தோணாது. கையெடுத்துக் கும்பிடத்தான் தோணும்.''

''என்னடா அம்மனுக்கு ஆயிரம் போற்றிகள் பாடற மாதிரி பாடிகிட்டு இருக்க?

- அரவிந்த் கேட்டான்.

''நீ சொன்னாலும் சொல்லாட்டியும் இந்த ஊர்ல பல பேரு மாலதியை அம்மன் மாதிரிதான் பாக்கறாங்க அரவிந்த்.''

''அப்படி என்னதான்டா பண்றாங்க மாலதி?''

''நீ தான் பாத்திருப்பியே ரயில்வே கேட்ல நின்னு அவங்க பண்ணிகிட்டு இருக்கற வேலையை. நீ பார்த்தது அவங்களோட ஒரு பர்சண்ட் வேலையைத்தான். இதைத் தவிர அவங்க சேவை இல்லங்களுக்கு சாப்பாடு கொடுக்கறது. பள்ளிக்கூட மாணவர்களுக்கு சாயந்திர நேரத்துல டியூஷன் சொல்லி கொடுக்கறதுன்னு நிறைய பண்றாங்க அரவிந்த்.''

''ஒண்ணு சொல்றேன் அரவிந்த் தப்பா எடுத்துக்காதே!''

''பரவாயில்ல சொல்டா''

''உன்னோட வேகத்துக்கும், லட்சியத்துக்கும் மாலதி வெரி பெஸ்ட் சாய்ஸ். மறுபடியும் சொல்றேன் நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதே. மாலதியை உன்னால நெருங்க கூட முடியாது. உன் மூச்சுக் காத்து கூட அவ மேல படாது. நெருப்பு மாதிரி இருப்பாங்க பாத்துக்க.''

சிவா சொல்லி முடித்துவிட்டு தன் முகத்தை ஸ்ட்ரிக்டாக வைத்துக் கொண்டான்.

''ஏன் எழுதுறத விட்டுட்டீங்க?''

''வாசகர்கள் வீடு தேடி வந்து திட்டிட்டுப்போறாங்களே''

-ஏ.மூர்த்தி, திருவள்ளூர்.



ஏண்டா நெருங்க முடியாது? அவங்களோட சாதியா?

''அது அல்ல அரவிந்த்''

'அப்புறம் ஸ்டேட்டஸா ''

''அதுவும் இல்ல''

''அப்புறம் என்னதான் பிரச்சனை''

''அவங்களோட கேரக்டர் அப்படி''

''நீ வேண்ணா நாளைக்கு அதே மாதிரி எண்ணத்தோட, அதே கேட்ல போய் நின்னு பாரேன்! ''

''நாளைக்கு என்னடா? இன்னைக்கே பார்க்கறேன்.....''

இன்னைக்கேவா.... எப்ப ?

''இப்பவே பாக்கறேன்''

''எங்கடா போய் பார்ப்ப?''

''இங்கேயே பார்க்கப் போறேன்''

அரவிந்தன் பார்த்த திசையில் எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

- மாலதி சண்டிகேஸ்வரர் சந்நிதிக்கு அருகே பள்ளிச் சிறுமிகளுடன் நின்று பேசிக் கொண்டிருந்தாள்.

''இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னாடி நம்ம நாட்டை ஆட்சி செய்த கரிகாலன் கட்டின கோயில் இது. இங்க இருக்கற சிவபெருமானோட பேரு கரும்பேஸ்வரர். எல்லாக் கோயிலுக்கும் தல விருட்சம்னு ஒரு மரம் இருக்கும். இந்தக் கோயிலோட தல விருட்சம் கரும்பு தான்.''

''அக்கா இன்ட்ரஸ்டிங்கா இருக்குக்கா!''

''இன்னும் சொல்றேன் கேளுங்க...''

''இரண்டாயிரம் வருசத்துக்கு முன்னாடி சேரர், பாண்டியர் இவங்களோட ஒன்பது குறுநில மன்னர்களும் சேர்ந்துகிட்டு கரிகாலன் மேல போர் தொடுத்தாங்க. அத்தனை பேரையும் தோற்கடிச்ச இடம் தான் இந்த ஊர்.''

''அப்படியாக்கா''

''ஆமாண்டா செல்லங்களா, இந்த ஊர் பேரு கோவில் வெண்ணி... உங்களுக்கு தெரியும்ல. கரிகாலன் காலத்துல வெண்ணிப் போர் நடந்த இடம் இது. வெண்ணிப்பறந்தலைப் போர்ன்னும் சொல்வாங்க''

-மாலதி சொல்லி முடித்தவுடன் குழந்தைகள் குதூகலமாக கை தட்டினார்கள். அவர்களோடு அரவிந்தன் நண்பர்களும் கைதட்டினார்கள்.

கை தட்டிக்கொண்டே மாலதியின் அருகில் வந்தார்கள்.

''நீங்க குழந்தைகளுக்கு சொன்ன கதையை முழுசா நாங்களும் கேட்டோம். ரொம்ப அருமைங்க. அது எப்படிங்க இந்த ஊர் வரலாற்றை எல்லாம் இவ்ளோ அழகா புட்டு புட்டு வைக்கிறீங்க?''

அரவிந்தன் கேட்டான்.

''மறைஞ்சிருந்து கேட்டீங்களா?''

'' நாங்க ஏன் மறைஞ்சி இருக்கணும். நீங்க நடத்துன பாடம் இந்த கோவில் வெண்ணிக்கு முழுக்க கேட்டிருக்கும். அவ்வளவு சப்தமா கேட்டுச்சு. எப்படியோ நாங்களும் நமக்கு பக்கத்துல இருக்கற ஊரப்பத்தி தெரிஞ்சுகிட்டோம். ரொம்ப நன்றிங்க''

- அரவிந்தன் மாலதியிடம் சொன்னான்.

''இவ்ளோ தகவல் எப்படி கலெக்ட் பண்றீங்க?''

''நம்ம ஊருக்கு பக்கத்துல இருக்கற இந்த ஊரோட வரலாறு தெரியலனா எப்படிங்க?''

''நாங்களும் தான் இந்த ஊர்ல இருக்கோம். எங்களுக்குத் தெரியலையே''

- அரவிந்தன் சொல்லிவிட்டு சிரித்தான்.

''நீங்க இப்பத்தான் இந்த ஊருக்கு வந்திருக்கீங்க. போகப் போகத் தெரிஞ்சிக்குவீங்க.''

- மாலதி சொன்னாள்.

நான் ஊருக்குப் புதுசா வந்திருக்கேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?

ஆச்சரியமாகக் கேட்டான் அரவிந்தன்.

'';நீங்க பேசிகிட்டிருந்ததை நாங்களும் கேட்டோம்''

''மறைஞ்சிருந்து கேட்டீங்களா?''

''நாங்க ஏன் மறைஞ்சிக்கிட்டிருந்து கேட்கணும். நீங்க ஆற்றின சொற்பொழிவு இந்த கோயில் வெண்ணி முழுக்க கேட்டிருக்கும். அவ்வளவு சப்தமா கேட்டுச்சி''

''எங்க டயலாக்கை எங்களுக்கே ரிப்பீட் பண்றீங்களா?''

''அப்படித்தான் வெச்சுக்குங்களேன்.''

''ஆனா அதுல ஒரு சின்ன திருத்தம்''

- சொல்லிவிட்டு மாலதி அமைதியாக இருந்தாள்.

''என்னைப் பத்தி உங்க ஃபிரண்ட்ஸ்; உங்ககிட்ட ஓவரா பில்டப் கொடுத்திருக்காங்க. நான் ஒண்ணும் அவ்ளோ பெரிய அப்பா டக்கர் இல்ல. ஒரு ஆவரேஜ் மார்க் எடுக்கற காலேஜ் ஸ்டூடண்ட்.

அவ்வளவு தான்.''

சொல்லிவிட்டு பள்ளி மாணவிகளை அழைத்துக் கொண்டு வேக, வேகமாக நடந்தாள்.

பைரவர் சந்நிதி அருகில் போகும் போது அங்கிருந்து அரவிந்தை திரும்பிப் பார்த்தாள்.

அதுவரை அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த அரவிந்த் அவளுடைய அடுத்த ஆக்ஷனுக்காக தவித்தான்.

அவள் ஒரு வெட்கப் புன்னகையை உதிர்த்துவிட்டு மறைந்தாள்.

''கங்கிராட்ஸ் அரவிந்த். ஆல் தி பெஸ்ட்.'' அரவிந்தனின் கைகளைப் பற்றிக் குலுக்கினான் சிவா.

## 3

**அ**ரவிந்தனும், மாலதியும் மூணாறு படித்துறையில் உட்கார்ந்திருந்தார்கள்.

வெண்ணாற்றின் நீர்; இருவரின் கால்களையும் நனைத்தபடி ஓடிக் கொண்டிருந்தது.

அந்த ஒற்றை நாணலைப் பார்த்தியா அரவிந்த்? மாலதி ஆற்றின் படிக்கட்டின் பக்கவாட்டையொட்டி வளர்ந்திருந்த நாணல் புல்லைக் காட்டியபடி கேட்டாள்.

''ஆமாம் மாலதி! சிலுசிலுன்னு வீசுகிற இந்தக் காற்றுக்கு இதமா சுதி சேர்க்கற மாதிரி தலையாட்டிக்கிட்டே நிக்குது.''

''உன்னோட ரசனை எனக்கும் புடிச்சிருக்கு அரவிந்த். ஆனா நான் அந்த நாணலை வேற மாதிரி பார்க்கறேன்.''

''வேற மாதிரின்னா எப்படி?''

தன் தோள்களைக் குலுக்கியபடி கேட்டான் அரவிந்த்.

''ஆற்று வெள்ளத்தோட திசையில் அடிச்சி மூழ்கிப் போயிடாம அத்தனை வேகத்தையும் எதிர்த்து போராடுது பாத்தியா அரவிந்த். அதோட போராட்ட குணம் எனக்குப் புடிச்சிருக்கு. எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் அதைக் கண்டு அஞ்சாம எதிர்த்துப் போராடி நிக்கணும்னு சொல்ற மாதிரி இருக்கு அரவிந்த்.''

''வெல்டன் மாலதி. உண்மையிலேயே உன்னோட பார்வைதான் எனக்குப் புடிச்சிருக்கு. நான் வெறும் அழகியல் உருவமா தான் அந்த நாணலைப் பார்த்தேன். நீ போராட்டக் களத்துல நிற்கிற போர் வீரன் மாதிரி அந்த நாணலைப் பார்க்கிற. வாழ்க்கையில ஜெயிக்கறதுக்கு

போராட்ட குணம் அவசியம் மாலதி. உன்கிட்ட அந்தப் போராட்ட குணம் இருக்கறதாலதான் உன்னோட பார்வையும் அப்படியே இருக்கு.''

''தேங்க்ஸ் அரவிந்த். போராட்டம் இருக்கற வாழ்க்கைதான் சுவாரஸியமாக இருக்கும்னு எங்க அப்பா அடிக்கடி செ ால்லிக்கிட்டே இருப்பார் அரவிந்த். அதனால தான் என்னவோ போராட்டம் எனக்கும் புடிச்சிருக்கு அரவிந்த்.''

''அது என்ன மாலதி பெரிய பாலம் மாதிரி தெரியுது?''

ஓ! நீ பார்த்தது இல்லையா? அதுதான் மூணாறு பாலம்.

மூணாறு பாலமா? மூனாறு கேரளாவிலதான் இருக்கு?

''க்கும்.. ஜோக்கா? இது நீடாமங்கலத்தில இருக்கற மூணாறு. நாம உட்கார்த்திருக்கிற இந்த இடத்துக்கு என்ன பேரு தெரியுமா?''

''தெரியாது மாலதி... நான் தான் சொன்னேனே, சின்ன வயசிலயே ஊர விட்டுப் போயிட்டேனே.''

''சரி... சரி... நீ சென்னைக்காரன் தான் ஒத்துக்கறேன். இந்த இடத்துக்குப் பேரு மூணாறு தலைப்பு. நாம உட்கார்ந்திருக்கிற இந்த வெண்ணாறு, அதோ அந்த பாலத்துகிட்ட அதான் நீ செ ான்ன பாலத்துகிட்டே மூன்று ஆறுகளாப் பிரியுது. ஒரு ஆறு பேரு கோரையாறு, இரண்டாவது ஆறு பேரு பாமினி ஆறு, மூன்றாவது ஆறு வெண்ணாறு என்கிற பேர்லயே ஓடுது. மூன்று ஆறுகளும் பிரியற இடம் என்கிறதால இதற்கு மூணாறு தலைப்புன்னு பேரு...''

''ஏன்டா கல்யாணம் பண்ணதும் விவாகரத்துப் பண்ற? ''

''ஒட்டு மொத்த குடும்பத்துக்கும் சமைக்கச் சொல்றாங்களே!''

-ஏ.மூர்த்தி, திருவள்ளூர்.



ஓ! அப்படியா!

அப்படித்தான்! நீ சொன்னது பாலம் இல்ல.

மூன்று ஆத்துலயும் தண்ணீரை மாத்தி, மாத்தி திறந்து விடுறதுக்கு கட்டியிருக்கிற ஷட்டர் பாலம்.

- தெளிவாகச் சொன்னாள் மாலதி.

''அந்த ஷட்டர் பாலத்துக்கு பக்கத்திலேயே ஒரு அழகான பூங்கா இருக்கு அரவிந்த். நான் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமைகள்ல பள்ளிக்கூடம் படிக்கிற குட்டிப் பசங்களக் கூட்டிகிட்டு வந்துடுவேன். அங்க இருக்கற மணல் வெளியிலே வியர்க்க விறுவிறுக்க விளையாடுவோம். அதுதான் எப்போதும் எனக்குப் புடிச்ச சண்டே ஸ்பெஷல்.''

''இப்ப அந்த பார்க்குக்கு போகலமா மாலதி?''

''அது முடியாது. ஆத்துல இவ்வுளவு வெள்ளம் போறப்ப குழந்தைகளோட பாதுகாப்புக் கருதி பார்க்கைப் பூட்டிடுவாங்க.''

''பரவாயில்ல மாலதி இந்த படித்துறையே பார்க் மாதிரி அழகா த்தான் இருக்கு. சிலு சிலுன்னு வீசுற காத்து... காலை நனைக்கிற நதி நீர்;.... அப்புறம்....அப்புறம்...?''

அப்புறம்.... வேறென்ன?

மாலதி கேட்டாள்.

''அப்புறம் நீ!''

- அவள் வெட்கத்தில் அவன் மீது ஆற்று நீரை அள்ளி தெளித்தாள்.

அந்த மகிழ்ச்சியையும், அமைதியையும் கலைக்கிற மாதிரி கார் சப்தம் கேட்டது.

''என்ன மாலதி. இந்த இடம் ரொம்ப அமைதியா இருக்கும்னு சொன்ன? இப்ப ஆத்தங்கரையில் கார், டூவீலர் எல்லாம் போகுது!''

''டிராபிக் ஜாம் ஆகியிடுச்சுன்னு நினைக்கிறேன் அரவிந்த்.''

''டிராபிக் ஜாமா எங்க டிராபிக் ஜாம் ஆகியிருக்கும்?''

ஐயா என்னை முதன் முதல்ல எங்கப் பாத்தீங்களோ அங்கதான்.

''நான் உன்னை முதன் முதல்ல எங்கப் பார்த்தேன். இரண்டு நாள் முன்னாடி கோவில் வெண்ணி கோயில்ல பார்த்தேன். அங்கேயா டிராபிக் ஜாம்.''

''ஐய நடிக்கறதைப் பாரு......அப்படியே முழியைத் தோண்டிடுவேன்.''

''நீடாமங்கலம் கேட்ல கண் வலிக்க, வலிக்க பார்த்துட்டு பக்கத்து பைக் காரன்கிட்ட திட்டு வாங்கிட்டு அசடு வழியப் போனது ஞாபகம் இல்லையாக்கும்?''

''அப்போ, என்னை விட, நீதான் என்னை தவிச்சி, ரசிச்சிப் பார்த்திருக்க?''

''யூ, ராஸ்கல், ப்ளடி நான்சென்ஸ்''

அவள் விளையாட்டாக அவனை அடிக்கப் பாய்ந்தாள்.

அவளின் பொய்யான கோபத்திலிருந்து தப்பித்து விலகிக் கொண்டான் அரவிந்த்.

''இருக்கு மகனே! ஒரு நாள் என்கிட்ட வசமா மாட்டுவடா நீ. அன்னக்கி இருக்கு கச்சேரி''

''அப்படியொரு நாளுக்காக நான் காத்திருக்கிறேன், தேவி''

அவன் மனசுக்குள் முணுமுணுத்தான்.

''என்ன சொன்ன?''

''அ..அது ஒண்ணுமில்ல மாலதி. அங்க பாரு நிறைய வண்டி இந்த ரோட்ல வருது...''

அவன் பேச்சை மடை மாற்றினான்.

''இது டிராபிக்கை விட இன்னும் மோசமானது அரவிந்த்.''

''எதைச் சொல்ற மாலதி!''

''இந்த ரோட்டுல வண்டில போறது ரொம்ப ஆபத்தானது.

ஏன்?''

''சின்ன ரோடுதான். முன்னாடி ஜல்லியும், செம்மண்ணும் மட்டுந்தான் போட்டிருந்தாங்க. இப்பதான் ரெண்டு மாசத்துக்கு முன்னாடி தார் போட்டாங்க. பிரச்சனை அது இல்ல அந்த ரோடு, ரொம்ப சின்ன ரோடு. ஆத்துல தண்ணி வேகமாக போயிகிட்டு இருக்கு. ஆத்தோட வேகம் டூவீலர், சைக்கிளை எல்லாம் புடிச்சி உள்ள இழுத்துடும் அரவிந்த்.''

என்ன சொல்ற மாலதி?

''ஆமாம்ப்பா. உன்னைத்தான் ஆத்துல தண்ணி வேகமாக போறதால அதோட வேகம் தண்ணிக்கு மேலயும் இருக்கும். புதுசா ரோட்டுல போறவங்க ஆத்தை வேடிக்கைப் பார்த்துகிட்டே போவாங்க. அப்படி போறப்ப எத்தனையோ பேர் விழுந்திருக்காங்க அரவிந்த்.''

''வேற ஏதாவது பிரச்சனையா? இல்ல நீடாமங்கலம் கேட் தான்

பிரச்சனையா மாலதி!''

''வேற பிரச்சனைக்கு வாய்ப்பே இல்ல. இந்த டூவீலர், கார் எல்லாம் தஞ்சாவூருக்கு போகுது. இந்த ஆத்துக்கரை ஓரமாகவே அம்மாபேட்டை வரை போய் தஞ்சாவூர் மெயின் ரோட்ல ஜாயின் பண்ணிடுவாங்க.''

''அப்ப நீடாமங்கலம் கேட் பிரச்சனையைத் தீர்க்கறதுக்கு இந்த ரோட்டையே அகலப்படுத்தலாமே மாலதி.''

முடியவே முடியாது அரவிந்த். இது வெறும் ஒத்தயடிப்பாதை. ஆத்துக்- கரையில இருக்கற கருவேல மரத்தையெல்லாம் வெட்டி சுத்தப்படுத்தி வைச்சிருக்காங்க. அதனால கார், டூவீலர் எல்லாம் போக முடியுது. மழைக்காலத்துல இந்த ஆத்துக்கரை மக்கள் நடமாடவே சிரமமா இருக்கும். இப்பதான் பஞ்சாயத்துல கேட்டு போராடி தார் போட்டு ஏதோ ரோடு மாதிரி பண்ணியிருக்காங்க. இன்னொரு ஆபத்து வெள்ளக் காலத்துல தண்ணி கட்டுக்கடங்காம இருக்கும். டூவீலர், கார்லாம் போனா ஆத்துல போய் விழுந்திடும். அப்படியும் விபத்துக்கள் நடந்திருக்கு அரவிந்த்.

''விழுந்தவங்க சில பேர் நாணல் காட்டுக்குள்ள எக்குத்தப்பா போய் சிக்கிக்குவாங்க. காப்பாத்த போனவங்களும் சிக்கிக்குவாங்க. அப்படியும் சில விபத்துக்கள் நடந்திருக்கு.''

'' டோண்ட் கோ மோர் மாலதி. கேட்கவே கஷ்டமா இருக்கு. இதற்கு நிரந்தரத் தீர்வு என்னதான் மாலதி?''

யெஸ்! வெரிகுட்! இப்பதான் நான் எதிர்பார்த்த கேள்வியை கேட்டிருக்க அரவிந்த்.

''இந்த பிரச்சனை மட்டுமல்ல அரவிந்த். அன்னைக்கு மணிக்கணக்குல நீடாமங்கலம் கேட்ல காத்துக் கிடந்தது ஒரு பிரச்சனைன்னா, அதனோட கிளைகளாகவும், இலைகளாகவும் நிறையப் பிரச்சனைகள் பெருகிக் கிடக்கு. நீடாமங்கலம் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் மட்டுமல்ல, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களோட பல பிரச்சனைகளுக்கு காரணம் மணிக்கணக்குல மூடிக்கிடக்கிற நீடாமங்கலம் ரயில்வே கேட் தான்.''

''காரணம் ஒன்றே! என்ன தீர்வு மாலதி!''

''தீர்வு வேறென்ன! மேம்பாலந்தான்.''

நீடாமங்கலம் ரயில்வே கேட்டுக்கு மேலே நான்கு ரோடுகளும் சந்திக்கிற மாதிரி மேம்பாலம் போட்டுட்டா போதும்!

''ஏன் மேம்பாலம் கட்டல? மேம்பாலம் கட்டறதுல என்ன பிரச்சனை?''

''மேம்பாலம் கட்டறதுல என்ன பிரச்சனைன்னு எனக்குத் தெரியல அரவிந்த். ஆனா அதுக்காகத்தான் இந்த ஊர் மக்கள் ஐம்பது வருசமா போராடிகிட்டு இருக்காங்க. எனக்கு நினைவு தெரிஞ்ச நாளா போராடிகிட்டு இருக்கோம்.''

''ஐம்பது வருசமா போராட்டங்களா! அதிகபட்சம் ஐம்பது நாட்களில் நான் முடிச்சி காட்டறேன் மாலதி''

அரவிந்த் ஆக்ரோசமாகச் சொன்னான்.

- மாலதி அவனை சந்தோஷமாகப் பார்த்தாள். அவள் கண்களுக்குள் ஆனந்தக் கண்ணீர்; எட்டிப் பார்த்தது.

# 4

''பாடகச்சேரி மகானை வணங்கிவிட்டு வேலையை ஆரம்பித்தால் நல்லா இருக்கும்'' என்று மாலதி சொல்லி இருந்தாள்.

அதனால் அன்று காலையிலேயே அரவிந்தன், மாலதி, அரவிந்தன் நண்பர்கள், மாலதியின் கல்லூரி தோழிகள் எல்லோரும் ஆளுக்கொரு வண்டியில் பாடகச்சேரி நோக்கி கிளம்பினார்கள்.

இரண்டு புறங்களிலும் நெல் வயல்கள் நடவுக்கு தயாராகிக் கொண்டிருந்தன. சில வயல்களில் டிராக்டரை விட்டு சேறு குழப்பிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சில வயல்களில் நடவுப்பணி ஆரம்பித்திருந்தார்கள். பறித்த நாற்றுகளை கட்டை வண்டியில் ஏற்றி அடுத்த வயல்களுக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

மிகவும் சிலிர்ப்பாக உணர்ந்தான். அரவிந்தன்.

பின்னணியில் நடவு நடும் பெண்களோடு சேர்ந்து தன் செல் போனில் செல்பி எடுத்தான். அரவிந்தன்.

இப்படியொரு காலைப் பொழுதை தரிசனம் செய்து எத்தனை நாட்கள் ஆயிற்று? தேங்க்ஸ் டூ மாலதி, என்று முகநூலில் பதிவு செய்தான் அரவிந்தன்.

''எவ்வளவு தூரம் போகணும் மாலதி?''

''ஏன் அரவிந்த் உனக்கு அர்ஜென்டா வேற ஏதாவது வேலை இருக்கா?''

ஒரு வேளையும் இல்லை மாலதி. நீடாமங்கலத்தில அரசாங்கம் பாலம் கட்டணும், அதற்கான ஏற்பாடுகளை செய்யணும். அது தான் வேலை. அதுவரைக்கும் வேற எந்த வேலையும் கிடையாது. பாலம் கட்டறதுக்கு மினிஸ்டர், கலெக்டர், எம்.எல்.ஏ., எம்.பி. ன்னு யாரையெல்லாம் பாக்கணுமோ அத்தனை பேரையும் போய் பார்ப்போம்.''

அரவிந்தன் சொன்னான்.

''தேங்க்ஸ் அரவிந்த்.''

''இனிமே தேங்க்ஸ் எல்லாம் சொல்லக்கூடாது மாலதி. இது நமக்கான வேலை.''

''ஓகே...ஓகே...ஸாரி இனிமே தேங்க்ஸ் சொல்ல மாட்டேன்.''

''அட பாரேன் மறுபடியும் ஸாரி சொல்ற? ஸாரி... தேங்க்ஸ் ரெண்டுமே சொல்லக் கூடாது சரியா?

''சரிப்பா சாமி....வண்டியைப் பார்த்து ஓட்டு.''

''உன்னைப் பார்த்துகிட்டேதான் ஓட்டிகிட்டு வாரேன்.''

''ஏய் வேணாம். புனிதமான காரியத்துக்கு, புனிதமான இடத்துக்கு போயிட்டு இருக்கோம். ரொமான்ஸ் பண்ற நேரமா இது?''

- மாலதி சீறினாள்.

''ஆத்தா பத்ரகாளி.... நான் ஒண்ணு சொல்லல, எனக்கு நாம பார்க்க போறமே பாடகச்சேரி மகான் அந்த சாமியைப் பத்தி சொல்றியா?'' இன்னும் எவ்வளவு தூரம் போகணும்னு கேட்டேன்.

''ஆம்... இது நல்ல பையனுக்கு அழகு.''

''பாடகச்சேரி நீடாமங்கலத்தில இருந்து பத்து கிலோ மீட்டர். வலங்கைமான் பக்கத்துல இருக்கு. சாமியோட பேர் இராமலிங்க சுவாமிகள். பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகள், வள்ளலாரோட ஆசி பெற்றவர். வள்ளலார் மாதிரியேதான் வெள்ளாடை உடுத்தியிருப்பார். சாமிகள் பொறந்தது கோயமுத்தூர்ல. ஆனா பன்னிரண்டு வயசுலேர்ந்து சாமிகள் இங்கதான் வாழ்ந்து வந்திருக்கார்.''

''வள்ளலார் சுவாமிகளோட கொள்கைகள் தான் எனக்கு ரொம்ப பிடிக்கும் மாலதி. வடலூருக்கு ரெண்டு, மூணு தடவை போயிருக்கேன்.''

''ஓ! கிரேட்! அரவிந்த் வள்ளலார் மாதிரியே தான் இவருடைய வாழ்க்கையும். கும்பகோணத்துல இவர் செய்த பணி தான் ரொம்ப பெரிசு அரவிந்த்.''

''அப்படியா!''

''யெஸ்! கும்பகோணத்துல இன்னைக்கு ரொம்ப பேமஸா இருக்குற நாகேஸ்வரன் கோயிலை தனி ஒரு ஆளா நின்னு கும்பாபிஷேகம் பண்ணிருக்கார். அவருடைய இடுப்பில எப்போதும் ஒரு பாத்திரம் தொங்குமாம். விருப்பப்படறவங்க அதுல காசு போடுவாங்களாம். அப்படி கொஞ்சம், கொஞ்சமா காசு சேர்த்து தான் நாகேஸ்வரன் கோயில் கும்பாபிஷேகம் பண்ணியிருக்கார். நூறு வருசத்துக்கு முன்னாடி நடந்தது இது. எழுபத்தைந்து வயது வரை வாழ்ந்தவர். திருவொற்றியூரில் சமாதி அடைஞ்சுட்டார்.

கும்பகோணத்துல இருந்து காரைக்கால் போற பாதையில முத்துப்புள்ளை மண்டபம் என்கிற இடத்துல கோயில் இருக்கு. சுவாமிகள் கும்பகோணத்துல தங்கி இருந்தப்போ அவங்க பசியும், பட்டினியும் தலை விரிச்சி ஆடியிருக்கு. அப்பதான் சுவாமி கூழ்சாலை ஆரம்பிச்சு மக்களுடைய பசியை போக்கியிருக்கார்.

''உண்மையிலேயே ஒரு ஆன்மீக தரிசனம் செஞ்ச உணர்வு ஏற்படுது மாலதி. பாடகச்சேரி சாமியைக் கண்ணு முன்னாடி கொண்டு வந்து நிறுத்திட்ட.''

''சமூகச் சேவை, ஆன்மீகம்னு நம்மோட அலைவரிசை ஒத்துப் போறதாலதான் நாம ஒரே திசையில பயணிக்க முடியுது அரவிந்த்.''

''எல்லோரும் வண்டியை நிறுத்துங்கப்பா. ஆளுக்கொரு கப் டீ

''மெடிக்கலில் உள்ள எல்லா மாத்திரைகளையும் எனக்கு ஏன் எழுதி தந்திருங்கீங்க டாக்டர்?''

''ஏதாவது ஒரு மருந்து உங்க நோயை குணப்படுத்தி விடாதா என்று தான்!''

-கே.இந்து குமரப்பன்,
விழுப்புரம்.



சாப்பிட்டுவிட்டு போகலாம்.''

- மாலதி வண்டியை விட்டு இறங்கி சைடு ஸ்டாண்டை எடுத்து விட்ட படியே சொன்னாள்.

''இந்தக் காட்டுல அத்துவான ரோட்டுல டீ எங்க கிடைக்கும் மாலதி?''

''அதோ சைக்கிள்ள கேன் டீ விக்கிறாரு பாக்கலையா?''

''சரி இங்க டீ குடிக்க யாரு இருக்கா?''

அரவிந்த் மறுபடியும் வியப்பாகக் கேட்டான்.

''உன் பார்வையை விசாலப்படுத்து அரவிந்த். உன்னோட இடப்பக்கம் பாரு!''

மாலதி செல்லமாக முறைத்தாள்.

''ஆமா இங்க என்ன இவ்ளோ நெல் மூட்டை அடுக்கி இருக்கு!''

''இது கூடவா தெரியல. இதான் டி என் சி எஸ் சி சென்டர் நெல் புடிக்கிற இடம்! காலையிலேயே ஆட்கள் வந்திடுவாங்க. அவங்களுக்கு விக்கிறதுக்குத்தான் டீ வியாபாரி வந்திருக்கார்.''

''என்ன மாலதி? இப்படி வெட்ட வெளியில நெல் மூட்டைகளை அடுக்கி வச்சிருக்காங்க!?''

''ஹலோ பிரதர்ஸ் இங்க வாங்க... இந்த அரவிந்த் என்னை ரொம்ப படுத்தறான். ஏதோ சின்னப்புள்ள மாதிரி கேள்வி கேட்டுக்கிட்டே இருக்கான்.''

- மாலதி அரவிந்தனின் நண்பர்களிடம் கம்ப்ளைண்ட் பண்ணினாள்.

''டேய்... உனக்கு என்னடா பிரச்சனை? இப்ப உனக்கு என்ன வேணும்?''

''இல்ல மாப்ள, இங்க பாரு நெல் சேமிச்சு வெக்கிற குடோன்னு சொல்றீங்க. இப்படி வெட்ட வெளியில இருக்கு?''

''நீ என்ன இவ்வளவு நாள் வெளிநாட்டலயா இருந்த? தமிழ்நாட்ல நெல் சேமிச்சு வெக்கிற குடோனை நீ பார்த்ததே இல்லையா?''

''ஸாரிடா... ப்ளீஸ் நான் தெரியாமத்தான் கேட்கறேன். இப்படி வெட்ட வெளியில சேமிச்சு வெச்சா, நெல் நனைஞ்சு போயிடாதா?''

பதற்றத்தோடு கேட்டான் அரவிந்தன்.

''இதற்கே இப்படி பதறினா எப்படி? முதல்ல டீயை சாப்பிடு. உள்ள போய் ஒரு எட்டு பாத்துட்டு வரலாம்.''

''பச்... டீ சாப்பிடவே மனசு வரலடா?''

''டேய் முதல்ல டீயை சாப்பிடு. புத்தருக்கு இப்பதான் புதுசா

ஞானம் வந்திருக்கு.''

''டீ யை வாங்கி வேண்டா வெறுப்பாக உறிஞ்சினான். அரவிந்த்.''

எல்லோரும் டி என் சி எஸ் சி சென்டர் நெல் பிடிக்கிற இடத்திற்குப் போனார்கள். பல இடங்களில் தார்பாலின் போட்டு நெல் முட்டு முட்டாக குவித்து வைத்திருந்தார்கள்.

''இதெல்லாம் ஏன் கீழே கொட்டி வச்சிருக்காங்க. மாலதி?''

விவசாயிகள் அறுவடை செஞ்சி நெல்லை விக்க வந்திருக்காங்க அரவிந்த். சென்டர்ல நெல் வாங்க ஆபீசர் வரணும். நெல் புடிச்சி அளந்து போடற ஆட்கள் வரணும். அவங்க வந்த பிறகுதான் இந்த நெல்லை அளந்து மூட்டையில கட்டி அடுக்கி வைப்பாங்க!

''அவங்க எப்ப வருவாங்க!''

''நம்ம ஊர்ல ஆபீஸ் டைம் பதினோரு மணி தான் அரவிந்த்.

அதுவரைக்கும் விவசாயிகள் காத்திருக்கணுமா?''

''அதுவரைக்கும் இல்ல அரவிந்த். இரண்டு, மூன்று நாட்கள் கூட காத்திருக்கணும். நிறைய விவசாயிங்க, அறுவடை முடிச்சி நெல் எடுத்துட்டு வர்றவங்க எல்லோர்கிட்டயும் வரிசையாத்தான் வாங்குவாங்க.''

''அதுவரைக்கும் நெல்லுக்கு யார் பாதுகாப்பு?''

''விவசாயிங்கதான். நெல்ல தரையில கொட்டி வச்சிட்டு பக்கத்திலேயே துண்டை விரிச்சு படுத்து தூங்கிடுவாங்க.''

''வெட்ட வெளியில நெல் கிடக்கு, மழை வந்தா நனைஞ்சுடாதா?''

''நனைஞ்சுடும்! அரவிந்த். அப்படி நனைஞ்சிட்டா அனைத்து மொத்த நெல்லும் மறுநாளே முளைச்சிடும்.''

''அய்யய்யோ, அப்புறம்.''

''அப்புறம் என்ன? விவசாயி வயத்துல அடிச்சிகிட்டு போக வேண்டியதுதான்...''

''போதும் நிறுத்து மாலதி! இதையெல்லாம் பாத்துவிட்டு சும்மா இருப்பீங்களா? கேட்க மாட்டீங்களா?''

கோபத்தில் அரவிந்தன் வேகமாக கத்தினான்.

நெல்லுக்கு காவல் இருந்த விவசாயிகளும், வேலையாட்களும் கூடி விட்டார்கள்.

''எத்தனை நாளா காத்திருக்கீங்கய்யா நீங்க?'' விவசாயிகளைப் பார்த்துக் கேட்டான் அரவிந்தன்.

''ரெண்டு நாளா தூக்கமில்லாம கெடக்குறோம் தம்பி!''

''நெல் புடிக்கிற ஆபீசர் வரலையா?''

''வர்றாரு தம்பி! ஆனா, கரண்ட் இல்ல, மீட்டிங் இருக்குன்னு ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி மதியானம் இரண்டு மணிக்கெல்லாம் போயிடறாருய்யா..

''நெல் எடுக்கறதே இல்லையா?''

''எடுக்கறாருய்யா. காசு அதிகமாக கொடுக்கறவர்கிட்ட எடுத்துகிறாருய்யா...''

''காசு கொடுக்கணுமா?''

''ஆமாம் தம்பி. மூட்டைக்கு முப்பது ரூபா லஞ்சமா கொடுக்கணும். அப்பதான் வாங்குவார். இதுலயே சில பேர் மூட்டைக்கு ஐம்பது, அறுவதுன்னு லஞ்சம் கொடுத்து உடனே நெல்லை போட்டுட்டு போயிடறாங்க.''

''விவசாயிகள் உற்பத்தி பண்ணின நெல்லை கொள்முதல் பண்றதுக்கு விவசாயிகள்கிட்டேயே லஞ்சமா? கொடுமையா இருக்கே!''

''கொடுமைதான் தம்பி! நீங்கதான் யார்கிட்ட யாவது கம்ப்ளைண்ட் பண்ணி இதை சரி பண்ணனும். எல்லாரும் படிச்ச புள்ளைகளா தெரியறீங்க''

- விவசாயிகள் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

''ஐயா அப்படியெல்லாம் நீங்க கும்பிடக்கூடாது. நாங்கதான் உங்க காலைத் தொட்டு கும்பிடணும். வெளியில விவசாயிகளைக் காப்போம், விவசாயிகளைக் காப்போம்ணு கோஷம் போடறாங்க! இங்க என்னடான்னா விவசாயிகள் கிட்டயே லஞ்சம் வாங்குறாங்க. இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டணும்.''

- பொங்கினான் அரவிந்தன்.

''அப்படி விவசாயிகள்கிட்ட வாங்குற நெல்லையாவது பாதுகாப்பா வெச்சிருக்காங்களா? இப்படி வெட்ட வெளியில போட்டு வச்சிருக்காங்க. உணவுப் பொருட்கள் எப்படியெல்லாம் வேஸ்ட் ஆகுது பாருங்க! பார்க்கவே நெஞ்சு கொதிக்குது!''

இதெல்லாம் பாதுகாப்பா வெக்க ஒரு பெரிய கான்கிரீட் குடோன் கட்டக்கூடாதா இந்த கவர்ன்மெண்ட்.''

''தம்பி நீங்க அவ்ளோ தூரம் கான்கிரீட் பில்டிங் எல்லாம் போக வேணாம் தம்பி. ஒரே ஒரு உதவி செய்யுங்க போதும்.

இந்த நீடாமங்கலத்துல ரயில்வே மேம்பாலம் கட்டறதுக்கு ஏற்பாடு செய்யுங்க தம்பி. மேம்பாலம் கட்டியாச்சுன்னா ரயில்வே கேட்டுக்கு அந்தப் பக்கம் இருக்கற பிரைவேட் சென்டர்ல அறுவடை முடிஞ்ச உடனே நெல்லை கொண்டு போய் போட்ருவோம். இல்லன்னா ரெயில்வே கேட்ல சிக்காம நெல்லை உடனே தஞ்ச ராவூர் சென்டருக்கு எடுத்துட்டுப் போயிடுவோம்.

- அரவிந்தனின் கைகளைப் பிடித்து கொண்டே சொன்னார் அந்த விவசாயி.

## 5

**கோ**வில் வெண்ணியின் பிடாரிக் குளக்கரையில் அரவிந்தன், மாலதி, நண்பர்கள் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள்.

யாரும் எதுவும் பேசவில்லை. ஒரு நூலிழையான வருத்தம் எல்லோரிடமும் பரவிக் கிடந்தது.

மாலதிதான் மௌனம் கலைத்தாள்.

''இந்தப் பிடாரி அம்மன் விக்ரகத்தைப் பார்த்தியா அரவிந்த்?'' மாலதி கேட்டாள்.

பிடாரி அம்மனைப் பார்த்துவிட்டு, திரும்பி மாலதியைப் பார்த்தான்.

''என்ன மாலதி பிடாரி அம்மன் விக்ரகத்துல என்ன விசேஷம்?''

''யெஸ் அப்படிக் கேளு. இந்தப் பிடாரி அம்மன் விக்ரகம் இரண்டாயிரம் வருஷம் பழமையானது.''

''உண்மையாகவா!''

''இதுல என்ன வேடிக்கை வேண்டிக் கிடக்கு அரவிந்த். கரிகாலன் காலத்துல இந்தக் கோயில் இதே இடத்துல தான் இருந்திருக்கு. கரிகாலனோட வரலாறு படிச்சிப்பாரு தெரியும். கரிகாலன் தன்னோட குல தெய்வமா கும்பிட்ட அம்மன் இந்தப் பிடாரி அம்மன்.''

''கரிகாலன், கரிகாலன்னு பீத்திக்கிறியே, கரிகாலன் வரலாற்றைப் படிச்சா போதுமா மாலதி பின்பற்ற வேண்டாமா?''

''இப்ப என்ன பண்ணனும்னு சொல்ற?''

விவசாயிகள் மேல எவ்வளவு அக்கறை இருந்தா இரண்டாயிரம் வருசத்துக்கு முன்னாடி கல்லணை கட்டி பாசன வசதியை

மேம்படுத்தி இருப்பான். ஒரு மன்னனா அரண்மனையில உட்கார்ந்துகிட்டு அதிகாரம் மட்டும் செலுத்தாம மக்களோட மக்களா வாழ்ந்த மன்னனோட மண்ணுல நாம உட்கார்ந்திருக்கோம். ஆனா அவனோட லட்சியமான விவசாயிகளை வாழ வைக்கணுங்கிறதுல மட்டும் யாருக்கும் அக்கரையில்ல. ச்சே!.

கூல்டவுன் அரவிந்த்! இப்ப என்னாச்சுன்னு என்ன பண்ணனும்னு இப்படிப் பதறிகிட்டே இருக்க!

''இப்போதைக்கு நம்மளோட முக்கியமான நோக்கமே நீடாமங்கலத்துல இருக்கற ரயில் நிலைய பாதையை கிராஸ் பண்றதுக்கு மேம்பாலம் கட்டணும். அதற்கு ஏற்கனவே எத்தனை லெட்டர், மனு, அதற்கு வந்த பதில் கடிதம், ஆர்.டி.ஐ. லெட்டர் எல்லாம் இருக்கு. எல்லாத்தையும் ஒரு கம்ப்ளீட் பைலா மாத்தி நம்ம தொகுதி எம்.பி.யைப் போய் சந்திச்சு கொடுப்போம்.''

அவர்தான் பார்லிமெண்ட்ல கேள்வி கேட்கணும். கேள்வி கேட்டு ரெயில்வே மந்திரியைப் பார்த்து சாங்ஷன் பண்ணச் சொல்லணும்.''

- மாலதி சொன்னாள்

''நீங்க சொல்றது தான் சரி மேடம்.''

- சிவா சொன்னான்.

''பசங்களுக்கு உன்மேல இருக்கற பயம் இன்னும் போகலைன்னு நினைக்கிறேன் மாலதி. இப்பவும் பாரேன் மேடம் அம்மா, தாயேன்னு தான் கூப்பிடறான்.''

- அரவிந்த் சொல்லிவிட்டு சிரிக்க... எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள்.

''மாலதி நீ சொன்ன ஆக்ஷன் பிளான்ல, முதல்ல எம்.பி.யை போய் பார்க்கறதுன்னா அவ்வளவு ஈசி இல்லை. அதுவும் நாம கையில் வச்சிருக்கிறது பெரிய விஷயம். முதல்ல மனுவை வாங்கவே அவர் யோசிப்பாருன்னு தோணுது. நீடாமங்கலம் ரயில்வே கேட் பிரச்சனை அவருக்குத் தெரியாத விஷயம் கிடையாது. ஏற்கனவே பல பேர் பல முறை அவர்கிட்ட சொன்ன விஷயம்தான். அதனால் நம்மளோட மனுவை அவ்வளவு சீக்கிரம் வாங்கிக்க மாட்டார்.''

''யெஸ்.. மாலதி எம்.பி.யை மீட் பண்றதுக்கு முன்னாடி இன்னும் கொஞ்சம் வெயிட்டான ஆளுங்களோட போறது நல்லாயிருக்கும்.''

''அரவிந்த் எனக்கொரு யோசனை தோணுது.''

''சொல்லு சிவா என்ன யோசனை?''

''கோரிக்கை மனு எழுதி கையில் வச்சிகிட்டு நாளைக்கு

நீடாமங்கலம் ரயில்வே கேட்ல நின்று ஒரு சின்ன கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவோம். எனக்குத் தெரிந்து ஒரு ரிப்போர்ட்டர் நீடாமங்கலத்துல இருக்கார். வரச்சொல்வோம். அவரே டி.வி. ரிப்போர்ட்டரையும் அழைச்சிகிட்டு வந்துடுவார். நியூஸ் ப்ளாஷ் ஆகும். ஓரளவு கவனம் கிடைக்கும். தொடர்ந்து அது மூலமா மக்கள்கிட்டே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அரசாங்கத்துகிட்டே போராட வைக்கலாம்.''

''எனக்கு இது சரியா படல சிவா. நமக்கு பப்ளிசிட்டி கிடைக்குமே தவிர, இதுல வேற எந்தப் பயனும் இருக்காது. ஆர்ப்பாட்டம், போராட்டம்னு போறது நம்ம நோக்கத்தில இருந்து நம்மை திசை திருப்பும்.''

- மாலதி சொன்னாள்.

''அதுவும் இல்லாம இது மாதிரி பல தடவை உள்ளூர் அமைப்புகள் ஆர்ப்பாட்டம், போராட்டம் எல்லாம் பண்ணியிருக்காங்களே! பாலம் கட்டணும்னு சொல்லி வருசத்துக்கு மூணு போராட்டம் நடக்குது நீடாமங்கலத்துல.''

''. . . . . . . .''

''ஒரு தடவை பஸ் மறியல் கூட நடந்திடுச்சி. அந்த மறியல்தான் உலகத்துல பெரிய காமெடியா இருந்துச்சி.''

சிரித்துக் கொண்டே சொன்னாள் மாலதி.

''பஸ் மறியலில் அப்படியென்ன காமெடி மாலதி.''

''சொல்றேன்....சொல்றேன்...''

அவள் சொல்ல வந்து சொல்ல முடியாமல் சிரித்தாள்.

''ஸாரிப்பா எல்லோரும் மன்னிச்சிக்கோங்க.. எனக்கு அன்னைக்கு பஸ் மறியலை நினைச்சா சிரிப்பு தான் வருது. சீரியஸான மேட்டர்தான் ஆனா சிரிப்பு வருது.''

- மாலதி சொல்லட்டும் என்று காத்திருந்தார்கள்.

''அன்னைக்கு அனைத்துக் கட்சியும் சேர்ந்து போராட்டம் நடத்தினாங்க. நாலு ரோட்டுலயும் போக்குவரத்து ஸ்தம்பிச்சு நின்னது.''

''போலீஸ் டிபார்ட்மெண்ட்ல இருந்து டி.எஸ்.பி யோ அல்லது எஸ்.பி. யோ வரலியா? தாசில்தார் கூட வரலியா?

''காலையில பத்து மணிக்கு ஆரம்பிச்ச போராட்டம். யாரும் வரல... இது வழக்கமாக நீடாமங்கலம் கேட் போட்டதால

வர்ற டிராபிக் பிராப்ளம்னு நினைச்சிகிட்டு நாலஞ்சு டிராபிக் கான்ஸ்டபிள் வந்திருந்தாங்க. அப்பவே மணி மதியம் பன்னிரண்டு. அதுக்கு மேலே போராட வேணாம்னு சொல்லிட்டு கட்சிக்காரங்க கலைஞ்சிப் போய்ட்டாங்க.''

''அப்படிப் பார்த்தா தினமும் நீடாமங்கலத்துல பஸ் மறியல் போராட்டம் நடக்கற மாதிரி தான் அர்த்தம்.''

- விளக்கமாகச் சொல்லிவிட்டு மறுபுறம் சிரித்தாள் மாலதி.

''சரிப்பா இன்னைக்கு ரொம்ப லேட் ஆயிடுச்சி. நாளைக்கு எல்லோரும் கொரடாச்சேரி பாய்ஸ் ஸ்கூல் கிரவுண்டுக்கு வந்திடுங்க. வர்றப்ப ஆளுக்கொரு யோசனையோட வரணும்.''

- மாலதி சொல்லிவிட்டு எழுந்து கொண்டாள். எல்லோரும் கலைந்து சென்றார்கள்.

## 6

பரந்து விரிந்து கிடந்தது. கொரடாச்சேரி பள்ளி விளையாட்டு மைதானம் மாலை வெயில் குறையத் தொடங்கி இருந்ததால் நடைப்பயிற்சி மேற்கொள்பவர்கள் வரத்தொடங்கி இருந்தார்கள். ஆண்களும், பெண்களுமாய் ஆளுக்கொரு விதமாக நடந்து கொண்டிருந்தார்கள்.''

சிலர் நடக்கும் போதே கைகளை முன்னும், பின்னுமாக ஆட்டிக் கொண்டே நடந்தார்கள். சிலர் கைகளை முன்னும், பின்னுமாக சுழற்றினார்கள். சிலர் திடீரென்று கொஞ்ச தூரம் குதித்தார்கள்.

நிறைமாத கர்ப்பிணி நைட்டி அணிந்திருந்தார். மேலே நைலான் ஷால் அணிந்திருந்தார். அடி பாதம் நடப்பது போல அவள் தன் கணவனின் கைகளை பற்றிக்கொண்டு நடந்தாள்.

நடந்து முடிந்த களைப்பில் சிலர் ஓரமாக கட்டியிருந்த சிமெண்ட் சிலாப்பில் உட்கார்ந்து கொண்டார்கள். பள்ளி முடிந்த மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிந்து கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

விளையாட்டு மைதானத்தை தொட்டபடியே ஓடிக்கொண்டிருந்த நதி மாலை நேரக் காற்றை முழுமையாக அள்ளிக் கொண்டு வந்து பரப்பிக் கொண்டிருந்தது.

யாரோ ஒரு ரசனையான தலைமையாசிரியர், நதியை பார்வையில்

இருந்து மறைத்து காம்பவுண்ட் போடாமல் இரும்புக் கிராதிகளைக் கொண்டு அடைத்து இருந்தார்.

ரசனைக்கு ரசனையானது. பாதுகாப்பும் ஆயிற்று.

அரவிந்தன், மாலதி, சிவா, சந்தானராமன் நான்கு பேரும் இரும்புக் கிராதியை ஒட்டி போடப்பட்டிருந்த சிமெண்ட் கட்டையில் உட்கார்ந்து கொண்டே நதியை அழகாக ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

வெண்ணி நதி ஆங்காங்கே உதிர்ந்த பூக்களையும், சருகுகளையும் சுமந்து கொண்டு தங்கு தடையில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது.

''இங்கு வந்து நின்ன உடனேயே உடம்பெல்லாம் சிலிர்க்கிறது அரவிந்த் எனக்கு. இங்க தான் நான் எட்டாவது வரை படிச்சேன். அப்புறம் தான் அம்மாபேட்டை ஸ்கூலுக்கு மாறிட்டேன்.''

- மாலதி சொன்னாள்.

'';இந்த கிரவுண்டல என் கால் படாத இடமே இருக்காது அரவிந்த். நான் ஸ்கூல் படிக்கும் போது கொ-கொ- பிளேயர். ஸ்கூல் சாம்பியன்.''

சொல்லும் போது அவளுக்கு முகம் மலர்ந்தது.

''ஒவ்வொரு வருசமும் முழு ஆண்டுத் தேர்வு முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு மதிப்பியல் மாணாக்கர் பரிசுகள் தருவாங்க. ஆறாங் கிளாஸ்லேர்ந்து எட்டாம் கிளாஸ் வரைக்கும் நான் தான் தொடர்ச்சியாக மூன்று வருசம் வாங்கினேன்.''

*''பேனுக்கும், பேனுக்கும் என்ன ஒற்றுமை?''*

*'''ரெண்டுமே தலைக்கு மேலதான் சுத்தும்..!''*

**-விமலா சடையப்பன்,**
**காளனம்பட்டி.**



- அவள் நிறைய சொல்லத் துடித்தாள்.

அவள் மனசு அப்படியொரு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது.

''எனக்கு அப்போ சமூக அறிவியல் பாடம் எடுத்த டீச்சர் பெயர் விஜயலெட்சுமி. எனக்கு ரொம்ப புடிச்ச டீச்சர். அவங்க வரலாற்றுப் பாடம் நடத்தறப்ப அதுவும் போர்கள், புரட்சி, பத்தி நடத்தினாங்கன்னா அவ்வளவு உணர்ச்சி மயமா இருக்கும்.''

''முதல் இந்திய சுதந்திரப் போர்ல ஜான்சி ராணியோட போராட்டம் பத்தி நடத்தினப்போ அப்படியே போர்க்களத்திலே நின்று போராடற மாதிரி இருந்தது அரவிந்த்.''

''அதே மாதிரி தான் ராணி மங்கம்மா, குயிலி, வேலு நாச்சியார் இவர்களைப் பத்தி சொல்லும் போதெல்லாம் அப்படியே நிமிர்ந்து உட்கார்ந்திருப்போம்.''

''அதோ தெரியுது பார்த்தியா, அது தான் என்னோட கிளாஸ் ரூம். ஏழாவது படிச்சப்போ. ''

- மாலதி சொல்லிக் கொண்டே போனாள்.

''பள்ளி ஆண்டு விழா இந்த கிரவுண்டல தான் நடக்கும். அதோ அங்க பெரிய ஸ்டேஜ் போட்டிருப்பாங்க. விஜயலெட்சுமி டீச்சர் என்னை ஏதாவது ஒரு வேஷத்துல நடிக்கச் சொல்லி பயிற்சி கொடுப்பாங்க. வீரபாண்டிய கட்டபொம்மன், திலகர், பாரதியார் வேஷம் கூட போட்டு நடிச்சிருக்கேன்.''

''பெண் போராளிகள் வேஷம் போட்டதே இல்லையா மாலதி?''

- அரவிந்த் கிண்டலாக கேட்டான்.

''இல்லை, அரவிந்த். நான் நல்லா வீர வசனம் பேசுவேன்னு சொல்லி விஜயலெட்சுமி டீச்சர் எனக்கு எப்போதும் ஆண் வேஷம் தான் கொடுப்பாங்க.''

''அதே மாதிரி காலை வழிபாட்டுக் கூட்டத்துல நான் தான் திருக்குறளும், இன்று ஒரு தகவலும் சொல்வேன். ரொம்ப சப்தமா சொல்வேன். அதனாலயே தினமும் என்னையே திருக்குறளும், இன்று ஒரு தகவலும் சொல்ல சொல்வாங்க. அதனால அப்பவே நான் ஸ்கூல் முழுக்கபேமஸ்;.''

முகத்தில் பெருத்த உணர்ச்சி பொங்கியது மாலதிக்கு.

''நான் விஜயலெட்சுமி டீச்சருக்கு ரொம்ப நன்றிக் கடன் பட்டிருக்கேன் அரவிந்த். ஏன்னா உண்மையிலேயே எனக்குள் போராட்ட உணர்வை விதைச்சது அவங்கதான். அவங்க

மட்டும் எனக்கு பாடம் எடுக்காம போயிருந்தா நான் ஒரு பயந்தாங் கொள்ளிப் பொண்ணா வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்திருப்பேன் அரவிந்த்.''

''இவ்வளவு புடிச்ச ஸ்கூலை விட்டுட்டு ஏன் அம்மாபேட்டைக்கு போன மாலதி!''

''சொன்னா நம்பறதுக்கு கஷ்டமா இருக்கும் அரவிந்த்.''

''அப்படி என்ன காரணம் மாலதி நம்ப முடியாம?''

''எத்தனையோ பேர் வாழ்க்கையை குப்புறத்தள்ளி குழிபறிச்ச நீடாமங்கலம் ரயில்வே கேட் என் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும், கேட் போட்டுருச்சி அரவிந்த்.''

அவள் கம்பி கிராதியைப் பிடித்து எழுந்து கொண்டாள்.

''ஆமா அரவிந்த், நீடாமங்கலம் கேட் என்னோட வெற்றிப் பாதையை மறைச்சி நின்னு வேடிக்கைப் பாத்திடுச்சி அரவிந்த்.''

- மாலதி விளக்கமாகச் சொல்லட்டும் என்று காத்திருந்தான் அரவிந்த்.

''விஜயலெட்சுமி டீச்சர் நான் எட்டாங் கிளாஸ் படிக்கிறப்பயே எப்படி ஐ.ஏ.எஸ். பரீட்சைக்கு தயார் ஆகணும்னு சொல்லிக் கொடுத்தாங்க அரவிந்த். ஐ.ஏ.எஸ். என்கிறது ஒரு படிப்பு இல்ல. அரு ஒரு பரீட்சை என்பதை நான் எட்டாங் கிளாஸ்லேயே புரிஞ்சி கிட்டேன். காரணம் விஜயலெட்சுமி டீச்சர்.''

''எனக்கு மட்டுமல்ல அரவிந்த். எங்க கிளாஸ் பசங்க எல்லோரையும் ஊக்குவிச்சாங்க. இதே ஸ்கூல்ல ப்ளஸ் டூ முடிங்க. அப்புறம் திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழகத்திலேயோ இல்ல தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலேயோ சேர்ந்து ஏதாவது ஒரு டிகிரி படிங்க போதும். யுனிவர்சிட்டிக்குத் தான் போகணும்னு இல்ல. பூண்டி காலேஜ், திருவாரூர் திரு.வி.க. காலேஜ் இப்படி எங்க வேணாலும் சேருங்க. சேர்ந்த முதல் வருஷத்துலேயே ஐ.ஏ.எஸ். பரீட்சைக்கு தயார் ஆக ஆரம்பிச்சிருங்கன்னு சொல்வாங்க.''

''இன்ட்ரஸ்டிங் மாலதி'' எட்டாங் கிளாஸ் படிக்கிறப்பவே ஐ.ஏ.எஸ். புடிக்கிறதப் பத்தி ஒரு டீச்சர் கிளாஸ்ல பேசி இருக்காங்கன்னா, ஷி ஈஸ் ரியலி கிரேட்.''

''அது மட்டுமல்ல அரவிந்த். வேற யாராவது டீச்சர் ஆப்சண்ட் ஆயிட்டாங்கன்னா, இவங்க வாலண்டியரா கிளாசுக்கு வந்திடுவாங்க. ஐ.ஏ.எஸ். பாடத்திட்டம் பத்தி எல்லாம்

சொல்லிடுவாங்க. இறையன்பு அவர் எழுதின ''ஐ.ஏ.எஸ் வெற்றிப் படிக்கட்டுகள்'' என்கிற புத்தகம் எப்போதும் அவங்க கையிலேயே இருக்கும். அதைப் பார்த்து கேள்வியும் கேட்பாங்க. க்ளாஸ் அவ்ளோ இன்ட்ரஸ்டிங்கா இருக்கும்.''

''நீ சொல்றதைக் கேட்டா, எனக்கே அவங்க கிளாஸ்ல சேர்ந்து படிக்கணும் போல இருக்கு மாலதி. யூ ஆர் ரியலி லக்கி மாலதி.''

''இல்ல அரவிந்த். நான் அன் லக்கி.'' என்னாலேயே அவங்க கிளாஸ்ல தொடர்ந்து படிக்க முடியல அரவிந்த். அவங்க திடீர்னு டிரான்ஸ்பர் வாங்கிகிட்டு தஞ்சாவூர் போயிட்டாங்க.''

''எதுக்காக டிரான்ஸ்பர் வாங்கினாங்க?''

''கேட், கேட், நீடாமங்கலம் ரயில்வே கேட் தான் காரணம்.''

''புரியல மாலதி''

''டெய்லி அவங்க தஞ்சாவூர்ல இருந்து தான் இங்க வந்திட்டு இருந்தாங்க. ஆனா நீடாமங்கலம் கேட் போட்டுட்டா பல மணி நேரம் லேட் ஆயிடும். இத்தனைக்கும் தஞ்சாவூர்லேந்து, கொரடாச்சேரி ஒரு மணி நேரம் பயணம்தான். ஒன்பது மணி ஸ்கூலுக்கு அவங்க வீட்டுல காலைல ஆறு மணிக்கே கிளம்பிடுவாங்களாம். அப்படியும் 'கேட்'ல சிக்கி ஸ்கூல் வர லேட் ஆயிடும். பல தடவை தலைமை ஆசிரியர் அறையில போய் விளக்கம் சொல்லிருக்காங்க. அதுவே அவங்களுக்கு பெரிய கஷ்டம் தான்.

பள்ளிக் கூடத்துக்கு வாரத்துல ஒரு நாளைக்காவது லேட்டா தான் வருவாங்க. இதை தவிர்க்கிறதுக்காகவே அவங்க டிரான்ஸ்பர் வாங்கிட்டுப் போயிட்டாங்க.''

''ஒரு நாள் முழுக்க உட்கார்ந்து அழுதேன் அரவிந்த். அவங்க வராத ஸ்கூலை என்னால பார்க்கவே முடியல. வீட்டுல போய் அம்மா மடியில படுத்துகிட்டு அப்படி அழுதேன்.''

''அவங்க டிரான்ஸ்பர்ல போன பிறகு எனக்கு பெரிய ஆதரவு கிடைக்கல அரவிந்த். அப்புறம் வர்ற வழியில பசங்களோட கேலியும், கிண்டலும் அதிகமா இருந்திச்சி. அப்புறம் அம்மா தான் என்னை அம்மா பேட்டை ஸ்கூல்ல சேர்த்து விட்டாங்க. ஒரு சராசரி மாணவியா படிச்சு முடிச்சுட்டேன். மனதுக்குள்ளே விஜயலெட்சுமி டீச்சர் ஏத்தி வச்ச போராட்ட நெருப்பு மட்டுமே எனக்குள்ள எறிஞ்சு கிட்டே இருந்திச்சு அரவிந்த்.''

''நீடாமங்கலம் ரயில்வே கேட்டோட முதல் விக்கெட் நான் தான்.

முதல் பலியும் நான் தான். அதற்கு சாட்சியும் நான் தான். ஒரு வேளை விஜயலெட்சுமி டீச்சர் இதே பள்ளிக்கூடத்துல இருந்திருந்தா, நானும் இங்கேயே படிச்சிருப்பேன். நிச்சயமா அவர்களே என்னை ஐ.ஏ.எஸ். பரீட்சைக்கு தயார் படுத்தியிருப்பாங்க. நேரடியா ஐ.ஏ.எஸ். ஆகலைன்னாலும், 'குரூப்-ஒன்;' எக்ஸாம் எழுதி சப்-கலெட்டராவது ஆகியிருப்பேன். அந்த கேட் என் வாழ்க்கைப் பாதையை மறைச்சி நின்னுடுச்சி அரவிந்த்.''

''என்னோட பாதையை மட்டும் இல்ல. என்னை மாதிரி வாழ்க்கையில முன்னேறத் துடிக்கும் நினைச்ச எத்தனையோ பேருக்கு அந்த கேட் தடையா இருந்திடுச்சி அரவிந்த். எங்க கிளாஸ்ல ஆண்கள், பெண்கள்-னு ஐம்பது பேர் இருப்போம். விஜயலெட்சுமி டீச்சர் மட்டும் இருந்திருந்தாங்கன்னா எங்க ஐம்பது பேர்லேர்ந்து ஒரு நேர்மையான ஐ.ஏ.எஸ். அதிகாரி, ஒரு நேர்மையான ஐ.பி.எஸ். அதிகாரி உருவாகியிருப்பாங்க அரவிந்த்.''

''அது மட்டுமல்ல, ஐம்பது மாணவர்களும் நிச்சயமா ஏதாவது ஒரு துறையில் கண்டிப்பா ஜெயிச்சிருப்போம். இதெல்லாம் நடக்காம போனதுக்கு அந்த கேட் தான் காரணம்னு சொன்னா யாருமே நம்ப மாட்டாங்க அரவிந்த்.''

- அவள் கலங்கி அழுதாள்.

- இருள் கவ்வ ஆரம்பித்தது.

''இது ரொம்ப மோசமான ஏரியாவா?''

''ஆமாம் ஓட்டு போட பணம் தரலைன்னு சாலை மறியல் பண்ணப் போயிட்டாங்க''

**-எஸ். மோகன், கோவில்பட்டி.**



7

புன்னை நல்லூர் மாரியம்மன் கோயிலில் அரவிந்தன், மாலதி, சிவா, சந்தானராமன் நான்கு பேரும் அம்மனுக்கு அர்ச்சனை செய்து விட்டு வந்து பிரகாரத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

தேங்காய் மூடியைக் கீறி ஆளுக்கொரு தேங்காய் கீற்றுக் கொடுத்தாள் மாலதி. இளந்தேங்காய் காலை வெயிலுக்கு இதமாக இருந்தது.

ஆளுக்கொரு வாழைப்பழமும் சாப்பிட்டார்கள்.

''சாதாரண வாழைப் பழங்களும் சந்நிதிக்குள்ள போயிட்டு வந்தவுடனே அதுக்குன்னு ஒரு தெய்வாம்சம் வந்திடுது பாத்தியா அரவிந்த். வாழைப்பழத்தோட டேஸ்ட்டே வித்தியாசமா இருக்குல்ல?''

''உண்மைதான் மாலதி. அதுவும் உன் கையால கொடுக்கறப்ப அந்த அம்மனே வந்து பிரசாதம் கொடுக்கற மாதிரி இருக்கு.''

- அரவிந்தன் சொன்னான்.

''ஏய் என்ன கிண்டலா?''

''நிச்சயமா கிண்டல் பண்ணல மாலதி.''

''இப்படி ஒரு சிவப்பு புடவை கட்டிகிட்டு, நெற்றியில வித்தியாசமா சந்தனப் பொட்டு, ஆதி பராசக்தி கோயிலுக்கு பாத யாத்திரை போற கிராமத்துப் பொண்ணு மாதிரி இருக்க மாலதி. அதனால தான் சொன்னேன். உண்மையிலேயே அம்மன் வந்து பிரசாதம் கொடுக்கற மாதிரி ஃபீல் பண்ணினேன்.

''கோயிலுக்கு வர்றப்ப அதுக்கான ட்ரஸ்ஸோட வந்தா கூடுதலாக ஆத்மார்த்தமாக இருக்கும் அரவிந்த். நான் அதை பலமுறை பீல் பண்ணிருக்கேன். அதான் இப்படி சிவப்பு புடவை எல்லாம்.''

''பல தடவை வந்திருக்கியா? நீடாமங்கலத்துல இருந்து இவ்வளவு தூரம் வண்டியிலேயே வந்துடுவியா?''

''முன்னெல்லாம் குடும்பத்தோடு கிளம்பி பஸ்லதான் வருவோம். காலைல கிளம்பினா இதோ இருபத்தைந்து கிலோ மீட்டர் இருக்கிற கோயிலுக்கு பதினோரு மணிக்குத்தான் வருவோம். வண்டி சரியான நேரத்துக்கு வராது. அதான் கேட் போட்டுடுவாங்களே! திருவாரூர்ல

இருந்து வர்ற வண்டி எல்லாம் கேட்டுலேயே சிக்கிகிட்டு நிக்கும்.''

''அதனால தான் வண்டில வர்றதுக்கு முடிவு பண்ணினேன். பெரும்பாலும் நானும் அம்மாவைக் கூட்டிக்கிட்டு டபுள்ஸ் வந்துடுவேன். அப்பா வந்தா, அவரு ஒரு வண்டியிலே வந்திடுவார். புன்னை நல்லூர் என்ன தஞ்சாவூருக்கு கூட டூவீலர்ல போயிட்டு வந்திடுவேன். இப்ப எல்லாம் பஸ்ச எதிர்பார்க்கறதே இல்ல அரவிந்த். சரி இப்ப வாங்க எல்லோரும் பிரகாரம் சுத்தி வருவோம்.''

- அவள் எழுந்து கொண்டாள்.

''இன்னும் கொஞ்ச நேரம் உட்கார்ந்து இருக்கலாமே மாலதி.''

- அரவிந்தன் சொன்னான்.

''கோயிலுக்கு வந்தா பிரகாரம் சுத்தி வந்திடணும். வேணும்னா அங்க குளக்கரையிலே உட்கார்ந்துக்கலாம். கோயில் பிரகாரத்துக்குள்ளேயே ஒரு குளம். வெளியில ஒரு குளம் இருக்கு. இரண்டு குளங்களுமே நீர் நிரம்பி ரொம்ப அழகாக இருக்கும். எந்திரிங்க எல்லோரும்.''

- மாலதி எல்லோரையும் அதட்டினாள்.

மறு பேச்சு இல்லாமல் எழுந்து கொண்டனர்.

''இந்தக் கோயில்ல ஒரு பெரிய விசேஷம் என்னன்னா, மூலவரான முத்து மாரியம்மன் சந்நிதி பக்கத்துலயே துர்க்கை அம்மன் சந்நிதி இருக்கறது தான். அம்மனுக்கு வலப்பக்கம் பேச்சியம்மன் சந்நிதியும் இருக்கு. முப்பெரும் தேவியர் அருள் பாலிக்கிற மாதிரி. இங்க வழிபட்டா கல்வி, செல்வம், பாதுகாப்பு எல்லாம் கிடைக்கும்.''

''நீ ஒரு என்சைக்ளோ பீடியா மாதிரி மாலதி''

''எவ்வளவு விஷயங்கள் தெரிஞ்சி வைச்சிருக்கிற''

''கல்லணை பத்தி பேசற, பாடகச்சேரி மகான் பத்தி அன்னைக்கு சொன்ன! இன்னைக்கு இந்தக் கோயில்.''

''இந்தக் கோயிலைப் பற்றி இன்னும் நான் விசயமே சொல்லலையே''

- மாலதி சொன்னாள்.

''இதுவரைக்கும் சொல்லலைன்னாலும் இனிமே சொல்வ இல்ல!''

- அரவிந்த் சொன்னதைக் கேட்டுவிட்டு கலகலவென்று சிரித்தாள் மாலதி.

''நீங்க கேட்டாதான் சொல்வேன்''

''கண்டிப்பா சொல்லு மாலதி. இந்தக் கோயில் பத்தியெல்லாம் நாங்க வேற எப்ப தெரிஞ்சிக்க போறோம்.''

மூன்று பேரும் கோரஸாக சொன்னார்கள்.

ரொம்ப பழமையான கோயில் இது. சிவன் கோயில்கள், பெருமாள் கோயில்கள் மட்டுமே ராஜாக்களால் கட்டப்பட்டது. சிறு தெய்வம்னு சொல்லப்படற மாரியம்மனுக்கு கோயில் கட்டி வழிப்பட்டது ஆச்சரியமான விஷயம் தான். பிற்காலச் சோழர்கள் காலத்துக்கு முந்தியே அதாவது கிட்டத்தட்ட ஆயிரத்து நானூறு வருசங்களுக்கு முன்னாடியே சின்னக் கோயிலா இருந்திருக்கு. சோழர் காலத்துல கொஞ்சம் பெரிய கோயிலா கட்டியிருக்காங்க.

''நீ பேசறதெல்லாம் புரட்சி செய்வோம், புதுமை படைப்போம்னு பேசற? செயல்பாட்டுல பார்த்தா இப்படி சிவப்பு சேலை, வேப்பிலைன்னு கிராமத்துக் காரியா இருக்கியே.''

''மறுபடியும் அபச்சாரம் பேசற... வாயில போட்டுக்க...''

புரட்சிப் பெண் எப்படி இருக்கணும்னு நினைக்கிற? நெத்தியில பொட்டு வச்சுக்காம, தாலி கட்டிக்காம, ஜீன்ஸ் பேண்ட் போட்டுகிட்டு ஏதாவது போர்டை கையில வச்சுகிட்டு ரோட்டில உட்கார்ந்திருக்கறது தான் புரட்சியா? அப்படி இருக்கறவங்களையும் நான் தப்பு சொல்ல மாட்டேன். ஆனா புரட்சிப் பெண் இப்படித்தான் இருக்கணும்னு நீங்க தேவையில்லாத ஒரு அடையாளத்தை உருவாக்காதீங்க.''

''உண்மை தான் மாலதி''

''புரட்சி என்பது நாம் செய்யற செயல்ல இருக்கணும். சிந்தனையில இருக்கணும். வெறும் ஆடைகள்ல இருக்கக்கூடாது.''

''நீட்டலும் மழித்தலும் வேண்டா உலகம்
பறித்தது ஒழித்து விடின்''

- நீ திருக்குறள் படிச்சிருக்கியா?

''மொட்டையடிச்சுகிட்டோ, தாடி வச்சிகிட்டோ தான் சாமியாரா இருக்கணும்னு அவசியம் இல்ல. உலகம் தப்புன்னு சொல்ற வேலைகளைச் செய்யாம இருந்தாலே போதும். அதேதான் புரட்சியாளர்களுக்கும். தாடியும், ஜோல்னாப் பையும் வச்சிகிட்டு தான் புரட்சி பண்ணனும்னு அவசியம் இல்ல.''

- அரவிந்தன் அமைதியாக இருந்தான்.

''திருவள்ளுவர் ரேஞ்சுக்கு கூட போக வேணாம் அரவிந்த்.

சமுத்திரக்கனி டைரக்ட் பண்ண சில படங்களைப் பார். புரட்சின்னா என்னன்னு புலப்படும்.''

''ஆத்தா புன்னைநல்லூர் மாரியாத்தா தெரியாம கேட்டுட்டேன்! மன்னிச்சுக்க ஆத்தா.''

''அந்த பயம் இருக்கட்டும்.''

சொல்லிவிட்டு சிரித்தாள் மாலதி.

''இது என்ன மாலதி! வித்தியாசமா உட்கார்ந்திருக்காங்க? அந்தப் பெரியவரோட கையில இரும்புச் சங்கிலி போட்டு பிடிச்சிருக்காங்க?''

''நீயே போய் கேளேன்! அதுக்கும் நான் தான் விளக்கம் சொல்லணுமா?''

- மாலதி முறைத்தாள்.

''நான்கு பேரும் அவர்கள் பக்கத்துல போய் அமைதியாக உட்கார்ந்திருந்து கொண்டார்கள். பெரியவர் மட்டுமே மனநிலை பிறழ்ந்தவர் போல இருந்தார். மற்ற எல்லோரும் நார்மலாகத்தான் இருந்தார்கள்.''

''என்ன வேண்டுதல் உங்களுக்கு? இவருக்கு என்னாச்சு? சங்கிலியில கட்டி விலங்கு போட்ட மாதிரி கையில பிடிச்சிருக்கீங்க?''

- அரவிந்தன் கேட்டான்.

- அவர்கள் யாரும் பதில் சொல்லவில்லை. அமைதியாக இருந்தார்கள்.

''மன்னிச்சுடுங்க, நான் ஏதாவது உங்களைக் காயப்படுத்திட்டேனா?

- அரவிந்தன் மெதுவாகச் சொன்னான்.

''நான் ஏதாவது உங்களுக்கு உதவி பண்ணலாமா? அதைச் சொன்னாக் கூட போதும். செய்யறேன்.''

- அரவிந்தன் மறுபடியும் கேட்டான்.

''நீங்க ஒண்ணும் தப்பா கேட்கல சார். மன்னிப்பெல்லாம் கேட்க வேண்டாம். நாங்க பிரச்சனையை சொல்றோம். என்ன உதவி செய்யலாம்னு நீங்களே முடிவு பண்ணி செய்யுங்க. என் பேரு சுந்தர். இவரு எங்க அப்பா கோபால கிருஷ்ணன். இவ என்னோட தங்கச்சி திவ்யா, இவங்க என்னோட அம்மா.''

சுந்தர் பேச ஆரம்பித்தான்.

''இரண்டு வருசத்துக்கு முன்னாடி நடந்த பிரச்சனை சார் இது.

எங்களுக்கு சொந்த ஊரு நீடாமங்கலம் பக்கத்துல இருக்கற நத்தம். இரண்டு ஏக்கர் நிலம் இருந்துச்சு. அதுல தான் சாகுபடி பண்ணி நல்ல வருமானம் வந்தது. நான் டவுன்ல ஒரு ஸ்வீட் கடையில வேலை பாத்துகிட்டு அப்பாவுக்கு விவசாயத்துலயும் உதவியா இருந்தேன் சார்.''

- சுந்தருக்கு மூச்சு வாங்கியது.

''பொறுமையா சொல்லுங்க சார். அவசரமில்ல''

- அரவிந்தன் சொன்னான்.

''என் தங்கச்சிக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணி இருந்தோம். மாப்பிளையும் விவசாயம் செய்றவர், தங்கமானவர். தை முப்பதுல கல்யாணம் நடக்க இருந்திச்சு. பொங்கல் கழிச்ச அஞ்சாவது நாள் எல்லாம் போயிடுச்சு.''

அறுவடை முடிஞ்சி நெல்லை ஏத்திகிட்டு நீடாமங்கலம் டி என் சி எஸ் சி சென்டர்ல போடறதுக்காக போயிட்டு இருந்தோம். அந்த வருசம் நல்லா விளைஞ்சிருந்திச்சு. முன்ன மாதிரி மூட்டை கட்டி நெல் ஏத்தறதில்ல. மெஷின் அறுவடை என்பதால அப்படியே டிப்பர்ல கொட்டிடுவாங்க. அதை ஏத்திகிட்டு போய்ட்டு இருந்தோம். அப்பா டிராக்டர் ஓட்டிகிட்டு இருந்தாங்க.

''கரெக்டா நாங்க போற நேரம் நீடாமங்கலம் கேட் போட்டுட்டாங்க. அன்னைக்கு முகூர்த்த நாள். நெல்லை சென்டர்ல போட்டுட்டு காசை வாங்கிட்டு அப்படியே தஞ்சாவூர்ல போய் நகை எடுக்கறதா யோசிச்சிகிட்டு இருந்தோம். கேட் தொறக்கறதுக்கு லேட் ஆகும்னு சொன்னாங்க. அப்பா உடனே தஞ்சாவூர் டி என் சி எஸ் சி சென்டர்ல நெல்லை போட்டுடலாம்னு சொல்லிவிட்டு வெண்ணாத்தங்கரை, மூணாறு தலைப்பு வழியா டிராக்டரை ஓட்டிகிட்டு வந்தாங்க. மூணாறு தலைப்புக்கு முன்னாடியே ஆத்தங்கரை ஓதம் வாங்கி எங்க டிராக்டர் விழுந்துடிச்சி. நானும், அப்பாவும், டிராக்டரோட சேர்ந்து தண்ணிக்குள்ளே விழுந்துட்டோம். நல்ல வேலை ஆள் நடமாட்டம் இருந்ததால எங்களை காப்பத்திட்டாங்க. ஆனா ஒரு பிடி நெல் கூட அள்ள முடியாம ஆத்தோட போய்டுச்சி. டிராக்டரை ரெண்டு நாளைக்கு அப்புறம் தான் வெளியே இழுத்தாங்க.''

விஷயம் மாப்பிள்ளை வீட்டு காரங்களுக்கு தெரிஞ்சது. நகை வாங்க அறுவடை செஞ்ச நெல்லு ஆத்தோட போச்சு. கடனை

உடனை வாங்கி கல்யாணத்துக்கு பிறகு நகை போடறோம்னு சொன்னோம். மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ஒத்துக்கல. எங்களுக்கு ஏதோ அபச குணமா படுது. பொண்ணுக்கு நேரம் சரியில்லன்னு சொல்லிட்டு கல்யாணத்தை நிறுத்திட்டாங்க.

கல்யாணம் நின்னு போயிடுச்சுன்னு தெரிஞ்ச பிறகு தான் அப்பா ஒரு மாதிரியா ஆயிட்டாங்க. நல்ல வேளை நாங்க உடனே தஞ்சாவூர் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிட்டோம். ஒன்றும் பயப்படாதீங்க மருந்து, மாத்திரையிலயே குணப்படுத்திடலாம்னு சொல்லிட்டாங்க. இப்ப எவ்வளவோ பரவால்லைங்க. அப்பா நல்லா குணமாயிட்டாங்க. இப்படி அம்மன் சன்னதியில இருக்கறது மனசுக்கு ஆறுதலா இருக்கு சார்.

''அன்னைக்கு நீடாமங்கலத்தில கேட் போடாம இருந்திருந்தா, இவ்வளவு விசயமே நடந்திருக்காது சார். இவ்வளவுக்கும் பிரச்சனை கேட் தான் சார்.''

- என்று சொன்னான் சுந்தர்.

அரவிந்த் மாலதியை திரும்பிப் பார்த்தான்.

''நீடாமங்கலம் கேட்டோட இரண்டாவது விக்கெட். ''

- மாலதி சொன்னாள்.

''சீக்கிரமே நீடாமங்கலத்துல மேம்பாலம் கட்டறதுக்கு ஏற்பாடு செய்யறோம் சுந்தர்'' என்று தட்டிக் கொடுத்துவிட்டு எழுந்தான் அரவிந்தன்.

*''மன்னர் ரொம்ப அப்செட்டா இருக்காரே ஏன்?''*

*''அவருடைய குனிந்த பார்வையை மிகைப்படுத்தி புலவர் பாடி விட்டாராம்''*

**-சீர்காழி ஆர்.சீதாராமன்.**



- வழக்கத்துக்கு மாறாக சங்கிலியை கழட்டிவிட்டு அரவிந்தனைப் பார்த்து மகிழ்ச்சியோடு கும்பிட்டார் கோபால கிருஷ்ணன்.

- திவ்யாவும், சுந்தரும் அப்பாவைக் கட்டிக் கொண்டார்கள்.

# 8

‘‘நேத்து புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில்ல பார்த்த அந்த கோபால கிருஷ்ணன் பற்றிய செய்திகளையும் ஒரு கேஸ் ஸ்டடி மாதிரி ரிப்போர்ட் தயார் பண்ணிட்டேன் மாலதி. விஜயலெட்சுமி டீச்சர் டிரான்ஸ்பர்ல போனது, அதனால மாணவர்கள் எப்படி பாதிக்கப்பட்டாங்க என்பதையும் ரிப்போர்ட்டா தயார் பண்ணிட்டேன் மாலதி.’’

- அரவிந்தன் சொன்னான்.

‘‘சரி.... இப்படி நாம எல்லோரும் ரோட்டுல நின்னு பேசிகிட்டு இருக்க வேணாம். அடுத்தது இன்னும் சில பிரச்சனைகளை பதிவு செய்ய வேண்டிருக்கு. எங்க போய் உட்கார்ந்து பேசலாம்?’’

- மாலதி கேட்டாள்.

ஆளாளுக்கு கொஞ்ச நேரம் யோசித்தார்கள்.

‘‘நீயே சொல்லு மாலதி’’

‘‘வலங்கைமான் பக்கம் போகலாம் அரவிந்த். ரெண்டு விஷயங்கள் பார்க்கலாம். ஒன்று, காவிரிக்கரையோரமா வாழைத்தோப்பு நிறைய இருக்கும். பச்சைப்பசேல்னு கண்ணுக்கு குளுமையா இருக்கும். வலங்கைமான்லேர்ந்து கோவிந்தகுடி வழியா பாபநாசம் வரைக்கும் போய்ட்டு வரலாம். நேரம் இருந்தா பாபநாசம்-திருப்பாலத்துறையில் பழைய நெற்களஞ்சியம் இருக்கு. அதையும் பாத்துட்டு வரலாம். அப்புறம் வலங்கைமான்ல நிறைய செங்கல் காளவாசல் இருக்கும். தமிழ்நாட்டிலேயே செங்கல்களுக்கு பெயர் போன இடம் வலங்கைமான் தான். இங்க இருக்கற மண் அப்படி...’’

‘‘மாலதி நீ காளவாசல்னு சொன்னீல்ல? அது ஆக்சுவலா சூளை தானே!’’

- அரவிந்தன் கேட்டான்.

‘‘நீங்க சென்னை வாசியாச்சே சூளைன்னாதான தெரியும். சென்னைப் பக்கம் இருக்கறவங்க இதை செங்கல் சூளைன்னு

சொல்வாங்க. சென்னையில கூளைன்னே ஒரு பெரிய ஊர் இருக்கு இல்லியா? அதே மாதிரி மதுரையில இதை காளவாய்ன்னு சொல்லாம காளவாசல்னு சொல்வாங்க.''

சென்னையில கூளைங்கிற மாதிரி, மதுரையில காளவாசல்னே ஒரு பெரிய ஏரியா இருக்கு. ஆரப்பாளையம் பக்கத்துல இருக்கு. முன்னாடி செங்கல் சுடுற காளவாசலா இருந்திருக்கு. இப்ப போனா மேம்பாலம் எல்லாம் கட்டி பக்கா சிட்டியா இருக்கு. நம்மூர்ல செங்கல் சுடுற இடத்தை காளவாய்னுதான் சொல்வாங்க.

''அது தான் சொன்னேன் நீ ஒரு என்சைக்ளோபீடியான்னு''

அரவிந்தன் கிண்டல் செய்தான்.

''உதைபடுவ அரவிந்த்''

''அது சரி நாம இப்ப என்ன சுற்றுலாவாப் போறோம். எங்காவது உட்கார்ந்து பேசலாம்னு தானே போறோம்!'' எங்க போய் உட்கார்றது!''

அரவிந்த் கேட்டான்.

''எங்க ஊர்க்காரர் ஒருத்தர் கோவிந்தகுடி போற வழியில் அணிய மங்கலத்தில் காளவாய் போட்டுருக்கார். பெரிய அளவுல செஞ்சிட்டிருக்காரு. போனா உட்கார்ந்து பேச டெண்ட் போட்டிருப்பார்.''

''அப்ப அங்கேயே போகலாம்.''

எல்லோரும் வண்டியை ஸ்டார்ட் பண்ணிக் கொண்டு கிளம்பினார்கள்.

சாலையின் இரு புறங்களில் வாழைத் தோப்புகள். அடர்த்தியான பசுமையைப் போர்த்தியிருந்தன.

''கொஞ்ச நேரம் வண்டியைத் தள்ளிகிட்டே போவோமே. ப்ளீஸ்''

- மாலதி சொன்னாள்.

எல்லோரும் வண்டியை நிறுத்தி விட்டு தள்ளிக் கொண்டே நடந்தார்கள்.

''இங்க மட்டும் காத்து எப்படி இவ்வளவு சில்லுனு இருக்கு!''

- அரவிந்தன் கேட்டான்.

''அதான் சொன்னேனே, வாழைத் தோப்பிற்கு வலப்புறம் காவிரி ஓடுது, வாழை மரத் தோப்பில இருந்து பாரு, அது ஆத்துல தண்ணி ஓடுறது தெரியும்.''

- மாலதி சொன்னாள்.

''வாழைமரம் எல்லாம் ஒரே சீரா வளர்ந்திருக்கு. அதுவே தனி அழகு தான்.''

''ஒரு தோப்புக்கு பல பேர் வேலை செய்வாங்க அரவிந்த். வாழைக் கட்டையை நட்டு, அது துளிர்த்து வர்றப்ப ஏழு தடவை புடிச்சி விடணும்னு சொல்வாங்க.''

- மாலதி சொன்னாள்.

''பிடிச்சி விடணுமா? அப்படீன்னா?''

''வாழை மரம் அது பாட்டுக்கு நெடு நெடுன்னு வளர்ந்துடும். அப்படி வளர்ந்திடுச்சின்னா வாழைத் தார் போடறப்ப வெயிட் தாங்காம விழுந்திடும். அதனால வாழை மரத்தை வளர, வளர சீவி விடுவாங்க. அப்படி ஏழு தடவை சீவி விடணும்.''

''ஓ''

''அப்படி சீவி விட்டு வளர்க்கறதால தான் இந்த வாழை மரமெல்லாம் ஒரே சீரா இருக்கு. அழகாவும் இருக்கு. கடுமையான உழைப்போட பலன் எப்போதும் அழகாத்தான் இருக்கும் அரவிந்த்.''

''பாரேன்.. அதுல ஒரு தத்துவத்தை.. நீ கலக்கு மாலதி.''

''வேணாம் அரவிந்த்... ஓவரா ஓட்டாத...''

''அப்ப சரி... வண்டியை ஓட்டுவோம்.... இதுக்கு மேல என்னால தள்ள முடியாது.''

அரவிந்தன் சொன்னவுடன், மறுபடியும் எல்லோரும் வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டார்கள்.

தூரத்தில் நிறைய கீற்றுக் கொட்டகைகள் தெரிந்தன.

''அதோ அது தான் நம்ம மாரப்பரோட காளவாய்.''

- கை நீட்டியபடியே சொன்னான் சிவா.

எல்லோரும் கொட்டகை நிழலில் வசதியாக உட்கார்ந்து கொண்டார்கள்.

மொட்டை வெயிலில் மண் பிசைவதும், கல் அறுப்பதுமாய் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டு இருந்தார்கள்.

''இந்த வெயில்ல நின்று எப்படிப்பா வேலை செய்யறாங்க! நம்மால கொஞ்சம் தூரம் நடந்து போகக் கூட முடியல.''

அரவிந்தன் மூச்சு வாங்கினான்.

''அவங்களுக்கு அது நல்லா பழகிடுச்சு அரவிந்த். வெயிலைப் பொருட்படுத்தமாட்டாங்க. ஆனாலும் கல் அறுக்கறது அவ்வளவு

சாதாரண வேலை இல்லை. ரொம்ப கஷ்டமானது அரவிந்த்.''

- மாலதி பரிதாபமாகச் சொன்னாள்.

''அதே சமயம் தமிழ் நாட்டிலேயே தரமான செங்கல் வலங்கைமான் கல் தான். நீ வேண்ணா யூடியூப் பாரேன் தெரியும்.''

- மாலதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே

அப்போது தான் காலவாயில் வேலை செய்துகொண்டிருந்த அந்த இளைஞன் இவர்களை நோக்கி வந்தான்.

வந்தவுடனேயே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''சார் ஐயாம் விக்னேஷ். பிரம் செம்மங்குடி''

''வெல்கம் சார் உட்காருங்க''

அரவிந்தன் சொன்னான்

இங்க தான் வேலை செய்யறீங்களா?

''ஆமா சார் கல் அறுக்கறேன்''

''படிச்சிருப்பீங்க போல''

''ஆமாசார்பி.எஸ்.சி. கம்ப்யூட்டர்அப்ளிகேஷன்படிச்சிருக்கேன்''

''எங்க படிச்சீங்க?''

''கும்பகோணம் மென்ஸ் காலேஜ் சார்''

''அப்புறம் ஏன்? படிச்ச படிப்பை விட்டுட்டு இதுக்கு வந்துட்டீங்க?''

''இது தற்காலிகமா சார்? நல்ல வேளை தேடிட்டு இருக்கேன்''

''கம்ப்யூட்டர் சென்டர்ல கூட வேலை பார்க்கலாம்ல, ஏன் செ

''மன்னருக்கு பெண் ஆசை கிடையாது அமைச்சரே!''

''அதுக்காக அந்தப்புரத்தை ஆசிரமமாக மாற்றுவது நியாயமா?''

**-சீர்காழி ஆர்.சீதாராமன்.**



ங்கல் சூளையில வேலை பார்க்கறீங்க?''

''அது ஒரு சோகக் கதை சார்''

- விக்னேஷ் அங்கலாய்த்துக் கொண்டான்.

அரவிந்தன், மாலதி, சிவா, சந்தானராமன் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''கேட்கலாமா? வேண்டாமா?'' அரவிந்தன் மாலதியிடம் கண்களால் கேட்டான்.

அவனே சொல்ல ஆரம்பித்துவிட்டான்.

''கும்பகோணத்துல ஒரு கம்ப்யூட்டர் சென்டர்ல தான் வேலை பார்த்துகிட்டு இருந்தேன் சார். இரண்டு வருஷம் எக்ஸ்பீரியன்ஸ். தஞ்சாவூர் கலெக்டர் ஆபீஸ்ல டேட்டா எண்ட்ரி ஆபீசர் வேலைக்கு கால்.பர் பண்ணிருந்தாங்க சார். அப்ளை பண்ணிருந்தேன். மூனு பேரை ஸார்ட் லிஸ்ட் பண்ணிருந்தாங்க சார். என் பேரும் இருந்துச்சு. என்னோட பேர் தான் முதல்ல இருந்துச்சு. வெயிட்டேஜ் மார்க்ல முதல்ல இருந்தேன் சார்.

திங்கட் கிழமை காலைல பத்து மணிக்கு கலெக்டர் ஆபிஸ்ல இண்டர்வியூக்கு வரச்சொல்லி இருந்தாங்க. இத்தனைக்கும் ரொம்ப சீக்கிரமா பஸ்ல போயிட்டிருந்தேன். நீடாமங்கலத்துல கேட் போட்டுட்டாங்க. திறக்க லேட் ஆயிடுச்சி;. பத்து பத்துக்கு கலெக்டர் ஆபீஸ் போய்ட்டேன் சார். அதுக்குள்ள இண்டர்வியூ முடிஞ்சி ஆர்டர் கொடுத்துட்டாங்க சார். திறமையோட பங்ச்சு வாலிட்டி முக்கியம்னு சப்-கலெக்டர் சொல்லிட்டாரு சார். அந்தக் கனவு அப்படியே கலைஞ்சு போச்சு சார். பழைய இடத்துக்கு மறுபடியும் வேலைக்குப் போக முடியல சார். அது வரைக்கும் வீட்டுல இருக்க வேணாமேனு இந்த வேலைக்கு வந்துட்டேன்;.

அப்படியே அதிர்ச்சியாகி கேட்டுக் கொண்டிருந்தான் அரவிந்த்.

''இந்த சுத்து வட்டாரத்துல எங்க போனாலும் அங்க ஒருத்தங்கஏதாவது ஒரு வகையில நீடாமங்கலம் ரயில்வே கேட்டால பாதிக்கப்பட்டு இருப்பாங்க அரவிந்த். ரிப்போர்ட் லிஸ்ட்ல விக்னேஷ் சொன்னதையும் எழுதிக்கோ.''

- மாலதி சொன்னாள்.

''சார் நீங்க செங்கல் செய்யறதைப் பத்தி புராஜக்ட் பண்ண வந்திருக்கீங்களா? சார். இல்லை நீங்க எல்லாம் யூடியூப் சேனல்-ல இருந்து வந்திருக்கீங்களா?''

விக்னேஷ் பரிதாபமாக கேட்டான்.

''இல்ல விக்னேஷ் நாங்க வேறொரு விஷயமா வந்து பேசிட்டிருக்கோம். உங்களுக்கு என்ன வேணும் கேளுங்க?''

- மாலதி கேட்டாள்.

''இங்க வந்து வேலை பார்க்க ஆரம்பிச்ச கொஞ்ச நாள்ல இவங்க படற கஷ்டத்தை தெரிஞ்சுகிட்டேன் சார்.

வெயில்ல நின்னு எல்லோரும் கஷ்டப்படறாங்க சார். அதனால செங்கல் தயாரிக்கிறதுக்கு ஒரு மெஷின் தயாரிக்கலாம்னு யோசிச்சி 'டம்மி மாடல்' செஞ்சிருக்கேன் சார். இதை ஒர்க்கிங் மாடலா மாத்தணும்னா நிறைய செலவாகும் சார். யாராவது ஸ்பான்சர் பண்ணா கண்டிப்பா இதை ஒர்க் பண்ண வச்சிருவேன் சார்.''

மூச்சுவிடாமல் பேசி முடித்தான் விக்னேஷ்

''இதுக்கு மெஷின் தயாரிக்கணும்னு உங்களுக்கு எப்படி தோணுச்சு?''

- அரவிந்தன் கேட்டான்.

''மனித குலத்துக்கு நம்மால் ஆன முயற்சிகளைச் செய்யணும் சார். அதான் சார். படிச்சது கம்ப்யூட்டர் படிப்புன்னாலும் எனக்கு மெக்கானிக்கல ரொம்ப இன்ட்ரஸ்ட்சார். அதான் இந்த மெஷின்.''

- விக்னேஷ் பெருமையாகச் சொன்னான்.

அதுக்கு முன்னாடி இன்னொரு விஷயம் பண்ணனும் சார்!

''என்ன?''

''நீடாமங்கலத்துல மேம்பாலம் கட்டறதுக்கு முயற்சி எடுக்கணும் சார். அது தான் சார் முதல் வேலை.''

- விக்னேஷ் சொன்ன போது

''விக்னேஷோடு ஐவரானோம்'' என்று எல்லோரும் கட்டிக் கொண்டார்கள்.

''அன்று காலை ஒன்பது மணிக்கே எல்லோரும் நீடாமங்கலம் ரயில்வே கேட் அருகில் வந்து விட வேண்டும் என்றும் அங்கிருந்து திட்டமிட்டுக் கொண்டு அடுத்த வேலையைப் பார்க்கலாம் என்பதும் அவர்களுடைய திட்டம்.''

சொன்னது போலவே சரியாக ஒன்பது மணிக்கு அரவிந்தன், மாலதி, சிவா, சந்தானராமன் எல்லோரும் ரயில்வே கேட்டுக்கு முன்னால் வந்து விட்டார்கள்.

''மாலதி.... நாம இன்னைக்கு விக்னேஷையும் வரச்சொல்லி

இருந்தோம்ல?''

''ஆமா அரவிந்த். நான் தான் நேத்து சாயந்திரம் வீட்டுக்குப் போன உடனே, விக்னேஷுக்கு போன் பண்ணி வர வேணாம்னு சொல்லிட்டேன்.''

ஏன் மாலதி திடீர்னு என்னாச்சு?

''இல்ல அரவிந்த். பார்க்கறதுக்கு ரொம்ப கஷ்டப்படறவர் போல இருக்கார். நம்ம கூட வந்தா அவருக்கு வருமானம் பாதிக்கும். அதான் வேணாம்னு சொல்லிட்டேன். தேவைப்படறப்போ கூப்பிடறோம். அவசியம் வாங்கன்னு சொன்னேன். அவரும் சரின்னுட்டார்.''

''ஒகே மாலதி நீ ஒரு முடிவெடுத்தா அதுல ஆயிரம் காரணம், இருக்கும். அது சரி மாலதி இன்னைக்கு என்ன இங்க இவ்வளவு கூட்டமா இருக்கு?''

- அரவிந்தன் கேட்டான்.

''இன்னைக்கு என்ன கிழமை?''

மாலதி திரும்பக் கேட்டாள்.

''வியாழக்கிழமை''

''ஓ அதான் காரணம்''

''புரியலையே மாலதி''

''வியாழக்கிழமை ஆலங்குடி குரு கோயிலுக்கு நிறைய டூரிஸ்ட் வருவாங்க அரவிந்த். சில பேர் நவக்கிரக கோயிலை ஒரே நாள்ல பாக்கணும்னும் வருவாங்க அதான் கூட்டம்.''

''..........''

''இன்னைக்கு நைட் ஒன்பது மணி வரைக்கும் கூட்டம் குறையாது அரவிந்த். டூரிஸ்ட் பஸ் வந்துகிட்டே இருக்கும். தமிழ் நாட்டுல இருக்கிற பல மாவட்டங்கள்ல இருந்து வந்துகிட்டே இருப்பாங்க. குரு கல்விக் கடவுள் இல்லையா. எல்லா பெற்றோர்கள் தங்கள் புள்ளைங்க நல்லா படிக்கணும்னு வேண்டிகிட்டு பசங்களையும் கூட்டிட்டு வருவாங்க.''

''ஓகோ... அதான் காலையிலயே இப்படிக் கூட்டம் களை கட்டுதா?''

''தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டத்துல தான் நவக்கிரக கோயில்கள் அமைந்திருக்கு. அதனால ஒரே நாள்ல எல்லாக் கோயில்களுக்கும் போய் தரிசனம் செய்யணும்னு சிலர் நினைப்பாங்க. அப்படி நவ கிரகங்களை ஒரே நாள்ல தரிசனம்

பண்றது நல்லதுன்னும் சொல்வாங்க.''

''அப்படியா மாலதி. . . . . ''

ஆச்சரியமாக கேட்டான் அரவிந்த்.

''ஆனா அப்படி எல்லாக் நவக்கிரக கோயிலையும், ஒரே நாள்ல பாக்கணும்னு நினைக்கறவர்களுக்கு ஒரு வில்லன் யார் தெரியுமா?''

- மாலதி புதிர் போட்டாள்.

''இதுக்கு கூட வில்லனா? யார் அந்த வில்லன்?''

''வேற யார் நம்ம கேட் தான். அதோ பாத்தியா கேட் போட்டாச்சி. டூரிஸ்ட் பஸ் எல்லாம் வரிசை கட்டி நிக்குது''

''கஷ்டம்தான். சாமிதரிசனம் பண்ணனும்னு நினைச்சி வர்றவங்களுக்கு இது கஷ்டமாத்தான் இருக்கும்.''

கஷ்டம்னு சாதாரணமா சொல்லிடாத அரவிந்த். சில பேர் சென்டிமெண்ட்டா பீல் பண்ணுவாங்க. கேட் போட்டாச்சுன்னா நமக்கு கொடுத்து வைக்கல. குரு பகவானோட அருள் நமக்கு கிடைக்கலன்னு பீல் பண்ணுவாங்க.''

''ஐயய்யோ...''

''சில பெற்றோர்கள் பொதுத் தேர்வு நடக்கறப்ப சாமி கும்பிட வருவாங்க. அப்ப பார்த்து கேட் போட்டு தரிசனம் பாக்க முடியாம போயிடுச்சினா, இது ஏதோ அபசகுணம்னு நினைச்சு அழ ஆரம்பிச்சு டுவாங்க. குரு தரிசனம் கிடைக்கல, நம்ம பையன் இந்த வருஷம்

***''மன்னர் ஏன் ரொம்ப அப்செட்டா இருக்கார்?''***

***''டுவிட்டர் விளையாட்டு போதும் உருவு உன் வாளைன்னு எதிரி மன்னன் ஸ்டேட்டஸ் போட்டு விட்டானாம்!''***

**-சீர்காழி ஆர்.சீதாராமன்.**



பரீட்சையில பாஸ் ஆயிடுவானா? தெரியலையே! அப்படீன்னு சில பெற்றோர்கள் ஃபீல் பண்ணுவாங்க.!''

''சாமி தரிசனத்தில் எந்த ஒரு குறுக்கீடு இருந்தாலும் ஆச்சாரமான பக்தர்களால் அதை ஏத்துக்கவே முடியாது அரவிந்த். அந்த வகையில பல பக்தர்களோட மனசை இந்த கேட் புண்படுத்தியிருக்கு.''

''பார்த்தா ஏதோ கேட் போடறாங்க, கொஞ்ச நேரம் டிராஃபிக் ஆகுதுங்கிற மாதிரி இருக்கு. ஆனா சென்சிடிவ் பிராப்ளம் ஏகப்பட்டது இருக்கே மாலதி.''

- அங்கலாய்த்துக் கொண்டான் அரவிந்தன்.

''சரி இன்னைக்கு எங்க போறதுன்னு முடிவு பண்ணலையே இன்னும்?''

''பேசாம ஆலங்குடியில குரு தரிசனம் பண்ணிட்டு அங்கேயே உட்கார்ந்துடலாமா மாலதி?'

- அரவிந்தன் கேட்டான்.

''வேண்டாம் அரவிந்த்! இன்னைக்கு ஏகப்பட்ட கூட்டமா இருக்கும். கன்வியன்ட்டா தரிசனம் பார்க்க முடியாது. இன்னொரு நாளைக்கு குரு கோயிலுக்கு போகலாம்.''

''சரி வேற எங்க போகலாம்!''

''எனக்கு தெரிஞ்சு பச்சைமலை சாமின்னு ஒரு சாமியார் இருக்கார். ஆலங்குடி பக்கத்துலேயே ஒரு கருணை இல்லம் நடத்துறார். அங்க போகலாம். மனசுக்கு நிம்மதியா இருக்கும். நம்மால முடிஞ்ச பொருளுதவி பண்ணிடுவோம். மதியம் அங்கேயே சாப்பிட்டுக்கலாம். சாமியும் நமக்கு ஏதாவது
ஆலோசனை சொல்வார்.''

''சாப்பாடு போடுவாங்கன்னு தெரிஞ்சா, நாம தினமும் அங்கேயே சந்திக்கலாமே, இது தெரியாம போச்சே.''

- சிவா சொல்லிவிட்டு சிரித்தான்.

''நம்ம எபிசோட்லயே, இப்பதான் ஒரு காமெடி ஆக்டர் உள்ள வர்றார்''

- அரவிந்தன் சொன்னான்.

எல்லோரும் விழுந்து, விழுந்து சிரித்தார்கள்.

''பச்சை மலை சாமின்னு நான் சொல்ற சாமி உண்மையிலேயே ஒரு சமூக சீர்திருத்தவாதி. காவி உடையில இருக்கற சமூக சீர்திருத்தவாதி.''

- மாலதி சொன்னாள்.

''அப்படியா மாலதி''

''ஆமா அரவிந்த். அப்பா, அம்மா இல்லாத குழந்தைகளை அரவணைச்சு அவங்களுக்காகவே கருணை இல்லம் நடத்துறார். அவங்களுக்கான படிப்பு செலவை எல்லாம் நன்கொடை மூலமாகத்தான் சமாளிக்கிறார். நன்கொடைக்காக பல இடங்களுக்கு அலைஞ்சு திரியறத நான் பார்த்திருக்கிறேன். இந்தக் கையில காசு வாங்கினா அத அடுத்த நிமிஷமே நல்ல காரியங்களுக்காக செலவழிச்சிடுவார். கையில ஒரு ரூபா கூட வச்சிக்க மாட்டார்.''

''ஓ! ஆச்சரியமா இருக்கு மாலதி''

''வண்டி வாகனம் எதுவும் கிடையாது. அன்பர்கள் மூலமாகத்தான் வெளியில் நிகழ்ச்சிகளுக்கு போயிட்டு வருவார்.''

''. . . . . .''

''தன்னோட கருணை இல்லத்தில் இருக்கற குழந்தைகளுக்கு தேவாரம், திருவாசகம், சிவபுராணம் எல்லாம் சொல்லிக் கொடுப்பார்.''

''. . . . . .''

''அதே சமயம் இன்னொரு ஆச்சரியமான விஷயம். சமூக நல்லிணக் கத்துக்காக பாடுபடற சாமி அவர். காவி உடை அணிந்திருந்தாலும் அனைத்து மத நிகழ்ச்சிகளுக்கும் போவார். சமய நல்லிணக்கக் கூட்டங்களை இவரே முன்னாடி நின்னு ஏற்பாடு செஞ்சு நடத்துவார்.''

''ஓ இது உண்மையிலேயே நல்ல விஷயம் மாலதி.

''சாமியார்னு சொன்ன உடனே நீ ரொம்ப வயசான சாமியார்னு நினைச்சிடாத, சின்ன வயது இளைஞர்தான். ஒரே ஒரு நாள் கூட சும்மா இருக்கமாட்டார்.''

''பாரதி விழா நடத்துவார். நாயன்மார்களோட குரு பூஜை விழா நடத்துவார். அதே மாதிரி போதைப் பொருள் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்துவார். திடீர்னு அரசு மருத்துவ மனைகளுக்குப் போய் அங்குள்ள நோயாளிகளுக்கு பிஸ்கட், பழம் எல்லாம் கொடுப்பார். ஆச்சரியமாக தன்னைப் பத்தின எந்த செய்தியும், எந்த பத்திரிகையிலும் வராம பார்த்துக்குவார். ஆனா பத்திரிக்கைகாரங்க எப்படியோ கண்டுபிடித்து நியூஸ் போட்டுடுவாங்க.''

''சாமி தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்கள்ல இருக்கிற பல சிவாலயங்கள்ல திருப்பணி நடத்துறதுக்கு காரணமா இருந்தவர்.

இடிஞ்சு பாழடைஞ்சு போன பல சிவாலயங்கள் பச்சை மலை சாமியோட பணிகள் காரணமா கும்பாபிஷேகம் நடந்திருக்கு. பல கிராம கோயில்களுக்கு கும்பாபிஷேகம் பண்ணி வச்சிருக்கார்.''

- மாலதி சொன்னாள்.

''இவர்கள் போன்ற சாமிகள் தான் உண்மையிலேயே கண் கண்ட தெய்வங்கள் மாலதி. அவசியம் சாமியைப் பார்த்து ஆசிர்வாதம் வாங்கணும்.''

- அரவிந்தன் சொன்னான்.

கருணை இல்லத்துக்கு போன போது சாமி எழுந்து வந்து வரவேற்றார்.

''சாமி நீங்க எழுந்து வரலாமா? தயவு செய்து உட்காருங்க சாமி..''

- மாலதி கையெடுத்துக் கும்பிட்டாள்.

சாமி அங்கிருந்த மர பெஞ்சில் உட்கார்ந்து கொள்ள, இவர்கள் எல்லோரும் தரையில் அமர்ந்து கொண்டார்கள்.

''வாம்மா மாலதி. நீங்க போற வேகத்தைப் பார்த்தா நீடாமங்கலத்துல சீக்கிரமாகவே பாலம் கட்டிடுவீங்க போலிருக்கே.''

- சாமி சொன்னார்.

''அது தான் சாமி. நாம எதுக்கு வந்திருக்கோம், என்ன நோக்கத்தோடு வந்திருக்கோம்னு நம்மை பார்;த்த உடனே கண்டு புடிச்சிட்டாங்க பாத்தியா அரவிந்த்.?''

- மாலதி பெருமையுடன் சொன்னாள்.

''சிவ சிவ, அதெல்லாம் ஒண்ணுமில்ல. அன்னைக்கு நீங்க பாடகச்சேரி மகான் சந்நிதியில் பேசிகிட்டு இருந்தப்ப தற்செயலா உங்களை கிராஸ் பண்ணினேன். மத்தபடி நீங்க பாட்டுக்கு சாமியார் சக்தி மிக்கவர். மந்திரம் செய்வார். ஜோதிடம் பார்ப்பார்னு சொல்லி ஏதாவது கொளுத்திப் போட்டுடாதீங்க.''

- சொல்லிவிட்டு சிரித்தார் சாமி.

''சாமின்னா எப்போதும் எங்களோட பிரண்ட் மாதிரி தான்.''

- மாலதியும் பெருமையாக சொன்னாள்.'

எல்லோரும் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள்.

சிவ சிவ என்று சொல்லி எல்லோருக்கும் விபூதி பூசி விட்டார். அன்பர்கள் சாமிக்கு வழங்கிய பழங்களை எடுத்து எல்லோருக்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்தார். சிவ புராணம் புத்தகம் கொடுத்தார்.

அடுத்த வாரம் நாச்சியார்கோயில்ல கோ பூஜை இருக்கு. நேரம் இருந்தா வந்து கலந்துக்குங்க என்று சொல்லி ஆளுக்கொரு அழைப்பிதழையும் கொடுத்தார்.

''நீங்க தேடி வந்த காரியத்துக்கு என்கிட்டயும் ஒரு சாட்சி இருக்கார். நோட் பண்ணிக்குங்க.''

- சாமி சொன்ன போது, எல்லோரும் அமைதியாய் உட்கார்ந்திருந்தார்கள்.

''அதோ விளையாடிக்கிட்டு இருக்கான் பாத்தீங்களா?''

சாமி பக்கத்தில் இருந்த மைதானத்தை கைகாட்டி சொன்னார்.

''ஆமா சாமி, கட்டம் போட்ட சட்டை''

- ஆமா அவனே தான்.

''ஏத்தாப்பூர்காரன், போன வருஷம் அவங்க அம்மாவிற்கு திடீர்னு உடம்பு சரியில்லாம போயி ஒரு மணி நேரத்துல சீரியஸ் கண்டிஷனுக்குப் போயிட்டாங்க. உடனே ஒரு கார் புடிச்சி தஞ்சாவூர் பெரிய ஆஸ்பத்திரிக்கு போய் இருக்காங்க. இவங்களோட துரதிருஷ்டம் நீடாமங்கலத்துல கேட் போட்டாச்சு. அரை மணி நேரம் கழிச்சுதான் கேட் திறந்திருக்காங்க. அடிச்சுப் புடிச்சி ஆஸ்பத்திரிக்குப் போனா பல்ஸ் குறைஞ்சி போயிடுச்சி காப்பாத்த முடியல. அரைமணி நேரம் முன்னாடி வந்திருந்தா காப்பாத்தியிருக்கலாம்னு டாக்டர் சொல்லிருக்காரு.''

''அவனோட அப்பாவுக்கு அந்த அளவுக்கு சுவாதீனம் பத்தாது. அம்மா இல்லாத புள்ளையை எப்படி வளர்க்கப் போகிறோம்னு தவிச்சுப் போய்ட்டாரு. ஆறு மாசத்துக்கு முன்னாடி தான் அன்பர் ஒருத்தர் கொண்டு வந்து நம்ம கருணை இல்லத்துல சேர்த்துட்டு போனார். ஆறுமாசமா நம்ம கிட்ட இருக்கான்.''

சாமி மிகுந்த வருத்தத்தோடு சொன்ன போது எல்லோரும் தலை குனிந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். மாலதி வாய்விட்டு அழுதாள்.

''நீ அழாத மாலதிம்மா. நீங்க தான் நல்ல விஷயத்துக்காக செயல்ல இறங்கி இருக்கீங்களே!. அது போதும். இனிமே அப்படி நடக்காம அங்க ஒரு மேம்பாலம் வரணும். அதுக்காக நீங்க எடுக்கற முயற்சிக்கு 'ஆலங்குடி அருள்மிகு ஏலவார் குழலி ஸமதே ஆபத்சகாயேஸ்வரர்' உங்களுக்கு துணை இருப்பார். வாங்க எல்லோரும் சாப்பிடப் போகலாம்.''

- சாமி கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தபடியே சொன்னார்.

எல்லோரும் எழுந்து கொண்டார்கள்.

## 9

''சாயந்திரம் ஆறு மணிக்கெல்லாம் எல்லோரும் நீடாமங்கலம் கேட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று மாலதி சொல்லியிருந்தது ஞாபகம் வந்தது அரவிந்தனுக்கு.''

மணியைப் பார்த்தான் ஐந்து முப்பது. பத்து நிமிடம் முன்னாலேயே போய் விடலாம். வீட்டில் உட்கார்ந்து என்ன செய்யப் போகிறோம் என்று நினைத்தபடியே டூவீலரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் அரவிந்தன்.

நீடாமங்கலம் கேட்டுக்கு வந்து சேர்ந்த போது ஏற்கனவே வந்து காத்துக் கொண்டு இருந்தாள் மாலதி.

''என்ன மாலதி முன்னாடியே வந்துட்ட போல, வந்து ரொம்ப நேரம் ஆச்சா?''

- அரவிந்தன் கேட்டான்.

''சீக்கிரமா வந்துட்டோனா? ஐயா என்ன அமெரிக்காவுல இருந்து வர்றீங்களோ? மணியைப் பாருங்க.''

- என்றாள் பொய்க் கோபத்துடன்.

- அரவிந்தன் செல்போனை எடுத்து மணியைப் பார்த்தான். ஆறு பத்து என்று காட்டியது.

''ஓ! ஸாரி மாலதி. நான் அஞ்சரை மணிக்கே விட்டுலேர்ந்து கிளம்பிட்டேன். இருபது நிமிசத்துக்குள்ளே வந்துடலாம்னு நெனைச்சேன். முப்பது நிமிடம் ஆயிருக்கு.''

''நீடாமங்கலம் டிராபிக் சென்னை மாதிரி. ஏன் சென்னையை விட மோசம். அஞ்சு கிலோ மீட்டர் டிராவல் பண்றதுக்கு சென்னையில அரைமணி நேரம் கூட ஆகுமில்ல!. வரிசையா சிக்னல் விழுந்துகிட்டேதான் இருக்கும்? அதே மாதிரி தான் நீடாமங்கலம் கடைத்தெருவை கிராஸ் பண்ணி வரவே அரை மணி நேரம் ஆயிடும்.''

இன்னைக்கும் ஏதாவது விசேஷமா மாலதி. கடைத்தெரு இவ்வளவு கூட்டமா இருக்கு?

''விஷேசம் எல்லாம் ஒண்ணுமில்ல அரவிந்த். வழக்கமான

கூட்டம் தான். இன்னைக்கு தான் முதன் முதலா சாயந்திர நேர கூட்டத்த பாக்கற? சாயந்திர நேரம் எப்போதுமே இப்படித்தான் கூட்டமா இருக்கும். ''

''சரி இன்னைக்கு நம்மளோட திட்டம் என்னன்னு தெரியுமில்ல..?''

- மாலதி கேட்டாள்.

''ஓ! யெஸ்;. நல்லாத் தெரியும். அதான் நேத்திக்கே முடிவு பண்ணினது தான? இன்னைக்கு எட்டு மணி வரைக்கும் நின்னு இங்க நடக்கறத அப்சர்வ் பண்றோம். அப்புறம்''

''கலெக்டர் ஆபிஸ் கம்பளைண்ட் வெப்சைட்ல அப்லோட் பண்ணனும். அதுக்கு பி டி எஃப், வீடியோ வைக்கணும். பி டி எஃப் னா பத்து எம்.பி.க்குள்ள கம்ப்ரஸ் பண்ணனும்.''

- மாலதி கொஞ்சம் வெறுப்பாக சொன்னாள்.

''ஒரு வகையில நேரடியா கலெக்டர் ஆபீஸ் போய் கம்ப்ளைண்ட் பண்றதுக்கு இது ஈஸி தான மாலதி?''

''கம்ப்ளைண்ட் பண்றது ஈஸி தான் அரவிந்த். நம்ம கம்ப்ளைண்ட்டை அப்லோட் பண்ணவுடனே, உங்களுடைய புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத் தொடர்புக்கு அந்த ரெபரன்ஸ் நம்பரைப் பயன்படுத்தவும் என்று உடனே நமக்கு பதிலும் வந்துடும். ஆனா நடவடிக்கைத் தான் எடுக்க மாட்டாங்க.'' நீ எப்ப போய் கம்ப்ளைண்ட் ஸ்டேட்டஸ் பார்த்தாலும்'' 'அது பரிசீலனையில் இருக்கிறது'' என்று ஒரு ரெடிமேட் பதில் வரும்.

- சலித்துக் கொண்டே சொன்னாள் மாலதி.

''என்ன மாலதி நீயே இப்படி சலிச்சிகிட்டு பேசினா எப்படி! எத்தனையோ புகார்களுக்கு ஆன்லைன் மூலமா தீர்வு சொல்லிட்டுத்தான் இருக்காங்க மாலதி. சின்னச்சின்ன புகார்கள் மேல உடனே நடவடிக்கை எடுத்திடுவாங்க மாலதி. மேம்பாலம் கட்டறது பெரிய புராசஸ் இல்லையா? பொறுமையா தான் இருக்கணும் மாலதி. பீ கூல் மாலதி.''

- அரவிந்தன் சொன்னது மனசுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

''நம்ம ஆன்லைன்ல கம்ப்ளைண்ட் பண்ணினாலும், ப்ளாக் அண்ட் ஒயிட் பேப்பரா ஒரு ரிஜிஸ்டர் தபாலும் அனுப்பிடுவோம் மாலதி. வீடியோ சிடி ஒன்றும் இந்த தபால் கூடவே சேர்த்து அனுப்பிடுவோம். மாலதி.''

''ஓகே அரவிந்த். முப்பது, முப்பத்தைந்து வருஷமா நீடாமங்கலம் மக்கள் போராடிகிட்டு இருக்காங்க. அரவிந்த் இந்த முறை நாம் ஜெயிக்கணும்.''

- மாலதி சொன்னாள்.

''அது சரி. இந்த சிவாவும், சந்தானராமனும் வந்துட்டாங்களா?''

அரவிந்தன் கேட்டான்.

''அவங்க அப்பவே வந்துட்டாங்க அரவிந்த். நாம் காதலர்களாம், நாம தனியா ரொமான்ஸ் பண்ணி பேசிகிட்டு இருப்போம். நம்ம பிரைவசியை டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னு தனியா நிக்கிறாங்க. உங்க பிரண்ட்ஸ் மோஸ்ட் டிசிப்ளீண்டு.''

''அவங்களா? நம்மளை டிஸ்டர்ப் பண்ண வேணாம்னா தனியா நிற்கிறாங்க? அங்க பாரு தள்ளு வண்டி கடையில பானிபூரி வாங்கி அமுக்கிக்கிட்டு இருக்காங்க.''

''ஏய் சிவா? சந்தானம்! நாங்க கேட்க மாட்டோம். இங்க வாங்க''

- அரவிந்தன் கத்தினான்.

வரும் போதே ரெண்டு ப்ளேட் பானி பூரியோடு வந்தார்கள்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்''ன்னு நம்ம திருவள்ளுவர் சொல்லியிருக்காரு. அதான் உங்களுக்கு அப்பவே ஆர்டர் பண்ணிட்டோம்.''

சிவா பானி பூரி ப்ளேட்டை இருவரிடமும் கொடுத்தான்.

''சரி சரி ஒரு ப்ளேட் பானி பூரி கொடுத்துட்டு திருவள்ளுவரையெல்லாம் போய் இழுக்காத, முதல்ல அந்த திருக்குறளை முழுசா சொல்லு பார்க்கலாம்.''

- அரவிந்தன் கேட்டான்.

''மாப்ள, பானி பூரி ஆறிடுச்சின்னா, டேஸ்ட் இருக்காது. சீக்கிரம் சாப்பிடு திருக்குறளை நெட்ல பாத்து சொல்றேன்.''

சிவா சொல்லிவிட்டு சிரித்தான்.

''சரி. எல்லாம் விஷயத்துக்கு வாங்க.''

''சாயந்திர நேரம் நீடாமங்கலம் எப்படி போக்குவரத்து நெரிசல்ல திண்டாடுதுன்னு ஒரு வீடியோ பண்ணப் போறோம். சந்தானராமன் சார் நீங்க பத்து பதினைஞ்சு போட்டோ எடுத்துக்கங்க. பி டி எப் பண்ணனும். சிவா சார் நீங்க கொஞ்சம் வீடியோ எடுங்க. நாங்க ரெண்டு பேரும் இங்கயே நின்னு பொது மக்கள் பேசிகிட்டு இருக்கறதை அப்சர்வ் பண்றோம்.''

பொழுது மங்கி இருள் கவியத் தொடங்கியிருந்தது.

தன் மகள் சுசியின் ஞாபகம் வந்தது சந்திராவுக்கு.

வேக வேகமாக நடந்தாள்.

''ஏய் காவேரி நீ என்ன இந்த நேரத்துல இங்க நிக்கிற?''

காவேரியைப் பார்த்தவுடன் கொஞ்சமாக முகம் மலர்ந்தாள் சந்திரா. பக்கத்து தெருவில் தான் இருக்கிறாள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் வந்து சந்திராவுடன் பேசிக் கொண்டிருப்பாள்.

''ஆமா சந்திரா, இன்னைக்கு 'தாடிக்காரரு' வீட்டு வயல்ல களை எடுக்கற வேலை. முடிச்சிட்டு சம்பளம் வாங்குறதுக்காக வந்தேன்.''

''தாடிக்கார ஐயா எப்போதும் வய தலப்புலயே சம்பளம் கொடுத்துடுவாரே, அதை வாங்கறதுக்கா இவ்வளவு தூரம் வந்திருக்க?''

''முன்ன மாதிரி இல்ல சந்திரா, இப்பவெல்லாம், தாடிக்கார ஐயாவும் மாறிட்டாரு. அலைஞ்சி திரிஞ்சித்தான் சம்பளம் வாங்க வேண்டி இருக்கு''

காலத்துக்கு ஏத்தமாறி எல்லாரும் மாறிட்டாங்க. ஏதோ இந்த அளவுக்காச்சும் ஆண்டவன் படி அளக்கறானே அது போதும்.''

- காவேரி சலித்துக் கொண்டாள்.

'2அது சரி காவேரி, என்ன இங்க நின்னுகிட்டு இருக்க?''

- மறுபடியும் கேட்டாள் சந்திரா.

''உன் கண்ணை என்ன முதுகுக்கு பின்னாடியா வச்சிருக்க? அங்க பாரு கேட் போட்டுட்டாங்க?''

''ஊரு ஒலகத்திலே சந்திரனுக்கு போகக்கூட ராக்கெட் கண்டுபிடிச்சிட்டாங்க, இந்த நீடாமங்கலத்துக்கு மட்டும் ஒரு மேம்பாலம் கட்ட மாட்டேங்கறாங்க.''

- சந்திரா சொன்னாள்.

''எப்ப கேட் போட்டாலும் தொறக்கிறதுக்கு ஒரு மணி நேரம் ஆயிடுமே காவேரி. ரெண்டு மூணு ரயில் கிராஸ் பண்ணி போகணும். காரு, வண்டி வாகனத்தை மறைச்சி வைக்கலாம். நம்மள மாதிரி நடந்து போறவங்களையாச்சும் விடலாம்ல. அதுவும் போகக்கூடாதுன்னு செயின் போட்டு வச்சிருக்காங்க. வயசுக்கு வந்த புள்ளைய வீட்டுல ஒண்டியா விட்டுட்டு வந்திருக்கேன் வயிறு பக்கு பக்குன்னு அடிச்சிக்குது.''

- சந்திரா புலம்பினாள்.

''நடந்து போறவங்களை விட்டா, செல்போன்ல பேசிகிட்டே போய், ரயில் வர்றது தெரியாம அடிபட்டு செத்துடுறாங்க சந்திரா. ரெண்டு மூணு மாசத்துக்கு முன்னாடி அப்படி ஒரு சம்பவம் நடந்து போச்சி. நாலஞ்சு தண்டவாளம் இருக்கறதால எதுல ரயில் வருதுன்னு நடந்து போறவங்களுக்கு தெரியாதில்ல. அதனால தான் கேட் போட்ட உடனே ஆளுங்களையும் நடமாட விடறதில்ல.''

- காவேரி சொன்னாள்.

''ஏதோ மேம்பாலம் கட்டறதுக்கு உத்தரவு போட்டாச்சி. பாலம் கட்டப் போறாங்கன்னு பேசிக்கிட்டாங்களே காவேரி.''

''அதான் அம்பது வருசமா பேசிக்கிட்டே இருக்காங்களே. நமக்கெதுக்கு சந்திரா பெரிய இடத்து வம்பு? 'சித்தன் போக்கு சிவன் போக்கு'ன்னு போய்கிட்டே இருக்க வேண்டியதுதான்.''

''ஆனா தெனம், தெனம் இந்த ரயில்வே கேட்டுல மாட்டிகிட்டு சீரழிய வேண்டியிருக்குதே!''

- சந்திரா புலம்பினாள்.

ரயில்வே கேட்டை ஒட்டியே தள்ளு வண்டியில் சோளக்கதிரும், 'சவ்வாரிக் கட்டை' கிழங்கும் வேக வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள்.

காவேரி நான்கு துண்டுகள் கிழங்கை வாங்கி சந்திராவின் கையில் இரண்டு கிழங்கு துண்டுகளை பேப்பரோடு சுற்றித் திணித்தாள்.

''சாப்பிடு சந்திரா, எனக்கு என்னமோ தலை கிறு, கிறுன்னு சுத்திகிட்டு வருது.''

''கிழங்கை கைகளால் பிய்த்து சாப்பிட்டுக் கொண்டே சொன்னாள் காவேரி''

கிழங்குத் துண்டுகளை தன் மூங்கில் கூடையில் வைத்து திணிக்கப் போனாள் சந்திரா.

''ஏய் சந்திரா, அந்த கிழங்கை ஏன் கூடைக்குள் வைக்கிற?''

''என் மவ சுசியை விட்டுட்டு சாப்பிட மனசு வரல காவேரி''

''சுசிக்கு வேணும்னாலும் இன்னும் இரண்டு கிழங்கு துண்டோ, சோளக் கருதோ, வாங்கித் தாரேன் சந்திரா. இதை நீ சாப்பிடு ஆத்தா. உடம்பை பார்த்துக்கோ.''

காவேரி இன்னும் இரண்டு கிழங்குத் துண்டுகளை வாங்கினாள்.

சரி காவேரி நான் காசு கொடுக்கறேன்! கூடைக்குள் இருந்த காசை எடுக்கப் போனாள் சந்திரா.

''இருக்கட்டும் சந்திரா. நான் கொடுக்கறேன். யார் கொடுத்தா என்ன? உன் புள்ளைக்கு ரெண்டு கிழங்குத் துண்டு வாங்கிக் கொடுக்கறதால நான் ஒண்ணும் கொறஞ்சிப் போயிட மாட்டேன்.''

- சந்திராவின் வற்புறுத்தலையும் மீறி கிழங்குத் துண்டுகளுக்கு காசு கொடுத்தாள் காவேரி.

தன் மீது இரக்கப்பட்டு காவேரி கிழங்கு வாங்கி கொடுத்தது என்னவோ போல் இருந்தது சந்திராவுக்கு.

- அதை உடனே புரிந்து கொண்டு சமாளித்தாள் காவேரி.

''இந்த உலகத்துல யார் என்னத்த அள்ளி கட்டிகிட்டு போகப் போறோம்? இன்னைக்கு நான் கிழங்கு வாங்கி கொடுத்தா, நான் தவிச்சு நிக்கறப்போ நீ எனக்கு ஒரு டீ தண்ணி வாங்கித் தரமாட்டியா சந்திரா?''

- காவேரி கேட்டாள்.

''நீயும் நல்லா சாப்பிட்டு உடம்பை பாத்துக்க சந்திரா. நீ நல்லா இருந்தா தானே உன் புள்ளையைப் பாத்துக்க முடியும். நீ பாட்டுக்கு புள்ளைக்கு வேணும். புள்ளைக்கு வேணும்னு சாப்பிடாம கிடந்தீன்னா, உடம்பு என்னத்துக்கு ஆகறது?''

- காவேரி கேட்டாள்.

''என்னமோ காவேரி உடம்பு அப்படியே பழகிடுச்சி. வீட்டுல சுசி தனியா தவிச்சிகிட்டு இருப்பாளேன்னு பயமா இருக்கு. காவேரி.''

''நம்ம ஊருக்குள்ளே புள்ளை தனியா இருக்கறதால உனக்கு என்ன பயம் சந்திரா!''

''ஊரு ஒலகம் ரொம்பக் கெட்டுப் போயிடுச்சி காவேரி. சின்னப்பசங்க எல்லாம் குடிச்சிபுட்டு திரியறாங்க. குடிச்சுப்புட்டா என்ன பண்றோம்னு தெரிய மாட்டேங்குது. போன வாரம் நம்ம கல்யாணி அக்காவோட மவ செண்பகத்தை தடிப்பசங்க கையப்புடிச்சி இழுத்து ரகளை பண்ணியிருக்காங்க. அந்த நேரம் பார்த்து கல்யாணி அக்கா வீட்டுல இல்ல. இதோ மாதிரிதான் கேட்டுல மாட்டிகிட்டு நின்னுருக்கு.''

''. . . . . ''

''நல்ல வேளை செண்பகம் பெருசா சத்தம் போட்டு கத்தினதால பக்கத்தில இருந்தவங்க எல்லாம் ஓடி வந்துட்டாங்க. தடிப்பசங்க ஓடிப் போயிட்டாங்க. இல்லைன்னா என்ன ஆகியிருக்கும். நினைச்சு பாத்தா ஈரக்கொலையே நடுங்குதே.''

பயந்தபடியே சொன்னாள் சந்திரா.

''இந்தக் கேட்டுனால எவ்வளவு பிரச்சனை பாத்தியா காவேரி? இதுக்கு ஒரு விடிவு வரணும்.

- சந்திரா நொந்து கொண்டாள்.

- ரயில் வரும் சப்தம் கேட்டது.

உறைந்து கிடந்த நீடாமங்கலம் விழிக்கத் தொடங்கியது.

சந்திராவுக்கு எப்படி தைரியம் சொல்வது என்று தெரியாமல் மௌன சாட்சியாய் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அரவிந்தனும், மாலதியும்.

## 10

''மார்பிள் கற்களால் நீடாமங்கலம் ரயில்வே ப்ளாட் பாரம் காலுக்கு கீழே வழுக்கிக் கொண்டிருந்தது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரு சின்ன குப்பை கூட கண்ணில் படவில்லை.

யாராவது டீயை குடித்து விட்டு பேப்பர் கப்பை வீசினால் ஓடி வந்து எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுச் சென்றார்கள் தூய்மைப் பணியாளர்கள்.

பளிங்கு மண்டபம் மாதிரி ஜொலித்ததால் யாருக்கும் அங்கே குப்பையைப் போட மனசில்லை. எச்சில் துப்பக் கூட யோசித்தார்கள்.

''நடை மேடையில் போடப்பட்டிருந்த வெள்ளை நிற வலை நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள் அரவிந்தனும், மாலதியும். வழக்கம் போல கொஞ்சம் தூரம் தள்ளி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள் சந்தானராமனும், சிவாவும்.''

''டேய் சிவா இங்க வாங்க ரெண்டு பேரும். நாங்க என்ன ப்ளாட்பாரத்துல உட்கார்ந்து டூயட்டா பாடிகிட்டு இருக்கோம். இப்படி வந்து உட்காருங்க.

- அரவிந்தன் அதட்டினான்.

''நீங்களும் டூயட் பாடுவீங்க. மரத்தை சுத்தி டான்ஸ் ஆடுவீங்க. சீக்கிரமா கல்யாண சாப்பாடு சாப்பிடலாம்னு பார்க்கிறோம். அது இப்போதைக்கு நடக்காது போல இருக்கே. நீங்க பாட்டுக்கு இப்படியே மேம்பாலம், கீழ்ப்பாலம், தரைப்பாலம்னு கத்திகிட்டே

இருந்தா எப்ப உங்க பர்சனல் வாழ்க்கைப் பத்தி பேசறது.''

- சிவா பேசிக்கொண்டே அருகில் வந்தான்.

''உன்னோட அக்கறைக்கு ரொம்ப நன்றி சிவா. இன்னைக்கு நம்ம ரிப்போர்ட்டுக்கு இறுதியா சில டேட்டாஸ் கலெக்ட் பண்றது தான் நம்ம பிளான்.''

''நான் கேட்கப் போற கேள்விக்கான பதில் உங்க மூணு பேருக்குமே தெரிஞ்சிருக்கும். அதிலும் மாலதிக்கு இன்னும் நல்லா தெரிஞ்சிருக்கும். இது என்னை நான் தெளிவுபடுத்திக்கிறதுக்காக கேட்கறேன்.''

- அரவிந்தன் சொன்னான்.

- மாலதி சொன்னாள்.

''மாலதி. தமிழ்நாட்டுல வேற எந்த ரயில்வே கேட்லயும் ஏற்படாத இந்த ரயில்வே கேட் சிக்கல் ஏன் நீடாமங்கலத்துல மட்டும் அதிகமா இருக்குது''

- அரவிந்தன் கேட்டான்.

''இதுக்கான பதில் ரொம்ப பெருசு அரவிந்த். கிளியரா நோட் பண்ணிக்கோ. அப்பதான் நாளைக்கு கம்ப்ளைண்ட் பண்ண போற இடத்துல விளக்கம் கேட்டா சொல்ல முடியும்.''

''ஓகே மாலதி, வேணும்னா நீ பேசறதை ஒரு வீடியோவா எடுத்து டவா?''

- அரவிந்தன் கேட்டான்.

''ஏன் தேவையில்லாம வம்பை விலை கொடுத்து வாங்கணும்''

''ஒரு வேலை வாட்ஸ்ப்ல வீடியோவா போட்டோம்னா, வைரல் ஆகி ஒரு தீர்வு கிடைக்குமில்ல மாலதி''

''நத்திங் வில் ஹேப்பன்....திடீர்னு ஒரு விளம்பரம் கிடைக்கும். திடீர்னு ரெண்டு நாள் டீவியில பேட்டி போடுவாங்க. ரேசன் கடையில ரெண்டாயிரம் வாங்கி கிட்டு சிரிச்ச பாட்டி மாதிரி எல்லோருடைய செல்போன்லயும் என் போட்டோ இருக்கும். வேறென்ன நடக்கும்? நமக்கு இந்த வெத்து விளம்பரம் தேவையில்ல அரவிந்த்.''

''உண்மையிலே உன்னை நினைச்சா பெருமையா இருக்கு மாலதி.''

''இல்ல அரவிந்த். நாம் எடுக்கற இந்த நடவடிக்கை வெற்றி அடையணும். நம்ம புகார் மேல் கலெக்டர் உடனடியா

நடவடிக்கை எடுக்கணும். மேலிடத்துக்கு அவர் பிரஷர் கொடுக்கணும். பாலம் வேலை ஆரம்பிச்சு கட்டப்படணும். அது தான், அதுதான் ஒரே குறிக்கோள்.''

''. . . . . . . ''

''பாலம் கட்ட அடிக்கல் நாட்டி, வேலை ஆரம்பிக்கணும். அப்படி பண்ணிட்டாங்கன்னா போதும். அதுக்கப்புறம் நாண் பாட்டுக்கு உட்கார்ந்து 'குரூப் டூ' எக்ஸாம்க்கு படிக்க ஆரம்பிச்சுடுவேன்.''

''எக்ஸாம்க்கு படிக்க ஆரம்பிச்சிடுவீங்களா? அப்போ கல்யாணம்...? சாப்பாடு...? ஏம்பா அரவிந்த் நீ காலம் பூரா இப்படியே விவேகானந்தர் மாதிரி வாழ்ந்துட்டு போக வேண்டியதுதான். நான் அப்பவே சொன்னேனே கேட்டியா. மாலதி மேடம் ஒரு தெய்வப்பிறவி. காதலுக்கு சம்மதிக்கமாட்டாங்கன்னு.''

- சிவா பொய்யாக அழுது காண்பித்தான்.

''எனக்கும் அப்படியொரு ஆசை இருக்கு சிவா. மேம்பாலம் கட்டி முடிச்சவுடனே, மேம்பாலத்து மேல நின்னு கல்யாணம் பண்ணனும். ட்ரோன் மூலமா பூமழை பொழியணும்.''

''அப்புறம் சாப்பிடறது எப்படி? மேம்பாலத்து மேல நின்னு கையேந்தி பவன் மாதிரி சாப்பிட்டுட்டு, பாலத்துல இருந்து கீழ குதிச்சி மொய் எழுதிட்டுப் போற மாதிரியா?'' வித்யாசமா பண்றேன். வித்யாசமா பண்றேன்னு ஓவரா யோசிக்காதீங்கப்பா''

- சிவா சொன்னபோது வாய்விட்டு சிரித்தார்கள்.

''சரி அரவிந்த் நான் பிரச்சனையை சொல்றேன் நோட் பண்ணிக்கோ''

- மாலதி சொல்ல ஆரம்பித்தாள்.

''ஒரு நாளைக்கு பத்து மணி நேரத்திற்கும், அதிகமா மூடப்படுற கேட் நீடாமங்கலம் ரயில்வே கேட் தான். தமிழகத்திலேயே ரயில்வே பிளாட் பாரத்துக்கு இடையில் தேசிய நெடுஞ்சாலை

செல்கின்ற ஊர் நீடாமங்கலம் மட்டும் தான். இது தான் பிரச்ச னைக்கு மூல காரணம்.''

''தஞ்சாவூரில் இருந்து திருவாரூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, காரைக்கால் பகுதிக்கும், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, முத்துப்பேட்டை ஆகிய ஊர்களில் இருந்து கும்பகோணம் மற்றும் சென்னைக்கும் போகிற பேருந்துகள் இந்த ரயில்வே கேட்டைத் தாண்டித்தான் போகணும்.''

''இந்த நிலைமயில தான் நீடாமங்கலம் வழியாக பதினான்கு எக்ஸ்பிரஸ் மற்றும் பயணிகள் ரயிலும், நான்கு வாராந்திர எக்ஸ்பிரஸ் ரயிலும் போகுது. இதைத் தவிர காரைக்கால் பகுதியிலிருந்து பன்னிரெண்டு சரக்கு ரயிலும் நீடாமங்கலம் வழியாகத்தான் போகுது. இதனால தான் நீடாமங்கலம் கேட்டை ஒரு நாளைக்கு பத்து மணி நேரம் மூடறாங்க.''

''குறிப்பா மன்னை எக்ஸ்பிரஸ் மற்றும் செம்மொழி எக்ஸ்பிரஸ் ரயில்களுக்காக காலை மற்றும் மாலை ரெண்டு வேளையிலும் குறைஞ்சது அரைமணி நேரம் ரயில்வே கேட் மூடப்படுது. தேசிய நெடுஞ்சாலையா இருக்கறதால அஞ்சு நிமிஷம் கேட் போட்டாலே நாலு பக்கமும், நூற்றுக்கணக்கான வாகனங்கள் வரிசை கட்டி நிக்க ஆரம்பிச்சுடும்.''

''நீடாமங்கலம் ரயில் நிலையம் சரக்குகளை கையாளுகிற ரயில் நிலையமாக இருக்கு. நீடாமங்கலம் நல்ல விவசாயப் பகுதிங்கறதால நெல் ஏற்றும் வேலையும், யூரியா போன்ற உரங்களை இறக்கும் வேலையும் இங்க தொடர்ந்து நடக்கும்.''

''அந்த வேலை நடக்கும் போது நெடுஞ்சாலைக்கு வழி விடறதுக்காக பிளாட் பாரத்துக்கு இடையில வேகன்களை பிரிச்சி நிறுத்திடுவாங்க. அதாவது நெடுஞ்சாலை பஸ் வருவதற்காக ட்ரெய்னுக்கு கேட் போடற மாதிரி இது.''

''புரியுது மாலதி...''

ஏற்றுதல், இறக்குதல் முடிஞ்சவுடனே மறுபடியும் வேகன்களை சேர்ப்பதற்காக கேட்டை மூடிடுவாங்க. இப்போ தொடர்ச்சியா ஒரு மணி நேரம் ரயில்வே கேட் மூடப்பட்டுதான் இருக்கும்.

ஒரு சரக்கு ரயிலோட வேகனை நிரப்புவதற்கு எழுபது முதல் தொண்ணூறு லாரிகள் வந்து போகும். இதனாலயும் இங்க போக்குவரத்து நெரிசல் ஏற்படும்.

ராத்திரி பத்து மணி வரைக்கும் ரயில்கள் வந்து போகும். அதனால ராத்திரி பத்து மணி வரைக்கும் நீடாமங்கலத்துல போக்குவரத்து பிரச்சனை இருந்துகிட்டே தான் இருக்கும். ரயில்வே கேட் போடறதால ஏற்படுகிற டிராஃபிக் நீடாமங்கலத்துக்கு பெரிய நியூசென்ஸ். நீங்க வண்டியை ஏதாவது ஒரு இடத்துல பார்க் பண்ணிட்டு ஒரு பொருள் வாங்கணும்னு நினைச்சா முடியவே முடியாது. ஏன்னா உங்க வண்டியை நீங்க பார்க் பண்ண இடம்

இல்லாம லாரி, பஸ், கார்; தான் நிக்கும்.

தமிழகத்துல இருந்து மட்டுமல்லாம கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில இருந்தும் ஏராளமான பேருந்துகள், கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் நீடாமங்கலம் தேசிய நெடுஞ்ச ாலை வழியாக சிக்கல் நாகூர், வேளாங்கண்ணி போன்ற புனித தலங்களுக்கு வந்து போகுது. இப்படிப்பட்ட முக்கியமான சாலையாக இருக்கிற நீடாமங்கலத்துல மணிக்கணக்காக கேட் போட்டா பிரச்சனை வருமா? வராதா?'' மாலதி கேட்டாள்.

''நிச்சயமாக வரும் மாலதி''

அரவிந்தன் பெரு மூச்சு விட்டான்.

இவ்வளவு பிரச்சனை இருக்கு. இதுவரைக்கும் அரசாங்கத்து தரப்பில இருந்து எந்த நடவடிக்கையும் எடுக்கலையா மாலதி?

''ஏன் எடுக்கல? நிறைய நடவடிக்கைகள் நிதி ஒதுக்கீடு எல்லாம் வந்தது?''

''அப்புறம்?''

''பாலம் மட்டும் தான் வரல''

''புரியற மாதிரி சொல்லு மாலதி''

''இதுல புரியறதுக்கு ஒண்ணுமே இல்ல அரவிந்த். சொல்றேன் நோட் பண்ணிக்க.''

நீடாமங்கலம் புறவழிச்சாலை திட்டத்துக்காக மத்திய அரசாங்கம் நூறு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செஞ்சது. அதுக்குப் பின்னாடி திருச்சியிலேர்ந்து நாகப்பட்டினம் வரைக்கும் நான்கு வழிச்ச ாலை போடறதுன்னு ஒரு திட்டம் கொண்டுவந்தாங்க. அதனால பறவழிச்சாலை திட்டம் கைவிடப்பட்டது. நான்கு வழிச்சாலைத் திட்டம் திருச்சியிலேர்ந்து, தஞ்சாவூர் வரைக்கும் நிறைவேற்றப் பட்டது. அப்புறம் நிதிப் பற்றாக்குறை காரணமா நான்கு வழிச்சாலை திட்டத்தை இரண்டு வழிச்சாலை திட்டமா அறிவிச்சாங்க. அந்தப் பணியும் இதுவரை நடக்கல.''

''இந்த நிலையில மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மா நீ டாமங்கலத்தில் போக்குவரத்தை சரி செய்ய இருபது கோடி மூலம் மேம்பாலம் பணிக்காக ஒதுக்கினாங்க. தமிழக நெடுஞ்சாலைத் துறையும், ரயில்வே உயர் அதிகாரிகள் மேம்பாலம் கட்டுவதற்கான வரைபடத்தை தயார் செஞ்சாங்க. மத்திய அரசும் மேம்பாலத்துக்கு நாப்பத்தி நான்கு கோடியே, நாற்பத்தேழு லட்சம் ரூபாயை

ஒதுக்கியது. மேம்பாலம் அமைக்க மண் ஆய்வு கூட செஞ்சாங்க. மேம்பாலம் வர்ற இடத்துல ஒரத்தூர் வேளாண்மை அறிவியல் நிலையம் இருக்குன்னு ஒரு காரணத்தை சொல்லி திட்டம் கிடப்பில கிடக்கு''

- மாலதி சொல்லி கொடுத்தாள்.

''அப்படீன்னா அறிவியல் நிலையத்தை விட்டுட்டு கொஞ்சம் தள்ளி மேம்பாலம் கட்ட வேண்டியதுதான்..!''

- அரவிந்தன் கேட்டான்.

''நாம இதை கலெக்டருக்கு அனுப்புற மனுவில் சொல்வோம். அரவிந்த்''

''ரயில்வே ஸ்டேஷன் உள்ள பார்க்கறதுக்கு எவ்ளோ அழகா இருக்கு? ஆனா இதைச் சுற்றி நடக்கற பிரச்சனைகள் ரயில்வே ஸ்டேஷன் மேலேயே ஒரு வெறுப்புணர்வை உண்டாக்குது பாத்தியா மாலதி? ஸ்டேஷனை உள்ளும், புறமும் அழகா வச்சி க்கிறது மனுஷங்க கையிலதான் இருக்கு மாலதி.''

- அரவிந்தன் சொன்னான்

''அது இப்ப நம்ம கையில இருக்கு அரவிந்த்
ஏன்னா ரிப்போர்ட் இப்ப நம்மகிட்ட பக்காவா தயார்
ஆயிடுச்சில்ல.''

- மாலதி சொன்னாள்.

''அரவிந்த். ஒரு சின்ன யோசனை.''

- சிவா குறுக்கிட்டான்.

''சொல்லு சிவா''

''மக்களோட கிரிவன்சஸ் இன்னும் அதிகம் இருக்கு, அதனால இன்னும் சில ஆதாரங்கள் சேர்த்துருக்கிறது நல்லது. ரயில்வே கேட்டால பாதிக்கப்பட்ட இன்னும் சில பேரை சந்திச்சு அவங்களோட பாதிப்பையும் நம்ம ரெக்கார்ட்டுல இன்னொரு எவிடென்சா பதிவு பண்ணலாம்.''

''உனக்குத் தெரிஞ்சு பாதிக்கப்பட்டவங்க வேற யாராவது இருக்காங்களா சிவா.''

- அரவிந்தன் கேட்டான்.

''எங்க தூரத்து சொந்தக்காரர் ஒருத்தர், பக்கத்துல தான் கொட்டையூர்ல இருக்கார். நாளைக்கு போய் பார்க்கலாம்.''

- சிவா சொன்னான்.

''ஓகே. அப்ப எல்லோரும் நாளைக்கு காலைல பத்து மணிக்கு கொட்டையூர் வந்திருங்க. இப்ப எல்லோரும் ஒரு டீ சாப்பிடலாம் வாங்க.''

அரவிந்த் சொன்னான். எல்லோரும் டீ சாப்பிடப் போனார்கள்.

## 11

''எனக்கு கனவுகள் கூட இங்க மேம்பாலம் இருக்கற மாதிரி தான் வருது அரவிந்த். கும்பகோணத்துல இருந்து வர்ற பஸ் எல்லாம் அப்படியே அந்த மேம்பாலத்துல ஏறி மன்னார்குடி, பட்டுக்கோட்டைக்கு போகுது. அதே மாதிரி தஞ்சாவூர்ல இருந்து வர்ற பேருந்துகள் மேம்பாலத்துல ஏறி நாகப்பட்டினத்துக்கு போகுது. பேருந்துல இருந்து கீழ போற ரயிலை நான் வேடிக்கைப் பார்க்கிறேன். உண்மையிலேயே எனக்கு அதோ அவ்வளவு உயரத்துல பறக்கற மாதிரி தோணுது அரவிந்த்.''

கேட் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மாலதி அரவிந்தனிடம் சொன்னாள்.

''நல்லவர் லட்சியம் வெல்வது நிச்சயம்னு'' சொல்வாங்க மாலதி. நாம நிச்சயமா லட்சியத்துல ஜெயிப்போம்.''

அரவிந்தன் மாலதியிடம் சொன்னான்.

''ஆமா எங்க அந்த ரெண்டு பேரையும் காணோம்.''

''அவங்க எப்ப நம்மகிட்டே நின்னு பேசியிருக்காங்க. அதோ டீக்கடை வாசல்ல நிக்கிறாங்க பாருங்க. கூப்பிடுங்க.''

''ஏன்டா இப்படி அநியாயம் பண்றீங்க? வாங்கடா...''

''உங்க பிரைவசி பாதிக்க வேணாம்னுதான் நாங்க தனியா போனோம்.''

- சிவா சொன்னான்.

''ஆமாண்டா தேசிய நெடுஞ்சாலையில நின்னுகிட்டு இருக்கறோம். இதுல தான் ரொம்ப பிரைவசி இருக்கு பாரு. உங்க அட்டகாசத்துக்கு அளவே இல்லையா?''

- அரவிந்தன் கேட்டான்.

''அதை விடு மாப்ளே, அந்தக் கடையில வாழைக்காய் பஜ்ஜி சூடா இருக்கு. காரம் எல்லாம் போட்டிருக்கார். ஆளுக்கு ரெண்டு

வாங்கிட்டு வரவா?''

- சிவா கேட்டான்.

பஜ்ஜி சாப்பிடப் போனோம்னு சொல்ல வேண்டியது தானே? அதுக்கெதுக்கு எங்க பிரைவசி, ஊர்வசின்னு பிட்டைப் போடற?''

- அரவிந்தன் கேட்டான்.

''பஜ்ஜி வேணுமா, வேணாமா மாப்ள. அத சொல்லு முதல்ல.''

- சிவா அதட்டலாகக் கேட்டான்.

''பஜ்ஜி சூடா இருக்கு, காரமா இருக்குன்னு சொல்லிட்டு வேணுமான்னு கேட்கறியேடா, வாங்கிட்டு வர வேண்டியது தான?''

''அரவிந்தன் கணக்குல நாலு பஜ்ஜி..''

டீக்கடைக் காரனுக்கு கேட்கற மாதிரி வேகமாகக் கத்தினான் சிவா.

''அடப்பாவி. அதுவும் என் கணக்குலயாடா ? நீயெல்லாம் ரொம்ப நல்லா வருவடா''

அரவிந்தன் சிரித்தான். அது சரி எனக்கே தெரியாம இந்த டீக்கடையில எப்படா அக்கவுண்ட் ஆரம்பிச்ச.''

அது ஒரு வருஷம் ஆச்சி.

- சிவா கூலாக சொன்னான்.

''இங்க மட்டும் தானா, வேற கடையில அக்கவுண்ட் இருக்காடா?''

''அன்னைக்கு பானி பூரி சாப்பிட்டீல்ல, அந்தக் கடையில. அப்புறம் சாந்தி புரோட்டா கடையில,அப்புறம் இண்டியன் பேங்க் பக்கத்துல இருக்கற கூல்டிரிங்ஸ் கடையில.''

- சிவா சொன்னான்.

''இண்டியன் பேங்க்லயும் அக்கவுண்ட் ஓப்பன் பண்ணி கடன் வாங்கியிருக்க வேண்டியது தானே?''

''அங்கேயும் கேட்டோம் மாப்ள, நீ வந்து கையெழுத்து போடணும்னு சொன்னாங்க. அதனாலே தான் முடியாம விட்டுட்டோம்.''

''ஏய் பாத்துடா ஏதாவது அசிங்கப்படுத்திடாதீங்க.''

அரவிந்தன் பரிதாபமாகச் சொன்னான்.

''சரி, சரி ரொம்ப பயப்படாத மாப்ள. இந்தக் கடையிலயும் சேர்த்து மொத்தமே ஆயிரம் ரூபாய் தான் வரும். நீ இப்பக் குடுத்தாக்

கூட செட்டில் பண்ணிடறேன்.''

''இப்பதான் சொன்னேன். அசிங்கப்படுத்தாதீங்கன்னு. என் பேரைச் சொல்லி வெறும் ஆயிரம் ரூபா கடன், இந்த அசிங்கம் எனக்குத் தேவையா?''

அரவிந்த் சொன்னவுடன் எல்லோரும் சிரித்துக் கொண்டே கொட்டையூருக்கு புறப்பட்டார்கள்.

நூறு நாள் பணியாளர்கள் சாலையோரம் கிளை பரப்பியிருந்த கருவேல மரங்களை வெட்டி விட்டுக் கொண்டிருந்தார்கள்.

''பரவாயில்லப்பா இந்த ஊர்ல நூறு நாள் பணியாளர்கள் நல்லா வேலை செய்யறாங்க. கிளைகள் வெட்டறது, வாய்க்கா வெட்டறது, பள்ளிக்கூட மைதானம் சுத்தப்படுத்தறதுன்னு ஏதாவது ஒரு வேலை செஞ்சுகிட்டே இருக்காங்க. ''

- அரவிந்தன் சொன்னான்.

''பொதுவா அப்படி சொல்ல முடியாது அரவிந்த். நூறு நாள் வேலைத் திட்டத்தால நிறைய வேலை நடந்துகிட்டு தான் இருக்கு. வேலை செய்யறப்ப ஒரு பத்து நிமிஷம் டீ வடை சாப்பிடறதுக்காக உட்காரத்தான் செய்வாங்க. அதைப் போய் எல்லோரும் எப்போதும் குறை சொல்லிகிட்டே இருக்கீங்க.''

- மாலதி சொன்னாள்.

''ஏன் மாலதி உனக்கு கோபம் வருது?''

''உழைக்கிறாங்கப்பா, அவர்களுக்கு கொடுக்கற சம்பளத்துக்கு அவங்க உழைக்கிறாங்க. உழைப்பை குறை சொல்ல வேணாம்னு சொன்னேன்.''

''அவ்ளோ தான்''

கொட்டையூருக்கு சரியாக பத்து மணிக்கெல்லாம் வந்து விட்டார்கள்.

''நானும் இந்த ஊருக்கு வந்து ரொம்ப நாளாச்சிப்பா, கொறஞ்சது ரெண்டு வருஷம் இருக்கும்.''

- சிவா சொன்னான்.

''வீடு அடையாளம் தெரியுமா?''

- அரவிந்தன் கேட்டான்.

''தெரியும்... தெரியும்...ஆனா இரண்டு வருசத்துல ஊரு நிறைய மாறியிருக்கு.''

- சிவா சொன்னான்.

ஆறு மாதம் கழிச்சி போனாலே அடையாளம் மாறிப் போயிடும்.

ஏரியா விட்டு ஏரியா வந்துட்டமோன்னு நினைக்கத் தோணும். கடையோ, வீடோ புதுசு, புதுசா வந்திருக்கும்.''

- அரவிந்தன் சொன்னான்.

''ரெண்டு வருசத்துக்கு முன்னாடி இங்க வந்தப்ப இங்க இத்தனை மாடி வீடுகள் இல்லையே''

- கண்மூடி யோசித்தான் சிவா.

''நீ யோசிக்கிறதைப் பார்த்தா உங்க சொந்தக்காரங்க யாரும் இருக்கற மாதிரி தெரியலையே! ஒரு வேளை சொந்தமாகப் போறவங்களை பார்க்க வந்திருக்கியா? எங்களை வச்சி காமெடி, கீமெடி பண்ணலையே!''

- அரவிந்தன் கேட்டான்.

''உடனே ஓட்ட ஆரம்பிச்சிடுவீங்களே! சொந்தமாகப் போறவங்க ஏரியாக்- கெல்லாம் உன்னைச் அழைச்சிகிட்டு போகமாட்டேன் பாத்துக்க. நீ வந்து ஏடா கூடமா எதையாவது போட்டுக் கொடுத் திட்டீன்னா?''

- சிவா கேட்டான்.

''என் மேல உனக்கு நம்பிக்கை இல்லையாடா மாப்ள?''

- அரவிந்தன் பரிதாபமாக கேட்டான்.

''நம்பிக்கையெல்லாம் இருக்கு. சில சமயத்துல நீ உண்மையைச் சொல்றேன்னு எதையாவது உளறி வச்சிடுவ. அதான் பயமா இருக்கு.''

- சிவா சொன்னான்.

''இருடி மாப்ள. இதுக்காகவாவது உன் ஆளு யாருன்னு கண்டு புடுச்சி உன்னைப்பத்தி போட்டுக் கொடுக்கலன்னா என் பேரு அரவிந்தன் இல்லடா?''

''முதல்ல என்னோட ஆளு தமிழ் நாட்டுலயே இல்ல''

''வேறு எந்த ஸ்டேட்?''

''அது வேற ஸ்டேட்டஸ்! விட்டுடு.. வா அது தான் நான் சொன்ன எங்க தூரத்து சொந்தக்காரங்க துரைக்கண்ணு வீடு. சித்தப்பா முறை.''

- சிவா வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினான்.

வண்டிகளின் சப்தம் கேட்டு வெளியே வந்தார். துரைக்கண்ணு.

''யாருப்பா அது!''

சித்தப்பா நான்தான் சிவா வந்திருக்கேன்.

''வாடா வா... இதோ இருக்கு அஞ்சு கிலோ மீட்டர் தூரத்துல

நீடாமங்கலம். இங்க வர்றதுக்கு உனக்கு வழி மறந்து போச்சாடா?''

''கோவிச்சிக்காதீங்க சித்தப்பா...பி.இ. முடிச்சிட்டேன். வேலை ஒண்ணும் கிடைக்கல. ஒரு வேலை வாங்கிட்டுத்தான் உங்களை வந்து பார்க்கணும்னு நினைச்சேன்.''

- சிவா பம்மினான்.

''அப்படீன்னா இப்போ வேலை கிடைச்சிடுச்சா?''

- துரைக்கண்ணு கேட்டார்.

''இல்ல சித்தப்பா.... வேற ஒரு வேலையா வந்திருக்கோம்.''

''சரி...சரி... எல்லாம் உள்ள வந்து உட்காருங்க.''

''சித்தப்பா, இது அரவிந்த். இது சந்தானராமன். இவங்க மாலதி. நாங்க நீடாமங்கலத்துல மேம்பாலம் கட்டறதுக்கு கலெக்டருக்கு மனு அனுப்ப சில ஆதாரங்கள் தயார் பண்ணிகிட்டு இருக்கோம். நீடாமங்கலம் கேட்டால நேரடியா பாதிக்கப்பட்டவங்களோட இழப்பை ஒரு ஆதாரமா ரெடி பண்றோம். ரெண்டு போட்டோ, ஒரு அஞ்சு நிமிஷம் வீடியோ பதிவு பண்ணிக்குவோம்.''

- சிவா தயங்கித் தயங்கியே வார்த்தைகளை உதிர்த்தான்.

''அவர் இப்ப தான் அதை மறந்திட்டு கொஞ்சமா, நார்மலா வந்திட்டிருக்காரு. நீ ஏன்சிவா அதைப் போய் மறுபடியும் ஞாபகப்படுத்தற?''

அனைவருக்கும் காபி பரிமாறியபடியே சொன்னார் சிவாவின் சித்தி.

''மன்னிச்சிக்குங்க சித்தி. உங்களுக்கு ரொம்ப கஷ்டமா இருந்திச்சுன்னா எதுவுமே சொல்ல வேண்டாம்.''

- காபியை எடுத்துக்கொண்டே சொன்னான் சிவா.

''அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா. நான் சொல்றேன். தொண்டையைக் கணைத்துக் கொண்டே சொன்னார் துரைக்கண்ணு.''

துரைக்கண்ணுவின் குரல் கம்மியிருந்தது.

''சித்தப்பா''

தயங்கியபடியே அழைத்தான் சிவா.

''அதான் சொல்றனே. நீங்க ஒரு நல்ல விஷயத்துக்காகத்தான் கேட்கறீங்க. நமக்கு ஏற்பட்ட விபத்து மத்த யாருக்கும் நடக்காம இருக்கணும். அதுக்கு நான் ஏதாவது ஒரு வகையில உதவியா இருக்கேன்னா அது எனக்கு சந்தோஷம் தான் சிவா.''

''. . . . . . . .''

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். அங்கு திடீரென்று ஒரு சோகமான சூழ்நிலை எல்லோரையும் தொற்றிக் கொண்டது.

''நம்ம கடை நீங்க வர்ற வழியில பார்த்திருக்கலாமே! கேட்டுக்கு இந்தப் பக்கம் திருவாரூர் ரோடு திரும்பற இடத்துல இருக்கு. அந்தச் சம்பவத்துக்கு அப்புறம் ரொம்ப சின்னக் கடையா இருக்கு.''

''ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி அது நீடாமங்கலத்துலேயே பெரிய கடை. எலக்டிரிக்கல் சாமான் ஏ ட்டு இசட் எல்லாம் கிடைக்குற பெரிய கடை. ஒரு கோடி ரூவா முதலீடு போட்டு ஆரம்பிச்சது.''

''மெயின் ரோட்டுல கேட்டுக்கு அந்தப் பக்கம் வாடகைக் கடை எதுவும் கிடைக்கல. அதனால தான் கேட்டுக்கு இந்தப் பக்கம் கடை ஆரம்பிச்சேன். பெரிய கடையா இருந்தா தான் நம்மைத் தேடி வருவாங்கன்னு நிறைய முதலீடு பண்ணி ஆரம்பிச்சேன். ஊரைச் சுற்றிக் கடன் வாங்கி போட்ட முதலீடு.''

''நாலு பசங்க என்கிட்ட வேலை செஞ்சாங்க. அம்மா பேட்டையில இருக்கறவங்க கூட எலக்ட்ரிகல் சாமான் வாங்க தஞ்சாவூர் போக மாட்டாங்க. என் கடையைத் தேடி நீடாமங்கலத்துக்கு வந்திடுவாங்க. கிழக்க கொரடாச்சேரியில இருந்து நம்ம கடைக்குத் தான் வருவாங்க. நாள் முழுக்க உட்கார நேரமில்லாம வியாபாரம் நடக்கும்.

ஏன் சிவா நீ நம்மளோட பழைய கடையை பாத்தது இல்லையா?

- இடையில் கேட்டார் துரைக்கண்ணு.

''நான் அப்ப திருச்சில ஹாஸ்டல்ல தங்கி படிச்சிட்டு இருந்தேன் சித்தப்பா. அதனால எனக்குத் தெரியல.''

- சிவா சொன்னான்.

''அப்போ சித்திரை மாசம். ஒரு நாள் காலைல போன் வருது. பக்கத்துல இருந்து சலூன் கடைக்காரார் பேசினார். உங்க கடையில இருந்து புகையா வருது சார். சீக்கிரம் வாங்கன்னு சொன்னார். ஃபயர் சர்வீஸ்க்கு போன் பண்ணிட்டேன்னு சொன்னார்.

நான் அலறி அடிச்சி அஞ்சு நிமிசத்துல கடைக்கிட்ட போயிட்டேன். பெருசா தீ பரவல. பயர் சர்வீஸ் வர்ற சப்தமும் கேட்டுச்சி. அந்த நேரம் பார்த்து கேட் போட்டுட்டாங்க. பயர் சர்வீஸ் வர முடியாம

கேட்டுல சிக்கிடுச்சி. தீ மளமளன்னு பரவிடுச்சி. அதுக்குள்ள வலங்கைமான் பயர் சர்வீஸ் வண்டிக்கு போன் பண்ணி அதுவும் வந்திடுச்சி. மத்த கடைக்கு பரவாம தீயை அணைக்க முடிஞ்சுதே தவிர என் கடையில இருந்து ஒரே ஒரு எல்ஃஇடி பல்பை கூட எடுக்க முடியல. கேட் மட்டும் போடாம இருந்தா ஒரு நேரடியில ஒரு அம்பது லட்சமாச்சும் தேறி இருக்கும்.''

கண்களைத் துடைத்துக் கொண்டார் துரைக்கண்ணு.

''நல்ல விஷயத்துக்காக வந்திருக்கீங்க. நீடாமங்கலத்துல மட்டும் அதே மேம்பாலம் வந்திடுச்சின்னா, என் கடையே திரும்ப வந்த மாதிரி உணர்வேன்.''

- துரைக்கண்ணு கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''சிவா எனக்குத் தெரிஞ்சி இன்னும் ஒருத்தர் கேட்டால பாதிக்கப்பட்டவர் இருக்கார். நீ அவரையும் போய் பார்''

- துரைக்கண்ணு தகவல் சொன்னார்.

நால்வரும் அங்கிருந்து எழுந்து கொண்டார்கள்.

## 12

''ஞானபுரி ஆஞ்சநேயர் கோயில் முகப்பு மண்டபத்தில் மாலதி, அரவிந்தன், சிவா, சந்தான ராமன் நான்கு பேரும் உட்கார்ந்திருந்தார்கள்.''

விசுவரூப ஆஞ்சநேயர் தரிசனம் முடித்துவிட்டு நெற்றியில் செந்தூரம் மணக்க வட்டமாய் அமர்ந்திருந்தார்கள்.

- சுடச்சுட கொடுக்க பொங்கல் கதகதப்பாக தொண்டைக்குள் இறங்கிக் கொண்டிருந்தது.

''நம்ம வீட்ல செய்யற பொங்கல் ஒரு நாள் கூட இந்த அளவுக்கு டேஸ்ட்டா இருக்க மாட்டேங்குதே அது ஏன்?''

- சிரித்துப் புறையேறியது மாலதிக்கு.

''ஆஞ்சநேயர் இருபத்தைந்து அடி உயரம் இருப்பாரா மாலதி?''

- அரவிந்தன் கேட்டான்.

இந்த ஆஞ்சநேயரோட உயரம் முப்பத்தி மூன்று அடி. இந்த ஆஞ்சநேயரோட பேர் சங்கடகர மங்கள மாருதி.

கிருஷ்ணாநந்த தீர்த்த மகா சுவாமிகள் என்பவர் தான் இந்தக்

கோயிலை நிர்மானிச்சவர். கும்பாபிஷேகத்தின் போது இங்கு வந்து நாற்பது நாள் தங்கியிருந்தார். அப்போ நானும் போய் சாமி கிட்ட ஆசீர்வாதம் வாங்கினேன்.

ஆஞ்சநேயரோட எடை நானூற்று ஐம்பது டன். ஒரே கல்லால் ஆன ஆஞ்சநேயர். தமிழ் நாட்டிலேயே பெயர் பெற்ற ஸ்தபதியான முத்தையா ஸ்பதியின் சீடர் ராமகிருஷ்ண ஸ்தபதியார் சிற்பக் கூடத்தில் தயாரான விக்ரகம். எவ்வளவு கம்பீரமா ஆஞ்சநேயர் நிற்கறார் பாத்தியா?''

கிட்ட போய் பாத்தீங்கன்னா ஆஞ்சநேயர் தாமரை பீடத்துல வீற்றிருக்கிறது தெரியும். பாத்தீங்களா?

- மாலதி கேட்டாள்.

''நான் கவனிக்கல மாலதி!'' அரவிந்தன் சொன்னான்.

''நான் பொங்கல் தீர்ந்திடுமோ என்கிற பயத்துல சீக்கிரமா பிரகாரம் வந்துட்டேன். அதனால பீடத்தை கவனிக்கல?''

- சிவா சொன்னான்.

''ஆஞ்சநேயருக்கு வலப்பக்க சந்நிதியில இருக்கற லட்சுமி நரசிம்மரும், இடப்பக்க சந்நிதியில இருக்கற கோதண்ட ராமரும் பார்த்துகிட்டே இருக்கலாம் போல அவ்வளவு அழகு.''

பூரிப்புடன் சொன்னாள் மாலதி.

''இந்தக் கோயில் கும்பாபிஷேகம் நடந்தப்போ, ஹெலிகாப்டர்ல இருந்து பூத்தூவினாங்க அரவிந்த். என் மேல கூட பூக்கள் விழுந்திச்சு. அப்பக்கூட ஆஞ்சநேயர், நீடாமங்கலத்துல பாலம் கட்ட ஒரு வழியைக் காட்டு சாமின்னு வேண்டிக்கிட்டேன். ஆலங்குடி குரு கோயிலுக்கு வர்றவங்க அப்படியே இங்கேயும் வர்றதாலே எப்போதும் கூட்டம் அதிகமாவே இருக்கும்.''

''ஆஞ்சநேயர் நமக்கு பாலம் தரும் சாமி. பலத்தையும், தைரியத்தையும் கொடுக்கிறவர். பொதுவா வயசுக்கு வந்த பெண்கள் ஆஞ்சநேயரை கிட்ட நின்று கும்பிட பயப்படுவாங்க. ஆனா எனக்கு ஆஞ்சநேயரை ரொம்ப பிடிக்கும். முருகன் மாதிரி ஆஞ்சநேயர் என் இஷ்ட தெய்வம் தான். நாம வந்திருக்கிற இந்த பொது காரியம் வெற்றி அடைய முழு பலத்தையும் ஆஞ்சநேயர் தரணும்னு எல்லோரும் வேண்டிக்கங்கப்பா.''

மாலதி ஆஞ்சநேயரைப் பார்த்து மறுபடியும் கையெடுத்து கும்பிட்டாள்.

இன்னைக்கு நம்ம ரிப்போர்ட்டருக்கு தேவையான பைனல் எவிடென்ஸ், பைனல் சப்போர்ட்டிங் டாகுமெண்ட்ஸ் எடுக்கப் போறோமா இல்லையா!''

''நான் நேத்து ராத்திரியே விஷயத்தை கலெக்ட் பண்ணிட்டேன் மாலதி மேடம். ரத்னகுமார் டிரஸ்ட்ல பேசி வீடியோ, போட்டோ எல்லாத்தையும் வாட்சப்ல வாங்கிட்டேன்.''

''ரத்னகுமாரோட அப்பா பேசினார். ரத்னகுமார் என்கிறது அவரோட பையன். அந்தப் பையன்தான் ஆக்சிடெண்ட்ல....''

''நண்பனைப் பார்க்கணுங்கிற அவசரத்துல வேகமாக வந்திருக்கான். இவன் வந்த நேரம் கேட் போட்டிருக்காங்க. கேட் மேல இருந்து இறங்கற டைப் கேட் தான். கேட் கீழ வர்றதுக்குள்ளே கிராஸ் பண்ணிடலாம்னு நினைச்சிகிட்டு கொஞ்சம் வேகமா போயிருக்கான். இவன் போறதுக்கும், கேட் வேகமா கீழ இறங்கறதுக்கும் சரியா இருந்துருக்கு. கேட் மேல மோதி விழுந்துட்டான். வேகமா வந்ததால தலையில அடி. பையன் அங்கேயே....''

''நான் தான் ஏற்கனவே சொன்னேனே. வருசத்துக்கு இது மாதிரி மூணு, நாலு ஆக்சிடெண்ட் நடக்குது. விபத்து நடந்த பிறகும் மக்களுக்கு அதுல விழிப்புணர்வு ஏற்படறதில்ல. மஞ்சள் விளக்கு போட்ட உடனே கியரை முறுக்கிக்கிட்டு போறாங்க.

''. . . . . .''

''மேம்பாலம் வேணும்னு சொல்றதுக்கு இதுவும் சரியான ஒரு பாய்ண்ட் தான் அரவிந்த்.''

- மாலதி சொன்னாள்.

ரத்னகுமார் பத்திய டீடெய்ல்ஸ் எல்லாம் அவங்க அப்பா எனக்கு வாட்சப்ல அனுப்பிவிட்டாரு அரவிந்த். நாம் வெளியில போய் பிரிண்ட் அவுட் எடுத்துக்கலாம்.''

- சிவா சொன்னான்.

''நீடாமங்கலம் ரயில்வே கேட்டால எவ்வளவு பிரச்சனைகள், விபத்துகள், உயிரிழப்புகள் நடந்திருக்கு என்பதற்கு நமக்கு நிறைய ஆதாரங்கள் கிடைச்சிருக்கு. ஒவ்வொரு ஆதாரமும் வெவ்வேறு டைப். நுட்பமான உணர்வுப் பூர்வமான சிக்கல்கள் நடந்திருக்கு. ஒவ்வொரு விபத்தும் ஒரு குடும்பத்தை முழுசா பாதிச்சிருக்கு. சமூகத்தையே பாதிச்சிருக்கு. வாழ்க்கையை பாதிச்சிருக்கு.''

''இதையெல்லாத்தையும் தெளிவா சுருக்கமாக டைப் பண்ணி

கலெக்டர் ஆபீஸ் வெப் சைட்ல அப்லோட் பண்ண வேண்டியது உன்னோட பொறுப்பு அரவிந்த். அப்லோட் பண்ண பிறகு சேவ் பண்ணி ஒரு பிரிண்ட் அவுட் போட்டுடு. வீடியோவை கூகுள் டிரைவ் லிங்க்கா மாத்தி பெட்டிசனோடையே அட்டாச் பண்ணிடு அரவிந்த்.''

''அதுக்குப்பிறகு பிரிண்ட் அவுட்டை எடுத்தகிட்டுப் போய் கலெக்டர்கிட்டே நேரடியா கொடுப்போம். எம்.பி., எம்.எல்.ஏ. என்று வேற யாரையும் பார்க்க வேணாம்.''

''ஒரு மாசத்துக்குப் பிறகும் நமக்கு எந்த பதிலும் வரலைன்னா தகவல் அறியும் உரிமைச் சட்டத்துல பதில் கேட்போம்.''

''ஒவ்வொரு படியா நடவடிக்கை எடுப்போம். கலெக்டர் ஆபீஸ்ல ரயில்வே அமைச்சர் தான் முடிவு செய்யணும்னு சொல்லிட்டாங்க. இதே புகாரை ரயில்வே மினிஸ்டரக்கு அனுப்புவோம். நிச்சயமா நல்ல பதில் கிடைக்கும்னு நம்புறேன்... பிரெண்ட்ஸ்.''

- மாலதி சொன்னாள்.

''இப்பதான் நமக்கு ஒரு சரியான ரூட் பிடிபட்டிருக்கு மாலதி. நீ சொன்ன மாதிரியே செய்யலாம்.''

''ஆறு மாசமா நாயா பேயா அலைஞ்சி திரிஞ்சி இன்னைக்கு தான் ஒரு வடிவம் கிடைச்சிருக்கு அரவிந்த். இப்பதான் மனசுக்கு கொஞ்சம் திருப்தியா இருக்கு.''

- மாலதி பெரு மூச்சு விட்டாள்.

''நாளைக்கு எல்லோரும் பத்து மணிக்கு நீடாமங்கலம் நூலகத்து க்கு வந்திருங்கப்பா. இப்போ எல்லோரும் கிளம்பலாம்.''

- மாலதி சொன்னாள்.

''**கோ**ரையாற்றில் தண்ணீர் திறந்து விட்டிருந்தார்கள். வெண்ணாறு மற்றும் பாமினியாற்றில் ஷட்டர்கள் அடைக்கப்பட்டு இருந்தன. கோரையாற்றில் மடை திறந்த வெள்ளம் துள்ளிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தது.

ஷட்டர் பாலத்தின் மேலே இருந்து ஒரு பெரிய மூங்கில் கூடை கட்டப்பட்டு ஷட்டருக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தது. இன்னும் ஓர் அரையடி உயரத்திற்கு தண்ணீர் மேலே எழும்பினால் மூங்கில் கூடையைத் தொட்டு இழுத்து மூழ்கடித்து விடலாம்.''

ஆனால் நீர்த்திவலைகள் நான்கு அடிக்கும் மேல் உயரமாக எழுந்து கூடைக்குள்ளும், கூடைக்கு வெளியேயும் விழுந்து

கொண்டிருந்தது.

அலையடிக்கிற வெள்ளம் பார்ப்பதற்கே ஆனந்தமாக இருந்தது.

நீர்த்திவலைகள் துள்ளுவதைப் பார்த்தபடியே கோரையாற்றின் கரையில் உட்கார்ந்திருந்தார்கள். மாலதி, அரவிந்தன், சிவா, சந்தானராமன் நான்கு பேரும்.

''அது எதுக்கு அங்க மூங்கில் கூடை தொங்கிகிட்டு இருக்கு மாலதி''

- அரவிந்தன் கேட்டான்.

''கொஞ்ச நேரம் அந்தக் கூடையை உத்துப் பாத்துகிட்டே இரு அரவிந்த். விஷயம் புரியும்.''

- மாலதி சொன்னாள்.

அரவிந்த் அந்தக் கூடையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆமா.. ஆமா... கண்டுபிடிச்சிட்டேன்.''

சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான் அரவிந்த்.

என்ன கண்டு பிடிச்ச? மாலதி கேட்டாள்.

''காற்றோட திசையைப் பார்க்கறாங்கன்னு நினைக்கறேன். தண்ணி அதிகமா வர்றப்ப கூடை வேகமா ஆடுது. காத்து கம்மியா அடிச்சா மெதுவா ஆடுது. அதானே.''

''ம்....உம்...மண்டை...''

அரவிந்தன் தலையிலேயே கொட்டினாள் மாலதி.

''நல்லா பாரு, ஷட்டர்ல இருந்து வெளிய வர்ற அலையில இருந்து துள்ளிக் குதிக்கிற மீன்கள் அந்தக் கூடைக்குள்ள விழுது, அப்படி மீன் பிடிக்கிறதுக்குத் தான் கூடையைக் கட்டி தொங்க விட்டுருக்காங்க...''


**கண்மணி**

**கண்மணி தபாலில் பெற ஓராண்டு (உள்நாடு) சந்தா-ரூ.900 6 மாதம்-ரூ.450 மணியார்டர் மற்றும் காசோலை MURASU PUBLICATIONS என்ற பெயரில் அனுப்ப வேண்டிய முகவரி:**

**நிர்வாகி**

**கண்மணி**

**மாலைமுரசு பில்டிங், 246, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006.**

**சந்தா தொகையை NEFT/RTGS மூலம் செலுத்த:-**

**MURASU PUBLICATIONS**
**A/C NO. 6034172999**
**Indian Bank, Peters Road Branch**
**IFSC:IDIB000R047**

**நிர்வாகப்பிரிவு:**
murasupublication@gmail.com
**போன்: 044-28297225**

''இது என்ன வானிலை ஆராய்ச்சி மையமா... காற்றோட திசையைக் கண்டு பிடிக்கிறதுக்கு?''

- மாலதி அரவிந்தனை முறைத்தப்படியே சொன்னாள்.

''ஓ..ச்சே...இந்த அவமானம் எனக்குத் தேவையா?''

அரவிந்தன் முகத்தில் அசடு வழிந்தது.

''யார் மீன் பிடிக்கிறாங்க ஆளையே காணோம்''

அதோ ஷட்டருக்கு நேரா மேல பாரு ஒருத்தர் படுத்திருக்கிறாரா?

''ஆமாம்''

''அவர் தான் இதுல ஓரளவு மீன்கள் சேர்ந்தவுடனே மேலே தூக்கி அள்ளிடுவாரு.''

''பார்க்கறதுக்கே அழகா இருக்கு மாலதி. நாமளும் அதே மாதிரி ஒரு மூங்கில் கூடை வாங்கி பிடிக்கலாமா?''

- அரவிந்தன் கேட்டான்.

''குத்தகை எடுத்திருக்கிறவங்க தான் பிடிக்க முடியும். வர்றவங்க, போறவங்க எல்லாம் பிடிக்க முடியாது.''

''ஏன் மாலதி கோபப்படற?''

அரவிந்தன் பவ்யமானான்.

''பின்ன என்ன? நான் எவ்வளவு சீரியஸான விஷயத்தை சொல்லியிருக்கேன். அது பத்தி யாரும் பேச மாட்டேங்கறீங்க? மீன் பிடிக்கிறதை பத்தி பேசறீங்க?''

- மாலதி முகத்தை திருப்பி வைத்துக் கொண்டாள்.

நீ எதை சீரியஸான விஷயம்னு சொல்ற மாலதி!

''வேணாம் அரவிந்த் என் கோபத்தைக் கிளறாதே?''

''சரி சொல்லு நான் என்ன பண்ணனும்?''

- அரவிந்தன் கேட்டான்.

''நேத்து விசலூர் ஜோசியர் வீட்டுக்கு வந்தப்ப தான் எனக்கு அப்பா தீவிரமா மாப்பிள்ளை பாத்துகிட்டு இருக்காருன்னு தெரிந்தது. நாலஞ்சு ஜாதகம் கொடுத்திட்டுப் போயிருக்காரு.''

எல்லாமே பொருத்தமான ஜாதகம் தான் ஏழாமிடம், எட்டாமிடம் எல்லாம் சுத்தமா இருக்கு. பிரச்சனையில்லைன்னு சொன்னது என் காதுல விழுந்தது.''

அப்பா என்கிட்ட இதுவரைக்கும் நேரடியா கேட்கல. ஒரு வேளை நாளைக்கு குல தெய்வம் கோயிலுக்கு போயிட்டு வந்து பேசலாம்னு நினைச்சிருக்கலாம்.''

''நாளைக்கோ, நாளை மறுநாளோ என்கிட்ட கண்டிப்பா கேட்பார். நான் எப்படி சமாளிக்கிறதுன்னு தெரியல அரவிந்த்.''

''இதுல சமாளிக்கிறதுக்கு என்ன இருக்கு. எந்த பையனை பிடிக்கிறதோ, அந்த பையனை கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே!''

பக்கத்தில் இருந்த ஒரு பெரிய செங்கல்லை எடுத்து அரவிந்தை அடிப்பதற்காக ஓங்கினாள் மாலதி.

''அய்யோ. கொலை... கொலை...காப்பாத்துங்க...''என்று விளையாட்டாய் கத்தினான் அரவிந்தன்.

''என்ன காமெடி பண்றியா? அப்படியே ஆத்துக்குள்ள பிடிச்சி தள்ளி விட்ருவேன் பாத்துக்க.''

- அரற்றினாள் மாலதி.

''என்ன அரவிந்த் நான் சீரியசா பேசிகிட்டு இருக்கேன். இப்படி காமெடி பண்ற?''

''நான் என்ன செய்யணும்னு சொல்லு மாலதி. உங்க வீட்டுக்கு பொன்னு கேட்டு வரவா? இல்லை நீ முதல்ல, நம்ம காதலைப் பத்தி உங்க அப்பா கிட்ட சொல்றியா? என்ன செய்யலாம்.''

- அரவிந்த் கேட்டான்.

''கல்யாணமே இப்ப வேணாம்னு சொல்லிட்டு இருக்கேன். பொண்ணு பாக்க வரவான்னு கேட்கற. பாலம் கட்டணும்... குறைந்த பட்சம் பாலம் கட்டற வேலையாவது ஆரம்பிக்கணும் அரவிந்த்.''

''சரி... மாலதி... இப்போ பிரச்சனை வேற ரூபத்துல வருதே என்ன பண்றது?''

- அரவிந்தன் கேட்டான்.

''என்னமோ சொன்ன, மேம்பாலம் கட்டினப்பிறகு பாலத்து மேல நின்று தான் கல்யாணம் பண்ணனும்னு சொன்ன? லட்சியத்தை மறந்துட்டியா?''

- மாலதி கோபமாக கேட்டாள்

''நான் ஒன்னு சொல்றேன் கேளுங்க ப்ளீஸ்''

- சிவா இடையில் புகுந்தான்.

''சொல்லு சிவா. உன்னோட யோசனை என்ன!''

''குறிப்பிட்ட வயசுக்கு பிறகு ஒரு பெண்ணை வீட்டுல வச்சி க்கிறதுக்கு எந்த அப்பா, அம்மாவும் யோசிப்பாங்க. இப்பவே

திருமணப் பேச்சை ஆரம்பிச்சாத்தான் ஒரு வருசத்துக்கு அப்புறமாவது கல்யாணம் நடக்கும்.''

''. . . . . ''

''அப்பாகிட்டே போய் இப்போ எனக்கு கல்யாணம் வேணாம்னு சொன்னா அப்பா கேட்கமாட்டாரு. அது மட்டுமல்லாம, முதன் முதலா கல்யாணப் பேச்சு வர்றப்ப பாஸிடிவா பேசணும். இப்போதைக்கு வேணாம்னு சொல்றது அந்த அளவுக்கு நல்லதில்ல. முதன் முதலா பேச்சு எடுக்கறப்பவே, நேர் மறையா பேசிடுங்க. அதான் நல்லது.''

- சிவா சொன்னான்.

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க சிவா!''

''இப்போதைக்கு நீங்க உங்க அப்பா, அம்மாகிட்ட அரவிந்த் பத்தி பேசி நிச்சயதார்த்தம் பண்ணிக்கோங்க. பாலம் கட்டினப் பிறகு கல்யாணம் பண்ணிக்கோங்க. நம்ம பாலத்துக்காக தொடர்ந்து வேலைப் பார்க்கப் போறோம். எப்படி இருந்தாலும் இரண்டு, மூணு வருசத்துல பாலம் கட்ட தொடங்கிடுவாங்க. அப்போ நீங்க கல்யாணம் பண்ணிக்கலாம். நிச்சயதார்த்தம் முடிஞ்சிருச்சி ன்னா உங்க கல்யாணப் பத்தின பேச்சும் ஒரு முடிவுக்கு வந்திடும் இல்லையா?''

மாலதி அமைதியாக இருந்தாள்.

''கல்யாணப் பேச்சு முடிவுக்கு வந்திடுச்சின்னா நீங்க பாட்டுக்கு உங்க லட்சியப் பயணத்தில தொடரலாம். உங்க காதல் விஷயத்தை உங்க அப்பாகிட்ட பொறுமையா சொல்லி அப்பாவை ஏத்துக்க வைக்க வேண்டியது உங்க பொறுப்பு. அதை விட்டுட்டு காதலை மறைச்சிட்டு கல்யாண பேச்சைத் தள்ளிப் போட்டுக் கிட்டே போனா, அது ஆபத்தா கூட முடிஞ்சிடும்.''

- சிவா சொன்ன போது அதிர்ச்சியானாள் மாலதி.

''என்ன சொல்றீங்க சிவா? என்ன மாதிரி ஆபத்து வரும்.''

''உங்க மேல இருக்கற நம்பிக்கையில உங்க சம்மதமே கேட்காம, உங்களுக்கு வேற ஒரு மாப்பிள்ளையை உங்க அப்பா பிக்ஸ் பண்ணி வாக்கு கொடுத்திட்டா என்ன பண்ணுவீங்க?''

''நோ, ப்ளீஸ் சிவா நீங்க வேற எதுவும் சொல்லாதீங்க?''

மாலதிக்கு கண்கள் தளும்பி இருந்தது.

''அரவிந்த் நீ இல்லாத வாழ்க்கையை என்னால நினைச்சுக்கூட

பார்க்க முடியாது. அது உயிரற்ற வாழ்க்கை மாதிரி தான். என் மனசை ஒட்டு மொத்தமா உன்கிட்ட கொடுத்திட்டேன் அரவிந்த். இனிமே விளையாட்டுக்கு கூட யாரும் பிரிச்சிப் பேச வேணாம்.''

- மாலதி அரவிந்த் தோளில் சாய்ந்து கொண்டாள்.

மாலதியின் விழிகளில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டான் அரவிந்த்.

சிவாவும், சந்தானமும் தங்கள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள்.

ஆசுவாசப்படுத்தி கொண்டு அரவிந்தன் தோள்களில் இருந்து விடுபட்டாள் மாலதி.

''சரி அரவிந்த் இன்னைக்கே நான் அப்பாகிட்டே இது பத்தி பேசிடறேன். நீயும் உங்க அப்பா, அம்மாகிட்டே பேசிடு அரவிந்த். இப்போதைக்கு தேதி குறிக்காம நிச்சயதார்த்தம் பண்ணிக்கலாம்.

- மாலதி நம்பிக்கையாகப் பேசினாள்.

'எனக்குக் தெரிஞ்சு அரவிந்தனின் சைடுல எந்தப் பிரச்சனையும் இருக்காதுன்னு நினைக்கறேன் மேடம். உங்கப்பாதான் கறார் பார்ட்டி, நேர்மை, வாய்மை, தூய்மைன்னு பேசிட்டு இருப்பார். உங்க அப்பாகிட்டே பேசி நீங்க சம்மதம் வாங்கிடுங்க.''

- சிவா தான் சொன்னான்.

''என்ன அரவிந்த் நீ எதுவும் பேசமாட்டியா? அவரே பேசிகிட்டு இருக்கார்.''

- அரவிந்தனின் தோள்களை இழுத்தபடி கேட்டாள் மாலதி.

''நீ கண்ணீர் விட்டு அழுதுட்ட மாலதி. நான் அழல அவ்வளவு தான் வித்தியாசம். என் மனசோட இவ்வளவு நெருக்கமா வேற யாருமே இருந்ததில்ல மாலதி.''

''. . . . . ''

''எங்க அப்பா ஒத்துக்கல, முடியாதுன்னு சொல்லிட்டார். ப்ளீஸ் மன்னிச்சிடு அப்படின்னு ஒரு வார்த்தை கூட சொல்லிடாத மாலதி. நான் இந்த ஆத்துலயே குதிச்சி கரைஞ்சி போயிடுவேன்.''

அரவிந்தன் கலங்கினான்.

''ஏய்... ஏய்...''

அரவிந்தனுக்கு பதில் ஏதும் சொல்லாமல் அவனை அப்படியே கட்டிக் கொண்டாள் மாலதி.

'க்கும்..., தொண்டையைக் கணைத்தான் சிவா.. இருவரும்

வெட்கப்பட்ட சிரிப்புடன் விலகிக் கொண்டார்கள்.

''ஆமா அரவிந்த் கலெக்டருக்கு கொடுக்க வேண்டிய கம்ப்ளைண்ட் வெப்சைட்டில அப்லோட் பண்ணியாச்சா?''

''இன்னும் கொஞ்சம் டைப் பண்ண வேண்டியிருக்கு மாப்ள''

''முதல்ல அந்த வேலையைப் பாருங்க. ரெண்டு பேரும் இங்க இருந்து கிளம்புங்க. காதல் செய்யறோம்னு பாலம் கட்டறதை மறந்துடாதீங்க.''

- எல்லோரும் சிரித்தபடி அங்கிருந்து கலைந்து சென்றார்கள்.

## 13

''மாலதியின் அப்பா பரமசிவம் ஜாதகங்களை எல்லாம் எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தார். ஜாதகத்தோடு இணைக்கப்பட்டிருந்த மாப்பிள்ளைகள் புகைப்படம் மற்றும் பயோ டேட்டாவையும் எடுத்து தனித் தனியாக பின் அடித்தார்.

பஞ்சாங்கத்தை எடுத்து வைத்துக் கொண்டார். ஜாதகத் தாளின் நான்கு புறங்களிலும் மஞ்சள் தடவினார். மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு ஜாதகக் கட்டங்களை பார்த்தார்.

- விரல் விட்டு கட்டங்களை எண்ணினார்.

சில ஜாதகங்களைப் பார்த்த போது முகத்தில் அப்படி ஒரு பிரகாசம். சில ஜாதகங்களை பார்த்த உடனேயே எடுத்து ஓரமாக வைத்தார்.

- மாலதியும் அம்மா காமாட்சியும் எதிரில் இருந்த சோபாவில் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். மாலதி பயத்தில் அம்மாவின் தோள்களை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா... அம்மா...''என்று காதுக்குள் கிசுகிசுத்தவளை பொறுமையா இரு மாலதி நான் பாத்துக்கறேன் என்று அமைதிப்படுத்தினாள். வேலை பார்த்துக் கொண்டு இருக்கும் போது குறுக்கே பேசினால் அப்பா கோபப்படுவார் என்று மாலதிக்குத் தெரியும்.

- நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

- அதற்கு ஏற்ற மாதிரி சில ஜாதகங்களில் டிக் அடித்துக்

கொண்டிருந்தார், பரமசிவம்.

- ஒரு வழியாக வேண்டாம் என்று ஒதுக்கிய ஜாதகங்களை ஓரமாக எடுத்து வைத்துவிட்டு மூன்று ஜாதகங்களை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தார் பரமசிவம்.

- மாலதியும், அம்மாவும் எதையோ சொல்வதற்கு தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அதை பெரிதாகப் பொருட்படுத்தாமல் பேசினார் பரமசிவம்.

''இங்கபாரு மாலதி இதுல மூன்று ஜாதகம் இருக்கு. மூன்றுமே பொருத்தமான ஜாதகம். ஒரு மாப்பிள்ளை பையன் சென்னையில டாட்டா மோட்டார்ஸ்ல வேலை பாக்கறாரு, இன்னொரு பையன் கோயமுத்தூர் சக்தி சுகர்ஸ்ல வேலை பாக்கறாரு, இன்னொருத்தர் பக்கத்து ஊரு தான் பிரைவேட் காலேஜ்ல அசிஸ்டெண்ட் புரபொசர்.''

''நீயும் பாரு மாலதி. ஏன் நீங்க ரெண்டு பேரும் பாருங்க. உங்களுக்கு பிடிச்ச மாதிரி இருந்தா வரச்சொல்லி பேசுவோம். உங்களுக்கு ஜாதகம் எதுவும் பிடிக்கலேன்னா சொல்லுங்க. ஜோசியர்கிட்டே சொல்லி வேற ஜாதகம் கொண்டு வரச்சொல்லுவோம்.''

ஜாதகங்களை நீட்டினார் பரமசிவம்.

மாலதியும், காமாட்சியும் ஜாதகங்களை வாங்காமல் பரமசிவத்தைப் பார்த்தனர். அவர் சோபாவில் ஜாதகத்தை வைத்து விட்டு கண்ணாடியைக் கழட்டினார்.

''என்ன? ஏன்? பிடிக்கலையா?''

பரமசிவம் கேட்டார்.

- இருவரும் அமைதியாக இருந்தார்கள்.

''ஏன் மாலதி என்ன சொல்றா?'' இப்போதைக்கு கல்யாணம் வேணாம்னு சொல்றாளா?''

''அ...அது... இல்லைங்க... வேற ஏதோ ஒரு விஷயம் பேசணுமாம்.''

- இழுத்தாள் காமாட்சி

''வேறு ஏதாவது விஷயம்னா? காலேஜ் படிப்பு முடிஞ்சு கல்யாணம் வச்சுக்கலாம்னு சொல்றாளா? அதான் மூணுவருசம் முடியப் போகுதே. மே மாசம் எக்ஸாம் முடிஞ்சிடும். ஜூன், ஜூலைல கல்யாணம் வச்சிக்குவோம். மாலதிக்குத்தான் தெரியுமே

ஒண்ணாம் வகுப்பே லேட்டாதான் சேர்த்தோம். வர்ற ஜூன் மாதத்தோட இருப்பத்தோரு வயது முடியுது.''

''. . . . . .''

''இப்பவே ஆரம்பிச்சாதான் இன்னும் ஆறு மாசத்திலயாவது முடியும். இதே மாப்பிள்ளையைக் கட்டிக்கணும்னு சொல்லலையே. புடிச்சாத்தான், இல்லன்னா வேற வரன் பாப்போம்.''

- பரமசிவம் சொன்னார்.

இருவரும் மறுபடியும் அமைதியாக இருந்தார்கள்.

''நீங்க ரெண்டு பேரும் அமைதியாக இருக்கறதைப் பார்த்தா வேற ஏதோ பிரச்சனைன்னு நினைக்கிறேன். என்ன பிரச்சனைன்னு சொல்லுங்க.''

- பரமசிவம் கேட்டார்.

''உன் தம்பி மகன் இருக்கானே அவனுக்கு கட்டி வைக்கலாம்னு யோசிக்கிறியா காமாட்சி? அதான் அப்பவே ஒட்டும் இல்ல உறவும் இல்லன்னு போயிடுச்சே.''

''அதெல்லாம் இல்லைங்க மாலதி ஏதோ...'' சொல்ல முடியாமல் தயங்கினாள் காமாட்சி.

''சரி உங்க ரெண்டு பேருக்கும் நான் ஒரு உத்தரவாதம் தர்றேன். நீங்க என்ன சொன்னாலும் நான் கோபப்பட மாட்டேன். விஷயத்த சொல்லுங்க. ஏன்னா இது கல்யாண விஷயம்?''

''அப்படியும் சொல்ல முடியாமல் தயங்கினாள் காமாட்சி.''

- மாலதி முகத்தில் புன்னகையும், பயமும் மாறி மாறிப் படர்ந்தது.

பரமசிவம் கண்டுபிடித்து விட்டார்.

''பையன் யாரு?''

''ஆம்... அப்பா... அது....அது..... வந்து...''

''சொல்லு மாலதி பயப்படாத... பையன் யாரு...''

''இதே ஊர்தான்ப்பா, தாமோதரசாமியோட மகன் அரவிந்த். மெட்ராஸ்ல இருந்து வந்திருக்கார்.''

- பரமசிவம் கண்களை மூடிக்கொண்டார்.

அவர் முகத்தில் கவலையான ரேகைகள் மாறி, மாறி வந்து போனது.

சொம்பில் இருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தார்.

பெரிதாக மூச்சு விட்டு ஆசுவாசப் படுத்திக் கொண்டார்.

''எனக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லம்மா...''

முதல் வார்த்தையே இப்படிச் சொன்னதும் அப்பாவை ஓடிச்சென்று கட்டிக்கொண்டாள் மாலதி.

''அப்பா.. நாங்க கல்யாணம் பண்ணிகிட்டா நிச்சயமா சந்தோஷமா இருப்போம்ப்பா...''

''இருக்கட்டும் மாலதி நீ புரியாத வயசுல பேசுற. இந்த வயசுல இப்படி யெல்லாம் பேசத் தோணும்.''

''அப்பா....?''

''நான் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டதுக்கு வேற காரணம் இருக்கு மாலதி.''

- பரமசிவம் புதிர் போட்டார்.

''அப்பா என்ன சொல்றீங்க!''

''பயப்படாத. நல்ல விஷயம் தான் சொல்றேன். நீ புரட்சிக் கல்யாணம்னு சொல்லி விட்டு யாரோ ஒருத்தனை கூட்டிட்டு வந்து முன்னாடி நிக்கல. தாமோதர சாமி ஒரு வகையில நமக்கு தூரத்து உறவுக்காரர் தான். நான் ஒத்துகிட்டதுக்கு இது ஒரு காரணம். இன்னொன்று நல்லா வசதி படைச்சவர். நில புலம் வசதி எல்லாம் இருக்கு. நம்ம நீடாமங்கலம் மார்க்கெட்லயே அவருக்கு நிறைய கடைகள் இருக்கு.

''அதே மாதிரி நான் கேள்விபட்ட வகையில் பையன் ரொம்ப நல்ல பையன். அப்பா, அம்மா பேச்சை மீறி நடக்கமாட்டானாம். சென்னையில படிச்சிட்டு வந்திருக்கார். அந்த அறிவோடு நடந்துக்குவார். எப்படியோ பையன் நல்ல பையன்.''

''ரொம்ப நன்றிப்பா''

- மாலதி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''இன்னொரு காரணம் நீ கல்யாணம் பண்ணிப் போற இடத்தில சாப்பாட்டுக்கு வழி இல்லாம சிரமப்பட வேண்டிய அவசியம் இருக்காது. ஒரு அப்பாவா நான் அதைப் பார்த்து தான் ஆகணும். நான் பெரிய மனசோடு ஒத்துக்கிட்டேனா, இல்ல சுயநலத்தோட ஒத்தகிட்டேனான்னு கேட்டா, என் பொண்ணு நல்லா இருக்கணும்ங்கிற சுயநலம் தான் மாலதி.''

- பரமசிவம் சொன்னார்.

''ஆனா அப்பா... அரவிந்தன் உங்களை மாதிரி ஒரு பொது நலவாதிப்பா''

கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள் மாலதி.

''என்ன மாலதி இப்பதான் என்னை நான் சுயநலவாதின்னு சொல்லிட்டு இருக்கேன். என்னைப் போய் ஒரு பொது நலவாதின்னு சொல்ற?''

''ஏம்ப்பா.. பொய் சொல்றீங்க? ஊருக்கே நல்லது செய்யணும்னு நினைச்சு பல சேவை காரியங்கள் செஞ்சுகிட்டு இருக்கீங்க. உங்களைப் பார்த்துதானே, எனக்கு பொது மக்களுக்கு சேவை செய்யணும் என்கிற எண்ணமே வந்திச்சு.''

- மாலதி அப்பாவை விட்டுக் கொடுக்காமல் பேசினாள்.

''அது சரி, மாப்பிள்ளை ஏதோ பொது நலவாதின்னு சொன்னியோ, எப்படி?''

- பரமசிவம் கேட்டார்.

''அப்பா நான் சொல்றதைக் கேட்டா நீங்க ரொம்ப ஆச்சரியப்பட்டு போவீங்க!

''அப்படியா சந்தோஷம், சீக்கிரம் சொல்லு''

நீடாமங்கலத்துல மேம்பாலம் கட்டணுங்கிறதுக்காக நாங்க ஒரு பெரிய வேலை செஞ்சிருக்கோம்ப்பா.

''ஓ! வெரிகுட்! இந்த ரயில்வே மேம்பாலம் மட்டும் வந்திடுச்சின்னா? நீடாமங்கலத்துக்கே அது பெரிய விடியலா இருக்கும்மா..''

''சீக்கிரமாவே அந்த விடியல் வரப் போகுதுப்பா..''

''உங்களால அந்த விடியல் வந்துச்சுன்னா, ஊர் மக்கள் உங்களைக் கொண்டாடுவாங்க மாலதி. சொல்லப் போனா, ஊர் மக்களே உங்க கல்யாணத்தை முன்னாடி நின்னு நடத்துவாங்க.''

- பரமசிவம் பெருமைப்பட்டார்.

''கடந்த முப்பது வருசமா, அங்க மேம்பாலம் வரணும்னு எவ்வளவு கஷ்டப்- பட்டிருப்பேன் தெரியுமா? என்னோட வாழ் நாள் லட்சியம் மாலதி அது. இந்த ஊர் மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையா நான் நினைக்கிறேன் அந்தக் கடமை உன்னால, இல்ல உங்களால நிறைவேறுதுன்னா அதை விட எனக்கு வேற பெரிய பெருமை இருக்காது மாலதி.''

- பரமசிவம் கலங்கினார்.

''அப்பா, இப்ப ஏன் நீங்க உணர்ச்சி வசப்படறீங்க?''

''இல்ல மாலதி, நீடாமங்கலம் ரயில்வே கேட்டுக்கு பதிலா, மேம்பாலம் வரணும்னு நான் முயற்சிகள் பண்ணினப்போ நான்

எதிர் கொண்ட பிரச்சனைகள் அதிகம் மாலதி. சவால்கள் அதிகம். கொலை மிரட்டல் கூட வந்திச்சு.''

'அதுக்கெல்லாம் நான் பயப்படலம்மா... இருந்தாலும் போராடி, போராடி நாங்க ஓய்ஞ்சி போயிட்டோம்.''

''. . . . . .''

''அதை விடு மாலதி. நீங்க இளைஞர்கள் புதுமையா யோசிச்சு இருப்பீங்க....என்ன ஏற்பாடு பண்ணிருக்கீங்க?''

- பரமசிவம் ஆர்வமாகக் கேட்டார்.

- அரவிந்தனை முதல் நாள் சந்தித்தது முதல், பாலம் கட்டுகிற ஏற்பாடு பணியில் அவன் தன்னோடு இணைந்து செயல்பட்ட எல்லாவற்றையும் வரி விடாமல் சொல்லி முடித்தாள் மாலதி.

''கேட்கறதுக்கு சந்தோஷமா இருக்கு மாலதி. ஒரே மாதிரி சிந்தனை அலைவரிசை உள்ளவங்க தான் வாழ்க்கையில இணைய முடியும்.''

நம்ம வீட்டுக்கு வரப்போற மருமகனும், நம்மை மாதிரியே பெர்து நல சிந்தனையோடு இருக்கிறது பெரிய விஷயம். இந்த மாதிரி லட்சிய வாதிகளுக்கு நாம ஜாதியோ, மதமோ கூட பார்க்க வேண்டியதில்ல. ஊருக்கே நல்லது செய்யணும்னு ஒருத்தர் நினைப்பதை விட வேற என்ன குணம்; வேணும்.

''அப்பா, நீங்க இவ்வளவு சீக்கிரம் ஏத்துகிட்டு, முழு மனசோட ஒத்துக் -குவீங்கன்னு நினைக்கவே அப்பா.''

''காரணமே இல்லாம நான் ஏன் எதிர்க்கப் போறேன் மாலதி. அவர்களை முறைப்படி வரச்சொல்லு. ஒரு நல்ல நாள் பார்த்து தேதியை முடிவு பண்ணிடலாம்.''

- பரமசிவம் சொன்னார்.

''இல்லப்பா, இப்போதைக்கு நிச்சயம் மட்டும் பண்ணிக்கலாம்ப்பா. பாலம் கட்டி முடிச்ச பிறகு கல்யாணம் வச்சு க்கலாம்ப்பா, குறைந்த பட்சம் பாலம் கட்ட ஆரம்பிச்ச பிறகு தான் கல்யாணம்ப்பா..''

''. . . . . .''

''இது நாங்களா எடுத்த முடிவுப்பா''

- மாலதி சொன்னான்.

''ஒரு பொது நலவாதியா உங்க முடிவு எனக்கும் பிடிச்சிருந்தாலும், ஒரு அப்பாவா திருமணத்தையும்,

லட்சியத்தையும் போட்டுக் குழப்பிக்க வேணாம் மாலதி. கல்யாணம் நடக்கிற மாதிரி நடக்கட்டும். இன்னொரு பக்கம் லட்சியத்துக்காக போராடலாமே! நிச்சயதார்த்தம் பண்ணிட்டு ரொம்ப நாள் கல்யாணம் பண்ணாம இருக்கக் கூடாதுன்னு சொல்வாங்க.''

''எனக்கென்னமோ, ரெண்டுமே சீக்கிரம் நடந்திடும்னு தோணுதுப்பா, முதல்ல கலெக்டர்கிட்ட மனு கொடுக்கறோம். அதோட விட்டுடப் போறதில்ல. தொடர்ந்து அதை பாலோ பண்ணப் போறோம். அழுத்தம் கொடுக்கப் போறோம். இந்த தடவை முன் வச்ச காலைப் பின் வைக்கப் போறதில்லப்பா.''

- அப்பாவின் ஆதரவு அவளுக்கு பெரிய ஊக்கமாக இருந்தது.

இதே மகிழ்ச்சியுடன் அரவிந்தனை சந்திக்க காத்திருந்தாள் மாலதி.

## 14

''**நீ**டாமங்கலம் ரயில்வே கேட்டை ஒட்டிய வெண்ணி நதியின் படித்துறையில் உட்கார்ந்திருந்தார்கள் மாலதி, அரவிந்தன், சிவா, சந்தானராமன் நான்கு பேரும்.

எல்லோருடைய முகத்திலும் கடுமையான அதிர்ச்சியின் ரேகைகள் பரவிக் கிடந்தன.

தண்டவாளத்தில் ஓடுகின்ற ரயில்கள் தன் தலையில் கடப்பதாகவே உணர்ந்தாள் மாலதி.

நீ என்ன சொல்ற அரவிந்த். தெளிவா சொல்லு! மாலதி கேட்டாள்.

அரவிந்த் நேற்று அவன் வீட்டில் நடந்ததை விவரிக்க ஆரம்பித்தான்.

''அரவிந்த் நீ காதலிச்சதையோ, கல்யாணம் பண்ணிக்கலாம்னு முடிவு செய்ததையோ நான் தப்பு சொல்லல. ஆனா நீ செலக்ட் பண்ணி இருக்கற பொண்ணு தப்பான சாய்ஸ்.''

''நிச்சயமா இல்லப்பா, நல்ல நாலெட்ஜ் அரசியல் அறிவு, வரலாறு மற்றும் அறிவியல்னு எல்லாத் துறையிலயும் பயங்கரமான அறிவு இருக்கற பொண்ணுப்பா மாலதி.''

''அதெல்லாம் ஓ.கே....''

''அது மட்டுமில்லப்பா, நல்லா சமூக சேவை செய்யணும்னு

அக்கறை உள்ளவள் அந்த மாலதி.''

''அதான் ஏற்கனவே சொல்லிட்டியே அரவிந்த்.''

''இல்லப்பா இன்னொரு விஷயம் சொன்னா நீங்க நிச்சயமா ஆச்சரியப்படுவீங்க. நம்ம நீடாமங்கலத்தில ரயில்வே மேம்பாலம் கட்டறதுக்கு ஏற்பாடு பண்றதுக்காக நிறைய போராட்டங்கள் பண்ணிருக்காங்கப்பா, நிறைய தடவை இது சம்மந்தபட்ட துறை அமைச்சர்களுக்கு மனு எழுதியிருக்காங்கப்பா.''

அரவிந்தன் படபடப்பாக சொன்னான்.

''அது தான் தப்பு அரவிந்த். அதனால மட்டும் தான் எனக்கு பிடிக்கல.''

- தாமோதரசாமி சொன்னார்.

''அப்பா நீங்க என்ன சொல்றீங்க''

''ஒரே வரியில சொல்றேன். கேட்டுக்கோ அங்க பாலம் வரக்கூடாது என்பது தான் என்னோட விருப்பம்.''

திடீரென்று அதிர்ச்சியானான் அரவிந்த்.

''என்னப்பா சொல்றீங்க? நீடாமங்கலத்துல ரயில்வே மேம்பாலம் வரக்கூடாதா?

''ஆமாம்''

''ஏம்ப்பா''

''என்ன அரவிந்த் புரியாத மாதிரி பேசற! நமக்கு நீடாமங்கலம் பஜார்ல முப்பது கடைகள் இருக்கு. ஹோட்டல், மளிகைக்கடை, உரக்கடை, அரிசிக்கடை, எலக்ட்ரிக் ஜாமான்னு, நாமளே நிறைய வியாபாரம் பண்றோம். இது தவிர நம்முடைய கடைகள் வாடகைக்கு விட்டிருக்கோம். நாளைக்கு அங்க மேம்பாலம் வந்திருச்சுன்னா எல்லாத்தையும் இடிச்சுட மாட்டாங்களா? நம்ம நிலத்தை கையகப்படுத்தி மத்திய அரசாங்கம் எடுத்துக்கும்.''

- தாமோதரசாமி படபடத்தார்.

''அதுக்கு நிவாரணத்தொகை கொடுத்திருவாங்கப்பா. எல்லாக் கடைகளும் இடிபட வாய்ப்பு இல்லையே.''

''இன்னிக்கு அந்த இடத்தோட மதிப்பு எவ்வளவு தெரியுமா உனக்கு! அதை அரசாங்கம் கொடுக்குமா?''

அப்பா நான் ஊருக்கு வந்த ஆறு மாசமா அங்க பாலம் கட்டணும்ங்- கிறதுக்காக நிறைய வேலை செஞ்சிருக்கேம்ப்பா. அப்பவே நீங்க சொல்லியிருக்கலாமேப்பா.

அரவிந்தன் மெதுவாக சொன்னான்.

''நீ என்ன பண்ணிகிட்டு இருக்கேன்னு என்கிட்ட சொன்னியாடா? ஏதோ நண்பர்களோட சேர்ந்து சுத்திகிட்டு இருக்கன்னு நினைச்சேன். சரி இருபது வருஷமா வெளியூர்ல இருந்தவன், ஒரு வருஷம் ஊரைச் சுத்தி வரட்டும், அப்புறமா பிஸினசுக்குள்ள கொண்டு வரலாம்னு நினைச்சேன். நீ பாலம் கட்ட பாடுபடறன்னு எனக்குத் தெரியுமா?''

''அப்பா, நான் மாலதியை உயிருக்குயிரா காதலிக்கிறேம்ப்பா. அவளை நினைச்சு பெரிய, பெரிய கற்பனையை வளர்த்திருக்கேம்பா. அவ இல்லாம என்னால வாழ முடியாதுப்பா.''

- அரவிந்தன் கலங்கினான்.

''நான் ஏத்துக்கறேன், நான் உங்க திருமணத்தை ஜாம், ஜாம்னு நடத்தி வைக்கிறேன்.''

- தாமோதரசாமி சொன்னார்.

''அப்பா'' நிமிர்ந்து பார்த்தான் அரவிந்தன்.

''என்னப்பா சொல்றீங்க''

''உண்மையைத்தாண்டா சொல்றேன். உங்க கல்யாணத்தை நான் ஜாம், ஜாம்னு நடத்தி வைக்கிறேன். ஆனா ஒரு கண்டிஷன்.''

''என்ன கண்டிஷன்ப்பா?''

''இந்தப் பாலம் கட்டறதுக்காக நீங்க ஏற்பாடு பண்ற எல்லா வேலையையும் நிறுத்திப்புடணும். நீங்க தயாரிச்சிருக்கிற மனு,

''அந்த ஏரியா பிச்சைக்காரன் உஷார் பேர் வழியா எப்படி?''

''வாஸ்து பார்த்து பிச்சை கேட்கிறானே!''

-பி.ஜே.ராதா, சீர்காழி.



அதற்கான ஆதாரம், எல்லாத்தையும் முதல்ல கிழிச்சித் தூக்கி போடணும். பேட்டிக் கட்டுரை, வீடியோ எல்லாத்தையும் நொறுக்கி அள்ளி குப்பையில வீசச் சொல்லு. இதெல்லாம் நமக்குத் தேவையா?''

- தாமோதரசாமி சொன்னார்.

''அப்பா பாலம் கட்டுறதுதான் உயிர் மூச்சுன்னு நிக்கிறாங்கப்பா மாலதி''

- அரவிந்தன் யார் பக்கம் பேசுவது என்று தெரியாமல் தவித்தான்.

''இங்க பாரு அரவிந்த். சந்தோஷமா மாலதியை என் மருமகளா ஏத்துக்கத் தயார். சம்பந்தியாகப் போற நேரத்துல அவங்களுக்கும் நமக்கும் இந்த சண்டை தேவையா? அரவிந்த். பேசாம மனு எல்லாத்தையும் கிழிச்சி போட்டுட்டு வரச்சொல்லு. நாளைக்கே நாம முறைப்படி போய் பொண்ணு கேப்போம்''

அரவிந்தன் சொல்வதையெல்லாம் தலை குனிந்தபடியே கேட்டுக் கொண்டிருந்தாள் மாலதி.

''நீ என்ன சொல்ற அரவிந்த்?''

மாலதி கொஞ்சம் கூட ஜீவனே இல்லாமல் கேட்டாள்.

''எங்கப்பா, உன்னை மகிழ்ச்சியோட ஏத்துக்கிறேன்னு சொல்றார் மாலதி. ஆனா பாலம் கட்டற ஏற்பாடு போராட்டம் எல்லாத்தையும் விட்டுடச் சொல்றாரு.''

''அதான் சொல்லிட்டியே! நீ என்ன சொல்ற!''

''அப்பா சொல்றதுல ஒரு விதமான நியாயம் இருக்கறதா படுது மாலதி.''

அரவிந்த் சொன்ன போது பேரதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள் மாலதி.

''நீ கொஞ்சம் நிதானமா கேட்கணும் மாலதி.''

- அரவிந்த் அவளை நேருக்கு நேர் பார்க்காமல் ஆற்றின் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

''கடைகள் இடிபடும், கடைக்காரங்களோட வாழ்வாதாரம் பாதிக்கும்னு சொல்றதுல ஒரு நியாயம் இருக்கத்தானே செய்யுது மாலதி!''

- மாலதி நிதானித்தாள்.

''இங்க பாரு அரவிந்த். உன் அப்பாவோட சுயநலப் பாதையில நீயும் போயிடாத! உன் அப்பாவோட வார்த்தை ஜாலத்துல

நீ மயங்கிடாத!''

''அப்பா மத்த கடைக்காரங்களப் பத்தியும் யோசிச்சுதான் பேசுறார் மாலதி.''

''அது ஒரு காரணம். தன்னோட சுயநலத்துக்கு ஆதரவா மத்தவங்களையும் இழுக்கறது. நீ நாலு பேர் கூட நின்னு பேசி கிட்டு இருக்கறப்ப, ''என்ன நான் சொல்றது சரி தானா?'' ன்னு கேட்டீன்னா. உடனே எல்லோரும் ''ஆமாமா'' ன்னு சொல்வாங்க. நீ என்ன பேசின? எதைப் பத்தி கேட்கறன்னு கூட தெரியாம பக்கத்துல இருக்கறவங்க 'ஆமா' சொல்வாங்க. உங்கப்பா சொல்றது இது மாதிரி தான்.''

நீ வேணும்னா நீடாமங்கலத்துல இருக்கற கடைகள்ல ஒரு சர்வே எடுத்துப் பாரு, தொண்ணூறு சதவீதம் பேர் மேம்பாலம் வேணும்னுதான் சொல்வாங்க அரவிந்த். இப்படி ஆறு மாசமா ஒரு நல்ல லட்சியத்துக்காக உழைச்சிட்டு, சுய நலத்திற்காக பலியாகிடாத அரவிந்த்.

''இங்க பாரு மாலதி, நாங்க ஒண்ணும் வரதட்சணை கேட்கலையே? நாம சம்பந்தியாகப் போற நேரத்துல இந்த சண்டை நமக்குள்ள தேவையா?''

''ம்ஹூம்....''

அவள் ஏளனமாக வார்த்தையை உதிர்த்தாள். அவளிடம் இருந்து ஒரு வெற்றுப் புன்னகை உதிர்ந்து நதியில் மிதந்தது.

''நீ வரதட்சணை கேட்டிருந்தாக் கூட கடனை உடனை வாங்கி கொடுத்திருப்போம் ஆதி. நீ விலையா கேட்கிறது எங்க நேர்மையை, நீ பாலம் கட்டறதுக்கு முயற்சி எடுக்கறன்னு சொன்னப்ப, எங்கப்பா எவ்வளவு சந்தோஷப்பட்டாரு தெரியுமா? சாதி, மதம், எதையும் பார்க்க வேணாம். இப்படியொரு லட்சியம் போதும். நான் என்ன வேணும்னாலும் செய்யறேன்னு சொன்னார்.''

எங்க அப்பா காதலுக்கு சம்மதிச்சதே, நீ பாலம் கட்டறதுக்கு தொடர்ந்து முயற்சி பண்ணுவ என்கிற நம்பிக்கையில தான். இத மீறி கல்யாணம் பண்ணிகிட்டா. நம்ம காதலில் உயிரே இருக்காது அரவிந்த்.

மாலதி படபடப்பாக பேசினாள்.

''ரெண்டு பேரும் இங்க பாருங்க. கோபத்துல ஏதும் வார்த்தைகளை விட்டுடாதீங்க. ரெண்டு பேரும் ஒருத்தர் மேல ஒருத்தர் எவ்வளவு

பிரியமா, பாசமா இருந்திருக்கீங்கங்கிறது எங்களுக்குத் தெரியும். ''நீங்க ஒருத்தரை ஒருத்தர் பிரிந்து வாழ முடியாது, தயவு செய்து கல்யாணம் பண்ணிக்கிற முடிவுல பின் வாங்கிடாதீங்க.''

சிவாவும், சந்தானராமனும் பதற்றமாகப் பேசினார்கள்.

''சிவா, சந்தானராமன் ரெண்டு பேரும் சொல்லுங்க? இங்க பாலம் வேணுமா! வேணாமா?''

''பாலம் கட்டணும். அதுக்காகத்தான் நாம உயிரைக் கொடுத்து அலைந்தோம். இத்தனை ரெக்கார்ட்ஸ், இத்தனை எவிடென்ஸ் கலெக்ட் பண்ணியிருக்கோம்.''

'' அப்புறம் என்ன?''

அதே சமயம் உங்க காதலும் ஜெயிக்கணும். காதலர்கள் நீங்க பிரிஞ்சிடக் கூடாது. அதை முதல்ல எங்களால தாங்க முடியாது. நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சிடாதீங்க! இப்படி உயிருக்குயிறா இருந்துட்டு பிரிஞ்சிடக் கூடாது. சந்தானராமன் அழுதான்.

சிவா கையெடுத்துக் கும்பிட்டான்.

''இங்க பாரு மாலதி. நல்ல காரியங்கள் எத்தனையோ இருக்கு அதையெல்லாம் செய்வோம். பாலம் விஷயத்தை எங்க அப்பாவுக்காக, நம்ம வாழ்க்கைக்காக, மத்த கடைக்காரங்க நலனுக்காக விட்டுடுவோம் மாலதி.''

''பாலம் என்கிற ஒற்றைப் புள்ளியில இணைந்து தான் நாம் காதலிக்கவே ஆரம்பிச்சோம். பாலம் என்கிற ஒற்றைப் புள்ளி தான் நம்மை காதலிக்கவே வச்சது. அதை விட்டுட்டு உன்னை நான் கல்யாணம் பண்ணிகிட்டா. என் மனசாட்சியே என்னை மன்னிக்காது.''

- மாலதி பேசிக் கொண்டிருக்கும் போதே கேட் கீப்பர் வேகமாக வந்து கேட் போட்டு விட்டுப் போனார்.

''இது நம்ம காதலுக்கு போட்ட கேட். இங்க மேம்பாலம் வர்றதுக்காக என்னுடைய காதலையும் தியாகம் பண்றேன். இதையும் ரிப்போர்ட்ல ஒரு ஆதாரமா சேத்துக்கலாம். குட் பை அரவிந்த்.''

அரவிந்தன் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருக்க தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நடந்தாள் மாலதி.

**(முற்றும்)**

# சமையல்



# நண்டு ரசம்



### தேவையான பொருட்கள் :

நண்டு-4,
துவரம்பருப்பு-50 கிராம்.
பெரிய வெங்காயம்-1
ப.மிளகாய்-1
தக்காளி-3,கடுகு,வெந்தயம் தலா 1/2 ஸ்பூன்
புளி-எலுமிச்சை அளவு,
மிளகு ,சீரகம்-2ஸ்பூன்,
தனியா-1 ஸ்பூன்,
மிளகாய்வற்றல்-4
பூண்டு -4 பல்
கருவேப்பிலை,
மல்லித்தழை: தேவையான அளவு

### செய்முறை :

மிளகு, சீரகம், தனியா, மிளகாய் வற்றலை நீர் தெளித்து அரைத்து அதில் பூண்டு பற்களை தட்டி போடவும்.நண்டுகளை சுத்தம் செய்து உப்பு, மஞ்சள்தூள் ஒரு கப் தண்ணீர் சேர்த்து ஐந்து நிமிடம் வேக வைத்து இறக்கி,நண்டை நசுக்கி மறுபடியும் அதே நீரில்போடவும்.பருப்பை 3 கப் தண்ணீரில் வேக வைக்கவும். புளியை ஊறவைத்து கரைக்கவும்.

பருப்பு நீரில் தக்காளி அரைத்த விழுது, புளி நீர், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து கரைத்து நண்டு கலவையில் ஊற்றவும் வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு வெந்தயம் தாளித்து நண்டு கரைசலை ஊற்றி நுரைத்து வரும் போது கரு வேப்பிலை, மல்லித்தழை தூவி இறக்கினால் மருத்துவகுணம் கொண்ட நண்டு ரசம் ரெடி.

–அ.யாழினிபர்வதம்,
சென்னை




**தேவையான**
**பொருட்கள்:**

துவரும்பருப்பு-100கிராம்,
கொள்ளு-4 ஸ்பூன்,
கடலைப்பருப்பு-1ஸ்பூன்,
மிளகு -6
காய்ந்த மிளகாய் -1,
எண்ணெய்-1 ஸ்பூன்,
உப்பு-தேவையான அளவு

**செய்முறை**

துவரம் பருப்பு , கொள்ளு, கடலைப்பருப்பு மிளகு, மிளகாய், ஆகியவற்றை எண்ணெயில் வறுத்து ,உப்பு சேர்த்து மிக்ஸியில் கெட்டியாக அரைக்கவும்.

குறிப்பு:

கொள்ளு இடுப்புக்கு பலம் தரும். சிறிது கறிவேப்பிலையும் சேர்த்து அரைக்கலாம். சூடான சாதத்தில் நெய், பருப்புத் துவையல் சேர்த்துப் பிசைந்து கொடுக்கலாம்.

**-கூ.முத்துலட்சுமி,**
**திருவாடானை.**




**தேவையான பொருட்கள்:**

சோளம்-500 கிராம்,
உளுந்து-100கிராம்,
வெந்தயம் -2டேபிள் ஸ்பூன்,
உப்பு-தேவையான அளவு

செய்முறை:-

சோளம், உளுந்து,வெந்தயம் இவற்றை ஊறவைத்து ,தனியாக தோசை மாவு பதத்துக்கு அரைத்து உப்பு சேர்த்து கலந்து கொள்ளவும் .ஐந்து முதல் ஆறுமணி நேரம் புளிக்க வைத்து தோசையாக ஊற்றி எடுக்கவும்.

**-கா. அஞ்சம்மாள்,**

**ராமநாதபுரம்.**



# கோலங்கள்

21 புள்ளி11வரிசை 15 புள்ளி,4 வரிசை நேர்புள்ளி நிறுத்தவும்.

**-மல்லிகா அன்பழகன், சென்னை.**



மகாலெக்ஷ்மி சுப்ரமணியன்.21. பெரமசாமி பிள்ளைவீதி . **-என். இந்திராணி, சிதம்பரம்.**





21 புள்ளி 11 வரிசை 15 புள்ளி, 4 வரிசை நேர்புள்ளி நிறுத்தவும்.

**-மல்லிகா அன்பழகன், சென்னை.**

*11 புள்ளி 3வரிசை. 7 புள்ளி 2 வரிசை 3புள்ளி 2 வரிசை நேர்புள்ளி*

**வி.அனுசுயா -வில்லிவாக்கம்.**






*10புள்ளி10 வரிசை.*

**-எச். சத்தியவதி வில்லிவாக்கம்.**



# மாறாத அருணாசல்...

காஷ்மீர் தனி அந்தஸ்துடன் விளங்கியது. இப்போது அது மாநில அந்தஸ்தையே இழந்துவிட்டது. ஜம்மு-காஷ்மீர் ஒரு யூனியன் பிரதேசமாகவும் லடாக் மற்றோரு யூனியன் பிரதேசமாகவும் இயங்கி வருகின்றன. சிறப்பு அந்தஸ்துடன் காஷ்மீர் விளங்கிய போது காஷ்மீரைச் சேர்ந்த பெண்கள் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களை திருமணம் செய்து கொண்டால் சொத்துரிமை உள்ளிட்டவற்றை அவர்கள் இழந்துவிடுவார்கள்.







அருணாசலப் பிரதேசத்திலும் பழங்குடியினப் பெண்கள் தங்கள் குழுவுக்கு வெளியே திருமணம் செய்து கொண்டால் சொத்துரிமையை இழந்துவிடுவார்கள். காஷ்மீரில் சட்ட ரீதியாகவே இது நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் அருணாசலப்பிரதேசத்தில் இது எழுதப்படாத சட்டமாக உள்ளது. இது சம்பிரதாயம் தான் என்ற போதிலும் இதை மீறி யாரும் செயல்பட முடியாது. ஏனெனில் சமூகக் கட்டமைப்பு அந்த அளவுக்கு வலுவாக உள்ளது.


பீமா காண்ட்

அடுக்கடுக்கான புதுமையின் ஆக்கிரமிப்புக்கு இலக்கு ஆகாத நிலப்பரப்பாகவே அருணாசலப்பிரதேசம் இன்று வரை உள்ளது. இதனால் சாதகங்களும் உண்டு பாதகங்களும் உண்டு.

அருணாசலப்பிரதேசம் என்பது 20-க்கும் மேற்பட்ட பழங்குடிப் பிரிவினரின் தொகுப்பாகவே உள்ளது.

அதில் நூற்றுக்கும் மேற்பட்ட உள் பிரிவினர் உள்ளனர். ஒவ்வொரு பழங்குடிக்கும் தனித்தன்மை உள்ளது. இது உணவு, உடை, உறைவிடம், பண்பாடு உள்ளிட்ட அம்சங்களில் பிரதிபலிக்கிறது.

அபோர், அடி, அடிகலோங், அடி மின்னியோங்க், அடி படம், அக, நாகா பழங்குடி, அபதானி, பங்னி, டப்லா, டியோரி, கலோங், சலுகட்டா மிஷ்மி, கம்தி, மிஜி, மிசிங், மிஷ்மி, மோன்பா, நிஷாங், நிசி, நோக்டே, தகீம், தங்சார், தவாங்மோன்பா, வான்சூ ஆகியவை முக்கிய பழங்குடிப் பிரிவுகளாகும்.

மக்கள் தொகை அடிப்படையில் நிசி பழங்குடியினரே முதன்மை பெற்றுள்ளனர். அவர்களின் எண்ணிக்கை சுமார் 90,000. இதற்கு அடுத்தபடியாக அடி கலோங் பழங்குடியினர் 49,000 பேர் உள்ளனர். மூன்றாவதாக வான்சூ பழங்குடியினர் 48,000 பேர் உள்ளனர்.

இந்நிலையில் பெண்கள் பொருளாதார ரீதியாக உரிமையற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே சொத்தில் பெண்களுக்கு சம உரிமை அளிப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று அருணாசலப்பிரதேசத்தின் தலைநகரான இட்டா நகரில் உள்ள


பமங்க் பெலிக்ஸ்

சில மகளிர் அமைப்புகள் வற்புறுத்தின. இது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டது. இதன் அடிப்படையில் வரைவு அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

அருணாசலப்பிரதேச மகளிர் நலச் சங்கம், இதை மாநில அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த வரைவு அறிக்கையில் திருமணம் மற்றும் சொத்துரிமை தொடர்பான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. அருணாசலப்பிரதேச திருமணம் மற்றும் சொத்துரிமை மசோதா-2021, மாநில சட்டசபையில் எப்போது வேண்டுமானாலும் கொண்டு வரப்படலாம் என்ற நிலை மேலோங்கியது.

இதையடுத்து பல்வேறு பழங்குடி அமைப்புகளின் நிர்வாகிகளும் ஓரணியில் திரண்டனர். அருணாசலப்பிரதேச திருமணம் மற்றும் சொத்துரிமை மசோதா-2021, பழங்குடியின மக்களின் பண்பாட்டைச் சிதைப்பதற்கான நடவடிக்கை என்று சாடினர்.

அருணாசலப்பிரதேசத்தில் பல தார மணம் சகஜமானது. ஐந்துக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்வது அபூர்வமானது



அல்ல. முன்னாள் முதல்வர் ஒருவரும் 6 பெண்களை மணமுடித்திருந்தார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. திருமணம் மற்றும் சொத்துரிமை தொடர்பான மசோதா நிறைவேற்றப்பட்டால் அது பழங்குடியினரின் மீது தொடுக்கப்படுகின்ற கடும் தாக்குதலாக அமைந்துவிடும் எனவே இதற்கு எவ்வகையிலும் இடம் கொடுக்க கூடாது என்று பழங்குடியின அமைப்புகளின் பிரதிநிதிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

அருணாசலப் பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. முதலமைச்சராக பீமா காண்ட் உள்ளார். 'பழங்குடியின மக்களின் உணர்வுகளை காயப்படுத்தும் வகையில் எந்த நடவடிக்கையையும் எடுக்க மாட்டோம்' என்று பீமா காண்ட் கூறியுள்ளார்.

அருணாசலப்பிரதேச உள்துறை அமைச்சர் பமங் பெலிக்ஸ், மகளிர் அமைப்புகள் சார்பில் அளிக்கப்பட்டுள்ள

வரைவறிக்கையை சட்டப்பேரவையில் மசோதாவாக கொண்டுவரும் எண்ணம் மாநில அரசிடம் அறவேயில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அருணாசலப்பிரதேசத்தில் இருந்து மக்களவைக்கோ அல்லது மாநிலங்களவைக்கோ எந்த பெண்ணும் இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டது இல்லை. மாநில சட்ட சபையிலும் விரல்விட்டு எண்ணதக்க அளவில் தான் பெண் எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர்.

அருணாசலப்பிரதேசம் இயற்கை எழில் மிகுந்த பகுதியாகவே திகழ்ந்து வருகிறது. நவீனத்தின் நர்த்தனம் அருணாசலப் பிரதேசத்தின் கிராமங்களுக்குள் ஊடுருவவில்லை. இதனால் தான் அரசியல் ரீதியாகவும், பூகோள ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அருணாசலப்பிரதேசம் பெருமளவு மாறாமலேயே உள்ளது.

சட்டம் எவ்வளவு சிறப்பானதாக இருந்தாலும் அதை அமலாக்குபவர்கள் மோசமானவர்களாக இருந்தால் மக்களுக்கு பயன் கிடைக்காது. ஆனால் அதே நேரத்தில்

**அருணாசலப் பிரதேசத்தில் பாலின விகிதம் பாராட்டுக்குரிய வகையிலேயே உள்ளது. ஆணுக்குப் பெண் இளைப்பு இல்லை என்பதை உறுதிப்படுத்தும் மாநிலங்களில் அருணாசலப்பிரதேசம் முதன்மையாக உள்ளது.**

**அருணாசலப்பிரதேசத்தில் சட்டம் எப்படி இருப்பினும் சம்பிரதாயமே மேலோங்கி உள்ளது. சமுக ரீதியான நடவடிக்கைகள் இந்த சம்பிரதாய நடைமுறையையொட்டியே அமைந்துள்ளன.**

சட்டம் செம்மையானதாக இல்லாவிட்டாலும் கூட ஆட்சியாளர்கள் அறச்சார்புடையவர்களாக இயங்கினால் மக்களுக்கு பயன் கிடைக்காமல் போகாது என்று தத்துவ ஞானி கன்பூசியஸ் கூறியது எக்காலத்திற்கும் எல்லா பிரதேசத்திற்கும் பொருத்தமானதே. இதற்கு நிகழ்கால உதாரணமாக அருணாசலப்பிரதேசம் விளங்குகிறது என்று சமூகவியல் ஆய்வாளர்கள் உறுதிபட உரைக்கின்றனர்.

**நிகரியவாதி**






# கடைசி கிராமம்!

(சிட்குல்)

இந்தியாவின் கடைசி கிராமம் எது? இதற்கு இரண்டு விதமான பதில்கள் கிடைக்கும். ஒன்று சிட்குல் (chitkul) இது இமாசலப் பிரதேசத்தில் உள்ளது.

மற்றொன்று உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள மானா கிராமம்! மானா உத்தரகாண்டின் சமோலா ஜில்லாவில் பத்ரிநாத்தையும் தாண்டி உள்ளது.

இது அதிகாரபூர்வமாக இந்தியாவின் கடைசி கிராமமாக அறிவிக்கப்பட்டு விட்டது. இந்தியாவின் திபெத்-சைனா எல்லையில் உள்ளது. இந்த மானாவை கடந்து தான் பஞ்சபாண்டவர்கள் சொர்க்கம் நோக்கி பயணித்ததாக உள்ளூர் மக்கள் கூறுகின்றனர். அதற்கு ஏற்ப இங்கு ஒரு பீம்கல் பிரிட்ஜ் உள்ளது. மகாபாரதம் எழுதிய வியாசர் வசித்ததாக கூறப்படும் குகை உள்ளது. அருகில் கணேஷ் குகை உள்ளது. இரண்டிலும் சிலை உள்ளது!

'வியாசரும் கணேஷும் பகர்ந்து மகாபாரதம் எழுதியது எங்கள் கிராமத்தில்' என்கின்றனர் மானா மக்கள்! அப்படியானால் இமாசலப்பிரதேசத்தில் உள்ள சிட்குல்!

அது உண்மையில் மக்கள் வசிக்கும் கடைசி கிராமம். அதன்பிறகு இந்தோ திபேத் கடைசி எல்லை உள்ளது!

-ராஜிராதா பெங்களூர்



(மானா)



ஷார்ட்பிலிம்மில் நடித்து வெள்ளித்திரைக்கு அறிமுகமான நடிகை ரித்து வர்மா, மிஸ் ஐதராபாத் பட்டம் வென்றவர். 'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்' படம் கோலிவுட்டில் அவருக்கு விசிட்டிங் கார்டாக அமைந்தது. இப்போதைக்கு தமிழ், தெலுங்கு படங்களில் கவனம் செலுத்தி வரும் ரிது, ' நான் ஈ,' ஹீரோ நானியுடன் ஜோடியாக நடித்த ' டக் ஜெகதீஷ்' தெலுங்கு படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகியுள்ளது. அந்த குஷியில் இருக்கும் அம்மணியுடன் ஒரு அழகான சிட் சாட்.

# நான் நடிக்கிறது எனக்கு பிடிக்கணும்!

–ரித்து வர்மா

**❋ செலக்டிவா படங்களை தேர்ந்தெடுத்து நடிக்குறீங்களே..?**

உண்மையை சொல்லணும்'னா தமிழ், தெலுங்கில் முதல் படத்துக்குப் பிறகு எனக்கு சரியான படங்கள் எதுவும் அமையல. அதே சமயம், வேக வேகமா படங்களை ஒத்துக்கிட்டு நடிக்கவும் எனக்கு இஷ்டமில்ல. எத்தனை படங்கள் நடிக்குறேன்'ங்கிறது முக்கியமில்ல. நான் நடிக்குற படங்கள் முதல்ல எனக்குப் பிடிக்கணும். ஆரம்பத்தில் இருந்தே பார்த்து பார்த்து தான் படங்களின் கதைகளை தேர்வு செஞ்சு நடிக்குறேன். அதனால் நடிச்ச படங்களின் எண்ணிக்கை குறைவு. இப்போ வரிசையா பல படங்கள் கமிட் ஆகி நடிச்சிட்டிருக்கேன், வித்தியாசமான ரோல்களில் நடிக்குறேன்'ங்கிறது கூடுதல் சந்தோஷம்.

**❋ சினிமாவில் ரீது எப்படி?**

நார்த் இந்தியாவில் பிறந்திருந்தாலும் வளர்ந்ததெல்லாம் ஆந்திரா தான். அதனால் எனக்கு தெலுங்கு தெரியும். ஆனா நான் சிட்டியில் வளர்ந்த பொண்ணு, கிராமத்து சாயல் துளி கூட


குடும்பத்துடன்...

என்கிட்ட இருந்ததில்ல. ஆனால் படத்தில் என்னோட ரோலுக்காக ஸ்கின் டோன்'ல இருந்து நடை, உடை, பாவனை எல்லாத்தையும் மாத்திக்குவேன். ஓவரான டிராமா சீன்ஸ் இல்லாம, உணர்வுப்பூர்வமான காட்சிகளில் நடிக்க பிடிக்கும். இதுவரைக்கும் மல்டிபிளக்ஸ் ஆடியன்ஸ்'க்கு மட்டுமே தெரிஞ்ச நான், இனிமேல் கிராமத்து ஜனங்க வரைக்கும் ரீச் ஆகுற மாதிரி நல்ல கதையம்சம் உள்ள படங்களில் வெரைட்டியான ரோல் பண்ண விரும்புறேன்.

**❋ அப்ப கிளாமர் ரோல் என்றால் எஸ்கேப் ஆகிடுவிங்களா?**



சத்தியமா அப்படி எல்லாம் இல்லங்க. நான் கிளாமர் ரோலில் நடிக்க தயார், ஆனா படத்துக்கு அது எந்த அளவுக்கு முக்கியம்'னு பார்ப்பேன். எல்லா விதமான ரோலிலும் நடிக்க தான் நான் விரும்புறேன்.

**❀ஒரே நேரத்தில் ரெண்டு மொழிப் படங்கள் சவாலா இல்லையா?**

கலைஞர்களுக்கு மொழி ஒரு தடையே இல்ல, இப்போ கோலிவுட், டோலிவுட், பாலிவுட்'னு எல்லா துறை கலைஞர்களும் கலந்து நடிக்க ஆரம்பிச்சிட்டாங்க. சமீபகாலமாக மொழி ரீதியான சவால்கள் ரொம்பவே குறைஞ்சிடுச்சு.

**❀அப்போ பாலிவுட்'ல நடிக்குற ஐடியா இருக்கா?**

நிச்சயமா இருக்கு, நார்த் இந்தியா குடும்பப் பின்னணியில் இருந்து வந்ததால பாலிவுட்'ல நடிக்குற ஆசையும், கனவும் ரொம்பவே இருக்கு, கண்டிப்பா அது நடக்கும்'னு நம்புறேன்.

**❀எதிர்கால திட்டங்கள் என்ன?**

இந்திய சினிமா தளத்தில் எனக்குன்னு தனியிடம் பிடிக்கணும். இணை தயாரிப்பாளராக உயரணும், லாக்டவுன் நேரங்களில் ஓ.டி.டி. படங்களுக்கு மவுசு அதிகமாகிடுச்சு. பொழுதுபோக்குக்கு ஓ.டி.டி. மட்டுமே இப்போ இருக்குற ஒரு ஆறுதல்.

எதிர்காலத்தில் சின்ன பட்ஜெட் ஓ.டி.டி. படங்களை தயாரிக்கும் ஆசை இருக்கு.

**❀அடுத்தடுத்த படங்களைப் பற்றி?**

தெலுங்கில் நாகசவுரியாவுக்கு ஜோடியாக நடிசிருக்குற ரொமாண்டிக் படம் 'வருடு காவலேனு' ரிலீசுக்கு வெயிட்டிங்கில் இருக்கு. சர்வானந்த் கூட நடிச்சிருக்குற 'ஒகே ஒக ஜீவிதம்' படம் தமிழ், தெலுங்கு ரெண்டு மொழிகளிலும் ரிலீசாகப் போகுது.

தமிழில் விக்ரம் கூட நடிச்ச 'துருவ நட்சத்திரம்' படம் நீண்டகாலமா கிடப்பில் இருக்கு. இது தவிர இன்னொரு தமிழ் படத்திலும் கமிட் ஆகியிருக்கேன்.

**– தவா**






# சாதிக்க சிறந்த வழி!

தண்டனை வழங்குவதின் மூலம் சாதிப்பதை விட கருணையின் மூலம் கூடுதலாக சாதிக்க முடியும் என்றார் மண்டேலா!

நெல்சன் மண்டேலா ஜெயிலில் இருந்தபோது அவருடைய தாயார் மற்றும் மகன் இறந்து போனார்கள்! இறுதியாத்திரையில் கலந்து கொள்ள நெல்சன் மண்டேலாவுக்கு ஜெயில் நிர்வாகமோ; அரசோ அனுமதிக்கவில்லை.


நெல்சன் மண்டேலா

ஆனால் நெல்சன் மண்டேலா அமைதி காத்தார். அத்துடன், ''இந்த சூழலில் கோபம் கொள்வது என்பது விஷம் குடிப்பதற்கு சமம். அத்துடன் அந்த விஷம் எதிரியை கொல்லும் என நினைப்பது, அதனை விட அபத்தம்! ஆக கோபத்தை தவிர்ப்போம்'' என்றார்.

மேலும் விடுதலையாகி தேர்தலில் நின்று ஜெயித்த பின்பும் கூட, அவர் நிறவெறி வெள்ளையர்களை பாடாய்படுத்த வில்லை! மாறாக மன்னித்து விட்டார்.

ஒரு சமயம் நெல்சன் மண்டேலா தனது குடும்பத்தினருடன் ஒரு ஹோட்டலுக்கு சாப்பிடச் சென்றார். அப்போது அங்கு சாப்பிட வந்த ஒரு வெள்ளையர் ஒருவர், மண்டேலாவை பார்த்ததும் தலையை குனிந்தார். பிறகு அவர் தலையை நிமிர்த்தவேயில்லை. இதனிடையே மண்டேலாவுக்கு அதுயார் என தெரிந்தது.

தான் இருந்த ஜெயிலின், ஜெயிலர் அவர். அத்துடன் நெல்சன் மண்டேலாவை இரக்கமே இல்லாமல் பாடாய்படுத்தியவர். ஆனால் நெல்சன் மண்டேலா என்ன செய்தார் தெரியுமா?

எழுந்து சென்று அவரிடம் நெருங்கி கைகுலுக்கி, சௌக்கியமா? எனக் கேட்டதுடன், அவருக்கும் சேர்த்து ஆர்டர் செய்து சாப்பிட வைத்தார்.

அப்படியும் அந்த வெள்ளையர், தலையை தூக்காமலே சாப்பிட்டு விட்டு, எழுந்து சென்று விட்டார்.!

**-ராஜிராதா பெங்களூர்**

தமிழ் (ஈழத்)
தலைவன் கதை -13

# தமிழீழ கொள்கை முழக்கம்...



**புதிய தமிழ்புலிகள் அமைப்பை தொடங்கியபோது பிரபாகரன் தலைமறைவு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். எனவே, வெளிப்படையாக இயங்கி நிதி திரட்டுவதும் உறுப்பினர்களை சேர்ப்பதும் கடினமாகவே இருந்தது.**

அதுமட்டுமல்ல, அவர் மூன்று வேளை உண்டு, உறங்கி இயல்பான வாழ்க்கை வாழ்வதே இயலாததாயிற்கு. பெரும்பாலும் இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள் சேர்ந்தால் அவர்களிடம் பணம் இல்லை.

இந்த இலட்சணத்தில் ஆரம்பத்தில் இயக்கத்தில் சேர வந்த பலரும் இயக்கத்திடமிருந்தே தங்கள் குடும்ப செலவுக்கும் எதிர்பார்த்தனர். இவ்வாறான இடர்பாடுகளனைத்தையும் தனது பிடிவாத குணத்தால் பிரபாகரன் கடந்தார்.

புதிய புலிகள் இயக்கத்தில் சேர்பவர்களுக்கு பிரபாகரனே பயிற்சியாளராக இருந்தார். அவர்களுக்கு மட்டுமல்ல, அப்போது இந்தியாவிலிருந்து திரும்பிவந்த குட்டிமணி, தங்கத்துரை போன்றோருக்கும் அவரே பயிற்சி அளித்தார். புளியங்குளம் முகாமில் இருவரோடு, ராசுப்பிள்ளைக்கும் துப்பாக்கி சுடும் பயிற்சி வழங்கப்பட்டது.

புதிய புலிகள் இயக்கத்தின் பெயர் மக்கள் மனதில் நன்கு பதிந்த நிலையில், அப்பெயர் தமிழீழ விடுதலை புலிகள் என 1976 மே 5ஆம் நாள் மாற்றப்பட்டது. புதிய


**பிறரின் விமர்சனங்களை தடுக்கும் விதத்தில் விடுதலை புலிகள் இயக்கத்துக்குள் மது, போதை, சிகரெட் எதற்கும் இடமில்லை. எல்லோரும் எளிமையை கடைப்பிடிக்க வேண்டும். கொண்ட லட்சியத்தில் நிலைத்திருக்க வேண்டும் என பிரபாகரன் கட்டுப்பாடுகள் விதித்தார். பிறருக்கு விதித்ததையே அவரும் கடைப்பிடித்தார்.**

தமிழ்ப் புலிகள் இயக்கத்தில் இருந்த கடுமையான சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக புது இயக்கம் உருவாக்கப்பட்டது.

இந்த காலகட்டத்தில் பிரபாகரனுடன் இருந்தவர் மனோ மாஸ்டர். புதிய தமிழ் புலிகள் என்று இருந்த பெயரை தமிழீழ விடுதலைப் புலிகள் என்று மாற்றுவதற்கு இவரும் ஒரு காரணகர்த்தா.


பின்னாட்களில் உமா மகேஸ்வரனோடும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரபாகரனும் சிலரும் குட்டிமணி, தங்கத்துரை தலைமையில் செயல்பட்ட டெலோவில் செயல்பட்ட போது, விடுதலை புலிகள்

இயக்கத்துக்கு ஊக்க சக்தியாக இருந்தவர் இவர்.


உமா மகேஸ்வரன்

மனோ மாஸ்டர், உமா மகேஸ்வரன் போன்றோர் கம்யூனிச சித்தாந்தங்களை கற்றுத்தேர்ந்தவர்கள். அதனால், விடுதலை புலிகள் இயக்கம் தொடங்கப்பட்ட போது அதை அரசியல் இயக்கமாக முதன்மைப்படுத்தும் முன்மொழிவை இவர்கள் கொண்டு வந்தனர்.

விடுதலைப் போரில், சிறீலங்கா காவல் உளவுப்படை அழிப்பு, தமிழீழத்தில் உள்ள சிறீலங்கா காவல் நிர்வாக அமைப்பை நிலைகுலையச் செய்வது. ராணுவ முகாம்கள் மீது மறைந்திருந்தும் நேரடியாகவும் தாக்கி அழித்து, அவ்விடங்களில் தமிழீழ மக்களுக்கு தக்க சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்குவது என தமழீழ விடுதலைப் புலிகளின் ராணுவ செயல்திட்டம் வகுக்கப்பட்டது.


மனோ மாஸ்டர்

புதிய புலிகள் இயக்கத்தின் பெயரும் புகழும் பரவிய நிலையில், வெளி அரசியலிலும் மாற்றம் ஏற்பட்டது. 1976 மே 14ஆம் நாள் தமிழர் விடுதலைக்கூட்டணி வட்டுக்கோட்டை கண்ணாகம் பிரகடனம் வெளியிடப்பட்டது. தமிழர்களுக்கென்று தனி அரசு அமைப்பதே தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்கும் என்ற தீர்மானம் அதில் முன்மொழியப்பட்டது.

1976 நவம்பர் 19ல் 'தமிழ் ஈழம்தான் முடிவாக இருக்கும்' என செல்வா நாடாளுமன்றத்தில் பேசினார். அதோடு மட்டுமல்ல, ராமகிருஷ்ணா மண்டபத்தில் நடந்த கூட்டத்தில், 'எனக்கு பின் வரும் இளைஞர்கள் ஆயுதத்தால் தான் பேசுவார்கள்' என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

**தொ**டக்க காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு பிற ஈழ இயக்கங்களுடன் இணைந்தே செயற்பட்டு வந்தது. குறிப்பாக, டெலோ இயக்கம் பிரபாகரனின் சகோதர இயக்கமாக இருந்தது.

விடுதலை புலிகள் இயக்கம்

**தமிழர்களின் உயிர்களையும் உடமைகளையும் பாது காக்கும் 'தமிழீழ தேசிய ராணுவம்' என்றே விடுதலைப் புலிகள் இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையைக் களைவதற்கு தனித் தமிழீழமே தீர்வு என்பதை குறிக்கும் வகையில்'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்' என கொள்கை முழக்கம் பிரகடனப்படுத்தப்பட்டது.**

தொடங்கப்பட்டது முதல் துரோகிகளாக கருதப்பட்டவர்கள் தேடிப்பிடித்து அழிக்கப்பட்டனர்.

1977 வைகாசி 18ஆம் நாள் சண்முகநாதன் என்ற பெயரைக் கொண்ட இரு போலீசார் இணுவிலில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த இலங்கை ஆட்சியாளர்கள் பொத்தாம்பொதுவான மனித வேட்டையில் இறங்கினர். 1977 ஆவணியில் ஐக்கிய தேசிய கட்சி அரசு காவல்துறையினரையும் துணை ராணுவப் படையையும் கட்டவிழ்த்து விட்டு பல தமிழ் இளைஞர்களை சுட்டுக்கொன்றனர். தொடர்ச்சியாக போராடிய இளைஞர்களுக்கு உதவிய அரசியல்வாதிகளையும் குறி வைத்தனர். 1978 தை 27ஆம் நாள் பொத்துவில் தொகுதியின் தமிழர் கூட்டணி வேட்பாளர் கனகரத்தினம் கொழும்பில் வைத்துச் சுடப்பட்டார்.

இந்த சம்பவங்களுக்கெல்லாம் பதிலடியாக 1978 சித்திரை 7ஆம் நாள், கொழும்பில், இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உட்பட 4 இலங்கை உளவுப் படையினர் முருங்கன் மடு வீதியை ஒட்டிய காட்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சித்திரை 25ஆம் நாள் வரை, புதிய தமிழ்ப் புலிகளாகவும், விடுதலை புலிகளாகவும் 11 ராணுவ நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொண்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கையிட்டனர்.

இவ்வாறாக, விடுதலை புலிகள் அமைப்பு மேற்கொண்ட நடவடிக்கை களால் அதை தடை செய்து, இயக்கத்தினரை வேட்டையாட இலங்கை அரசு தீவிர முயற்சியில் இறங்கியது.

**(தொடரும்..)**

**வரிப்பையூரான்**





தொழிலதிபர் கவுதம் கிச்சலுவை பல வருடமாக காதலித்து போன அக்டோபரில் திருமணம் செய்து கொண்ட காஜல், விடாமல் இன்ஸ்டாவில் கிளாமர் போட்டோக்களை வெளியிட்டு வந்தார். அவரது நடிப்பில் ஹே சினாமிகா, கருங்காப்பியம், கோஸ்ட்டி, பாரிஸ் பாரிஸ் படங்கள் ரிலீசுக்கு வெயிட்டிங்கில் உள்ளன.

இந்நிலையில் காஜல் அகர்வால் சில காலம் ஓய்வு எடுக்கப் போவதாகவும், படத்தில் நடிக்க மாட்டார் என்றும் தகவல் கசிந்துள்ளது.

இதையடுத்து காஜல் கர்ப்பமாக இருக்கிறார் என்று செய்தி பரவி வருகிறது. ஏற்கனவே சிலமுறை இது போன்ற வதந்தி பரவினாலும், இந்த முறை காஜல் தரப்பில் தகவலை உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ இல்லை. இதனால் மவுனம் சம்மதம் என்ற அடிப்படையில் காஜலுக்கு சோஷியல் மீடியாவில் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.











# கேலி செய்தால் கவலை இல்லை!

எந்தவித இமேஜூம் இல்லாமல் எந்த கேரக்டர் என்றாலும் இறங்கி அடிக்கும் விஜய்சேதுபதி நடிக்கும் படங்கள் ஏராளம் என்றால் ... நடித்து வெளியாகாமல் இருக்கும் படங்கள் எக்கச் சக்கம்.

லாபம், துக்ளக்தர்பார், அனபெல் சேதுபதி என 10 நாட்களுக்குள் மூன்று படங்கள் வெளி வந்துள்ள நிலையில் விஜய் சேதுபதியுடன் ஒரு பேட்டி.

-விஜய் சேதுபதி











**ஏற்கும் கேரக்டருக்கு ஏற்ப உங்கள் நடிப்பு பேசப்படுகிறதே... இந்த மேஜிக் எப்படி நிகழ்கிறது?**

நான் தேர்ந்தெடுக்கும் அனைத்து கதாபாத்திரங்களும் என்னுடைய இயல்பான வாழ்க்கை மற்றும் என் கற்பனைக்கு நெருக்கமாக இருக்கிறது. நான் ஒரு மருத்துவர் அல்ல. ஆனால் 'தர்மதுரை'போன்ற படங்களில் நடிக்கும்போது உணர்ச்சி வசப்படுகிறேன்.

'காதலும் கடந்து போகும்' படத்தில் வருவது போன்ற ரவுடி அல்ல நான். ஆனால் அது போன்ற ஒருவரிடம் நான் பாசமாக இருக்க முடியும். 'இறைவி' படத்தில் வருவதைப் போன்று நான் சிலைகளைத் திருடுவதில்லை. ஆனால் அந்த கேரக்டர் எனக்குள் நிற்கிறது.

ஷில்பா (சூப்பர் டீலக்ஸ்) மற்றும் அய்யா (சீதக்காதி) மாஸ்டரில் நான் நடித்த கதாபாத்திரம் எனக்குத் தெரியாது. எனக்குள் ஒரு வில்லன் இருக்கிறான். ஆனால் அப்படிப்பட்ட தீர விரமானவன் அல்ல நான்.

**நிஜ வாழ்க்கையில் விஜய் சேதுபதி எப்படி?**

நான் என்னுடைய எதிரிகளை கூட விரைவில் மன்னித்து விடுவேன்.



நிறையபேர் எனக்கு துரோகம் செய்தார்கள். இதற்கு முன்பு நான் சண்டையிட்டிருக்கிறேன். ஆனால் இப்போது மன்னித்து விடுகிறேன். ஏனென்றால் அது மனக் காயத்தை ஆற்றக்கூடியது. அவர்களை விட்டு விலகி நாம் நீண்ட தூரம் சென்று விட்டாலும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் சண்டையிட்டால், அது ஒரு பெரிய சுமையாகி விடும்.


**எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை என்றாலும் சூப்பர் டீலக்ஸ், சீதக்காதி உங்கள் ஸ்பெஷல் என்கிறீர்களே?**

நான் 'சூப்பர் டீலக்ஸ்' ஷில்பாவாக அதாவது ஒரு டிரான்ஸ் பெண்ணாக நடிக்கும் வரை, நான் ஒரு ஆசிரியராக இருந்தேன், என் கதாபாத்திரங்கள் மாணவர்கள். எனக்குத் தெரிந்ததை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தேன்.

ஆனால் ஷில்பாவிடமிருந்து நான் மாணவனாக நிறைய கற்றுக்

கொண்டேன்.

எனக்குத் தெரிந்த அனைத்தையும் நான் மறந்துவிட்டேன், அவளுடைய கதையிலிருந்து நான் ஒரு பெண் என்று கற்பனை செய்தேன். மற்றும் சமூகம் அவளைப் பார்க்கும் விதம், எனது நடிப்பு, கதாபாத்திரம்... எல்லாமே இயக்குநர் தியாகராஜன் குமாரராஜாவுடனான தொடர்பிலிருந்து வந்தது. அது சட்டென்று நடந்தது, அதுதான் உண்மை. 'சீதக்காதி' காலப் பயணம் போன்றது.



**படம் இயக்கும் ஆசை இருக்கிறதா?**

கதை ஒன்று கிடைத்தால் நான் ஒரு படம் இயக்குவேன் எனக்கு எந்த பயமும் இல்லை. படம் நன்றாக இல்லை என்றால், அது நன்றாக இல்லை என்று தான் அர்த்தம். படம் நன்றாக இருப்பதாக என் நண்பர்கள் நினைத்தால், அதை வெளியிடுவேன். நிச்சயமாக, அதை ஒரு நாள் செய்வேன் .

இல்லை என்றால் குறைந்தபட்சம் ஒரு குறும்படமாவது நான் எடுக்க வேண்டும். அது நன்றாக இல்லை என்றால், மக்கள் என்னை கேலி செய்தால் அதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன். இதை எப்படி செய்வது என்று தெரியவில்லை. நான் முயற்சி செய்கிறேன். படம் நன்றாக இல்லை என்றால், அதைத் தூக்கி எறிந்துவிடுவேன். பிறகு வேறு எதாவது செய்வேன்.

**இயக்கத்தின் மீது ஏன் நாட்டம்?**

இயக்கம் என்றால் என்னவென்று புரிந்துகொள்வதற்காகவே நான் டைரக்ட் செய்ய விரும்புகிறேன். சில நேரங்களில், சில காட்சிகள் நம்மைச் சுற்றித் தெரியும். அவற்றை சில இயக்குனர்களுடன் பகிர்ந்து கொள்வேன். மேலும், எனது பரிந்துரைகள் எப்போதுமே சரியானதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. ஒரு இயக்குனராக ஒரு கதையைச் சொல்வதை நான் அனுபவிக்க விரும்புகிறேன். படப்பிடிப்பின் போது இயக்குனரின் மனம் முழுமையாக அதில் ஈடுபடும். நான் அதை புரிந்து கொள்ள விரும்புகிறேன்.

–திருமகன்

கொஞ்சம் மருத்துவம்...
நிறைய மனிதம்-45



# நினைத்தாலே பதறும்!

ஒரு மனிதனுக்கு நோயினை உணர்த்தும் அறிகுறிகள் என்று எத்தனையோ இருந்தாலும் சில அறிகுறிகள் மட்டும் பதைபதைக்கச் செய்துவிடுகின்றன. நெஞ்சுவலி நமது மனங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை வயிறுவலி ஏற்படுத்துவதில்லை என்பது உண்மைதானே!

ஒருவரை உடனடியாக பதற்றமடையச் செய்துவிடும் ஒரு அறிகுறி மூக்கில் ரத்தம் வடிதல். அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை திரைப்பட இயக்குநர்கள், ஒருவரின் மோசமான நிலையைக் காட்ட வேண்டுமென்றால் உடனடியாக மூக்கில் ரத்தம் வர வைத்து விடுவார்கள்.





-டாக்டர் அகிலாண்ட பாரதி

நம்மையே எடுத்துக் கொள்வோம். ஈறுகளில் ரத்தம் வடிந்தால் இலேசாக வாய் கொப்பளித்து விட்டுக் காத்திருப்போம். மலம் கழிக்கும் பொழுது ஆசன வாய் வழியே ரத்தம் வெளியேறினால் சில நாட்கள் வரை பொறுத்திருந்து பார்ப்போம். காயம் ஏற்பட்டால் அதில் ரத்தம் நின்றவுடன் மனம் சற்று அமைதி அடையும். நாய்க்கடி, பாம்புக்கடி என்று வருகையில் ரத்தம் வெளியேறி விட்டால், அப்பாடா! அதில் விஷமும் வெளியேறி இருக்கும் என்று நம்புபவர்கள் பலர்.

ஆனால் மூக்கில் இரத்தம் வடிந்தால் மட்டும் யாராக இருந்தாலும் பதைபதைத்துக் கொண்டு உடனடியாக மருத்துவமனைக்கு ஓடி

**அதிக வெக்கை நிரம்பிய சுற்றுப்புறங்களில் இருப்பவர்களுக்கு மூக்கில் உள்ள தசைகளில் உலர்வுத் தன்மை அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அதுபோக அலர்ஜி, சைனஸ் பிரச்சனை போன்றவற்றிற்காக மூக்கில் ஸ்பிரே பயன்படுத்துபவர்களுக்கும் இந்த பிரச்சனை வரலாம்.**

வருவார்கள். அடிக்கடி 'குழந்தைக்கு மூக்கில் ரத்தம் வருகிறது' என்று பதற்றத்துடன் தூக்கி வரும் பெற்றோரைக் காணலாம்.

குழந்தைகளைப் பொருத்தவரை மூக்கில் ரத்தம் வடிவதற்கு முக்கியமான காரணம் கைகளால் மூக்கைக் குடைதல்.

லேசான ஜலதோஷம், மூக்கடைப்பு இவை ஏற்படும் போது மூக்கில் சளி உறைந்திருக்கும். அதை அசௌகரியமாக உணரும் குழந்தைகள் கையால் அடிக்கடி அதை சுத்தம் செய்ய விழைவார்கள். அப்போது மூக்கின் நடுவில் அமைந்திருக்கும் தகடு போன்ற அமைப்பில் (Nasal septum) ஏற்படும் இரத்தக்கசிவு தான் இத்தகைய இரத்தப் போக்கிற்குக் காரணம்.

ரத்த நாளங்கள் செறிந்த இந்தப் பகுதியை Little's area என்று கூறுவோம். அப்படி வரும் போதே அந்தக் குழந்தைக்கு ரத்தம் வடிதல் நின்றிருக்கும். பரிசோதனை செய்துவிட்டு இது ஒன்றும் இல்லை சாதாரண பிரச்சினைதான் என்று மனதை சாந்தப்படுத்துவது ஒன்றே அப்போது செய்ய வேண்டியது. இனி இதுபோல்

வராமல் இருக்க நீங்களே குளிப்பாட்டுகையில் குழந்தைக்கு மூக்கில் உள்ள அழுக்கை சுத்தம் செய்து விடுங்கள் என்றும் கூறி அனுப்புவோம்.

பதின்வயது வரும்வரை சில குழந்தைகள் பழக்கத்தால் மூக்கைக் குடைந்து கொண்டே இருப்பார்கள் (habitual nose picking). வளர்ந்ததும் அந்தப் போக்கு போகப்போக குறைந்துவிடும்.. 'அப்படி அடிக்கடி மூக்கில் ரத்தம் வந்தால் என்ன செய்வது டாக்டர்?' என்று சில நோயாளிகள் கேட்பார்கள்.

பதட்டமடைய வேண்டாம், நிமிர்ந்த வாக்கில் அமர்ந்துகொண்டு மூக்கை இரு கைகளாலும் அழுத்தி ஒரு ஐந்து நிமிடம் வைத்திருந்தால் சாதாரண பிரச்சனைகள் சரியாகிவிடும். அந்த நேரத்தில் வாய் வழியே சுவாசித்துக் கொள்ளலாம். தேவைப்பட்டால் ஐஸ் கட்டி வைத்து ஒத்தடம் தரலாம். பயப்படக்கூடிய அளவுக்கு அதிகமாக ரத்தம் வருகிறது, ஐந்து நிமிடங்களுக்கு மேல் நிற்கவில்லை என்றால் மருத்துவ உதவியை உடனடியாக நாடவேண்டும்.

சில சமயங்களில் மூக்கின் உட்புறத்தில் உள்ள

**ஆஸ்பிரின், வார்ஃபாரின் போன்ற ரத்தம் உறையாமல் தடுக்கும் மருந்துகள் சிலவும் மூக்கில் இரத்தம் வடியும் நிலையை உருவாக்கக்கூடும். ஒரே மூக்கில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெகுநாட்களாக இரத்தம் அல்லது சீழ் வந்துகொண்டே இருந்தால் அதில் ஏதாவது அயல் பொருள் (foreign body) மாட்டிக் கொண்டிருக்க வாய்ப்பு உண்டு.**

நீர்க்கட்டிகள் (polyps) அல்லது சில வகையான புற்று நோய்களின் அறிகுறியாகக் கூட மூக்கில் இரத்தம் வடியும் பிரச்சனை இருக்கலாம்.

நம் நாட்டில் மூக்கு ஒழுகினால் செட்ரிசின், அவில் போன்ற மாத்திரைகளைத் தானாக வாங்கி உண்ணும் பழக்கமும் இருக்கிறது. இந்த மாத்திரைகள் ஒழுகும் நீரை கெட்டிப்படுத்தி விடுவதால், அப்போதும் மூக்கில் அழுக்கு சேர்ந்து கொள்ள அதிக வாய்ப்பு உள்ளது.

விபத்து, அடிதடி போன்ற காயங்களில் மூக்கில் இரத்தம் வடிதல் ஆபத்தான நிலையைக் குறிக்கும். காதுகளிலும் மூக்கிலும் ரத்தம் வடிந்தால் மூளையில் அடிபட்டிருக்கக் கூடிய வாய்ப்பு அதிகம். அதனால் அடுத்தகட்ட பரிசோதனைகளை அவசியம்

விரைந்து செய்தாக வேண்டும்.

கர்ப்ப காலத்தில் இயல்பாகவே மூக்கில் உள்ள ரத்த நாளங்கள் சற்று விரிவடையும். அதனால் அந்த நேரத்திலும் மூக்கில் ரத்தம் வடியலாம். ஹீமோபிலியா போன்ற பரம்பரை வியாதிகளில் ரத்தம் உறையாத நிலை ஏற்படும். லேசான காயத்தின் பின்பாக மூக்கில் ரத்தம் நிற்காமல் வருவதைக் கொண்டு இப்படியான பரம்பரை நோய்களின் இருப்பைப் பலநேரங்களில் கண்டுபிடித்திருக்கிறோம்.


டாக்டர்.அகிலாண்ட பாரதி

ஒரு நோயாளி, ஐம்பத்தைந்து வயது இருக்கும். அடிக்கடி மூக்கில் ரத்தம் வருகிறது என்று வருவார். ஒவ்வொரு முறையும் யாரோ அடித்து விட்டதாகவே கூறி புலம்புவார். முதலில் ஓரிரு முறை அவர் அப்படிக் கூறும்போது, 'ஐயையோ! இந்த வயசானவரைப் போய் யார் அடிச்சது?' என்று பதட்டம் அடைந்தோம் நாங்கள். ஆனால் அதுவே தொடரவும் 'இவரை யார் அடிக்கடி அடிக்கிறது? அதுவும் மூக்கிலேயே?' என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த எங்கள் பணியாளர் ஒருவரைக் கேட்டேன்.

அவர், ''அம்மா! இவர் ஒரு கஞ்சா கேஸ்.. எது கெடச்சாலும் மூக்கில் போட்டு உறிஞ்சுற ஆளு!'' என்று சர்வசாதாரணமாகக் கூறினார். போதைப் பொருட்களை நுகர்வதன் மூலமும் மூக்கில் ரத்தம் வரும் என்பதை அப்போது தான் நான் கண்கூடாக அறிந்தேன்.

சில சூழல்களில் மூக்கில் ரத்தம் வடிவதை நல்லதற்கு என்று எடுத்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலைகளும் உண்டு. உயர் ரத்த அழுத்தத்தின் காரணமாக உடலில் எங்கு வேண்டுமானாலும் ரத்தக் கசிவு ஏற்படலாம். மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டால் பக்கவாதம் முதல் உயிரிழப்பு கூட ஏற்படலாம். அதற்கு முன்னதாகவே மூக்கில் ரத்தம் என்ற சிறிய அறிகுறி தோன்றி விட்டால் வைத்தியம் பார்ப்பது எளிது.

எங்கள் ஏரியாவில் நன்கு பிரபலமான குடிமகன் அவர். காலையில் தன் தாயைப் பாசத்துடன் பார்த்துக் கொள்வதும், வடிவேலு படப் பாணியில் மாலையானால் அடிப்பதும் உதைப்பதுமாக இருக்கும் எத்தனையோ

குடிமகன்களின் பிரதிநிதி அவர்.

அவரது எழுபது வயதுத் தாயும் எத்தனையோ இந்தியத் தாய்மார்களைப் போலவே, ''அவன்தான் குடிச்சிட்டு வர்றான்னு தெரியுதுல்லம்மா.. என் மருமகள் ஏன்மா அவன்கிட்ட போய் சண்டை போடுறா? இவன் ஓவரா தண்ணி போட்டா கோவிச்சுக்கிட்டு பிள்ளைகளைக் கூட்டிக் கிட்டு அம்மா வீட்டுக்கு போயிடுறா.. கொஞ்சம் கூட பொறுப்பே இல்லை இவளுக்கு. அப்புறம் எப்படி இவன் திருந்துவான்?'' என்று மகனை விட்டுக்கொடுக்காமல் மருமகளைக் குற்றம் சொல்லும் அக்மார்க் அம்மா.

அப்படி மருமகள் ஊருக்குப் போன ஒரு நாளில் அவருக்கு மூக்கில் ரத்தம் நிறைய வடிந்து விட, கிடைத்த வாகனத்தில் தூக்கிப் போட்டுக்கொண்டு அரசு மருத்துவமனைக்கு வந்தார் அந்தத் தாயார். கல்லீரல் கெட்டுப் போய் ரத்தம் உறையும் நிலை பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று நினைத்து அதற்கான பரிசோதனைகளைச் செய்தோம். அப்படி இல்லை. ஆனால் ரத்தக்கொதிப்பு அதிகமாக இருந்தது. குடிமகன் அதிகமாக பயந்து விட்டார். அவரை உள்நோயாளியாக சேர்த்து, உடல்நிலையை சீராக்கி, இரத்த கொதிப்பிற்கு மாத்திரைகளைக் கொடுத்து அனுப்பி வைத்தோம். மூன்று மாதங்கள் வரை ஒழுங்காக வந்து மாத்திரை வாங்கி சாப்பிட்டார்.

சட்டை முழுவதும் வடிந்திருந்த ரத்தம் கொடுத்த பயம் அது வரை தான் நீடித்தது போலும். அடுத்தடுத்த மாதங்களில் எந்த தொந்தரவும் இல்லை, ரத்த அழுத்தமும் கட்டுக்குள் இருக்கிறது என்றவுடன் அதுவரை சாப்பிட்ட மாத்திரைகள், வாங்கிய அறிவுரைகள் அனைத்தையும் காற்றில் பறக்க விட்டு விட்டு பழையபடி குடிமகன் அவதாரத்தைத் துவக்கி விட்டார். 'குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு' என்ற பழமொழியின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் மாறிப்போனார்.

''அடுத்து எப்ப மூக்குல ரத்தம் வரும்னு தான் பார்த்துகிட்டு இருக்கேன்மா.. அதுக்கு அப்புறம் தான் திருப்பி பயம் குடுத்து நிறுத்துவான்'' என்றபடியே இன்னும் அடிவாங்கிக் கொண்டு தான் இருக்கிறார் அவரது அம்மா.

**-மனிதம் காப்போம்**



# நைசாக உருவும் நைஜீரியர்கள்... உஷார்!

நைஜீரியா – இந்தியாவைப் போல ஆங்கிலேய காலனியாக இருந்த ஆப்பிரிக்க நாடு. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில் ஏழாவது இடத்தை பெற்றுள்ளது. இந்தியாவின் நட்பு நாடாக இருக்கிறது.இந்திய எரிபொருள் தேவையில் 30% கச்சா எண்ணெய்யை வழங்குகிறது.





இந் நாட்டில் இந்தியர்கள் சுமார் ஐந்து லட்சம் பேர் வசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவில் சுமார் ஐம்பதாயிரம் நைஜீரியர்கள் வசிக்கின்றனர். இவர்களில் அதிகம் பேர் கோவா மாநிலத்தில் வசிக்கின்றனர். நம் தமிழ்நாட்டில் திருப்பூரிலும் அதிக நைஜீரியர்கள் இருக்கின்றனர்.

இந்த வரலாற்று தகவல் எல்லாம் எதற்காக என்றால், இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் நைஜீரியர்கள் செய்கின்ற 'டெகால்டி' வேலைகளை குறிப்பிடத்தான்.

தமிழ்நாட்டில் வட இந்தியர்கள், வெளி நாட்டினர் ஏகப்பட்ட பேர் திருப்பூர், கோவை மாவட்டங்களில் தொழிலுக்காக வந்திருக்கின்றனர். அவர்களால் ஏற்படாத பதற்றமும் பீதியும் நைஜீரியர்களின் வருகையால் ஏற்பட்டது தான் விந்தை.

2014ல் நைஜீரியர்களை வெளியேற்ற வேண்டும் என்று பெரும் கிளர்ச்சியே இங்கு ஏற்பட்டது. திருப்பூருக்கு முன்பே, கோவாவில் நைஜீரியர்களை வெளியேற்றக்கோரி பெரும் போராட்டம் நடந்தது.

அங்குள்ள பாரா கிராமத்தில் 2013ல் நைஜீரிய நாட்டைச்



கோவாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நைஜீரியர்கள்

சேர்ந்த ஓபாடோ உலமோ சிமியோன் என்பவர் படுகாயத்துடன் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இதனைக் கண்டித்து 200க்கும் மேற்பட்ட நைஜீரியர்கள் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். கோவா போலீசார் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தினர். இதனால் 50 நைஜீரியர்கள் கைது

**கடந்த ஆண்டு, பொலிவியா நாட்டிலிருந்து கோவை வந்த இரண்டு நைஜீரியப் பெண்கள் கோகைனுடன் திருப்பூர் செல்லும்போது கைது செய்யப்பட்டார்கள். கொலம்பியா, பெரு, பொலிவியா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் கோகைனை இவர்கள் திருப்பூருக்கு கொண்டு வந்ததும், அங்கிருந்து பெங்களூர், சென்னை, கொச்சி போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதும் விசாரணையில் தெரியவந்தது.**

செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து அங்கு சென்ற நைஜீரிய தூதரக அதிகாரி, எங்கள் நாட்டவரை தாக்கினால் நைஜீரியாவில் வசிக்கும் 10 லட்சம் இந்தியர்களை விரட்டியடிப்போம் என்று எச்சரித்தார்.


நிவாக்வு பிரின்சில்வில் சிகா

இந்நிலையில் நைஜீரியர்களை கோவாவை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று அம்மாநில மக்கள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் நைஜீரிய நாட்டவருக்கு தங்கும் இடத்தை எவருமே தரக்கூடாது என்றும் அம்மக்கள் வலியுறுத்தினர்.

சரி... நிகழ் கால சம்பவத்துக்கு வருவேம்.

நைஜீரியர் நடத்தும் குற்றங்களில் பிரதானமானது போதை கடத்தல். சமீபத்தில் மும்பை போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் ரகசிய தகவலின் பேரில் நைஜீரியர் ஒருவரை பிடித்து சோதனை நடத்தினர். அப்போது அவரிடம் இருந்து 10.2 கிராம் கொகைகன் மற்றும் எல்.எஸ்.டி. போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில், அவர் நைஜீரியாவில் கல்லூரி பேராசிரியராக பணியாற்றிய நிவாக்வு பிரின்சில்வில் சிகா என்பது தெரியவந்தது. 2017ஆம் ஆண்டு அவர் இந்தியாவுக்கு சுற்றுலா விசாவில் வந்து உள்ளார். பின்னர் விசா காலம் முடிந்த பிறகும் சட்ட விரோதமாக தங்கி இருக்கிறார். குற்ற நடவடிக்கைகளில் சகஜமாக ஈடுபட அவர் இந்தியும் கற்றுள்ளார்.

அதேபோல்,நவி மும்பை கார்கர் பகுதியில் கடந்த 2019ஆம் ஆண்டு போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக நைஜீரிய நாட்டை சேர்ந்த மெடுச்சி காஸ்மோஸ் என்பவர் போலீசாரால் கைது செய்யப்பட்டார். இவரிடம் இருந்து பாஸ்போர்ட் மற்றும் விசாவை பறிமுதல் செய்தனர்.

விசா தொடர்பாக வெளியுறவு அமைச்சகத்தில் நடத்திய விசாரணையில், அவர் போலி சான்றிதழ் சமர்ப்பித்து விசா பெற்று சட்டவிரோதமாக நவிமும்பையில் தங்கி இருப்பது தெரியவந்தது.

கடந்த ஜூலையில் கூட கோவை ரயில் நிலையத்தில் நைஜீரிய நாட்டு இளைஞரிடம் 1.15 கோடி ரூபாய் மதிப்பிலான 2.3 கிலோ மெத்தாம் பெட்டமைன் என்ற

போதைப் பொருளை, மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

நைஜீரிய நாட்டைச் சேர்ந்த எட்வின் கிங்ஸ்லி என்ற அந்த நபர், திருப்பூரில் தங்கியிருந்து கார்மெண்ட் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்ட நிலையில் 3 ஆண்டுகளாக போதை கடத்தலையும் உப தொழிலாக செய்துவந்துள்ளார்.


கிரிஸ்டோபர்

கடந்த ஜனவரியில், கர்நாடக மாநிலம் பெங்களூருவில் எம்.டி.எம்.ஏ. எனப்படும் போதை மாத்திரைகள் விற்பனை செய்த நைஜீரியாவைச் சேர்ந்த டியோ மையாண்டே, கேரளாவைச் சேர்ந்த நிஷான் ஆகிய இருவர் பிடிபட்டனர். அவர்களிடமிருந்த 500கி எடையுள்ள போதைப்பொருள், ரூ.25 லட்சம், மூன்று செல்போன்கள், பைக் பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்தாண்டு இறுதியில் திருவான்மியூர் பகுதியில் கொகைன் போதைப்பொருள் விற்பனை செய்த இப்ராஹிம் (57) என்ற நைஜீரியரை போலீசார் கைது செய்தனர். அவர், நைஜீரியாவில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு கொகைன் போதை பொருளை கடத்தி வந்து, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் உள்பட பலருக்கு விற்பனை செய்து வந்துள்ளார். அவரிடமிருந்து, சுமார் ரூ.5.50 லட்சம் மதிப்புள்ள சுமார் 55 கிராம் கொகைன் மற்றும் ரூ.65 ஆயிரம், பாஸ்போர்ட், நைஜீரியா செல்வதற்கான விமான டிக்கெட் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

அடுத்து இவர்கள் வேலை ஏடிஎம் மையங்களில் திருடுவது, வங்கி கணக்கு விவரங்களை அறிந்து பணம் எடுப்பது உள்ளிட்டவையாக இருக்கின்றன.

சமீபத்தில் புதுச்சேரி லாஸ்பேட்டை எஸ்.பி.ஐ. ஏடிஎம் மையத்தில் பணம் எடுக்க வந்தவர்கள் எந்திரத்தில் ஸ்கிம்மர் பொருத்தியிருந்ததை கண்டனர். அதை சமூக வலைத்தளத்திலும் பதிவிட்டனர். வழக்குப்பதிவு செய்த சைபர் கிரைம் போலீசார் சிசிடிவி பதிவுகளை கைப்பற்றி விசாரித்தனர். விசாரணையில் , சென்னையில் தங்கியிருக்கும் நைஜீரிய இளைஞர் புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் ஸ்கிம்மர்

**இந்தியாவில் மற்ற நாட்டவர்களை போலன்றி , விசா இல்லாமல் தங்கும் நைஜீரியர்கள் அதிகம். அவர்கள் தடயமின்றி பல குற்ற நடவடிக்கைகளை செய்துவிட்டு 'எஸ்கேப்' ஆகிவிடுவது வழக்கமாக இருப்பதாலேயே பெரும் பீதி ஏற்படுகிறது.**

**மேலும், திறந்தவெளி கொண்டாட்டம், கேளிக்கை என்ற கலாச்சாரத்தில் வாழ்ந்த, நைஜீரியர்கள் அதையே தாங்கள் செல்லும் வெளிநாடுகளிலும் கடைப்பிடிப்பதால், அதுவும் இந்தியாவில் இவர்களுக்கு எதிராக மக்கள் திரளக் காரணமாகிவிட்டது.**

**திருப்பூரிலும், இவர்களின் தெருக்கொண்டாட்டம், முரட்டு சுபாவம், துணி வியாபாரத்துக்காக வந்து துணி உற்பத்தியில் ஈடுபட்டது தான் அவ்வூரார் நைஜீரியருக்கு எதிராக பொங்கியெழ காரணமாகிவிட்டது என்றும் கூறப்படுகிறது.**

கருவியை பொருத்தியது தெரியவந்தது. அவரை கைது செய்து போலி ஏடிஎம் கார்டுகள், லேப் டாப்புகளை பறிமுதல் செய்தனர்.

சென்னை கீழ்ப்பாக்கத்தை சேர்ந்த தொழில் அதிபர் ஜோசப், தொழில் வாய்ப்புகள் குறித்து முகநூலில் பதிவு செய்து வந்த நிலையில், இவரது முகநூல் பதிவுகளை பார்த்த ஒருவர், லண்டனைச் சார்ந்த எலிசபெத் என்று தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார்.

முதலில் தொழில் வாய்ப்புகள் குறித்து விசாரித்து, அதன் மூலமாக ஜோசப்பின் நிதி நிலவரம் குறித்து அறிந்துள்ளார். பின்னர் இரத்தப் புற்றுநோயை குணப்படுத்தும் ஆயில் மும்பையில் கிடைப்பதாகவும், ரூபாய் 36 இலட்சம் மதிப்புள்ள பொருளை வாங்கி அனுப்பினால், ரூ.42 இலட்சம் பணம் அனுப்பி வைப்பதாகவும் ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதனையடுத்து மும்பையை சேர்ந்த சுனிதா என்ற பெண்மணியை தொடர்புகொண்டு ஆயிலை அனுப்பி வைக்க தேவையான நடவடிக்கையை ஜோசப் மேற்கொண்டுள்ளார். சுனிதாவின் வங்கி கணக்கிற்கு ரூ.36 இலட்சம் செலுத்தப்பட்ட நிலையில், சுனிதா மற்றும் எலிசபெத் ஆகியோரின் அலைபேசி எண்கள் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. அவர்களை தொடர்பு கொள்ள

முயன்றபோது, அவர்கள் போலியான நபர்கள் என்பது கண்டறிந்து பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து சென்னை சைபர் கிரைம் காவல்துறையினரிடம் இது தொடர்பாக புகார் அளிக்கவே, தனிப்படை காவல்துறையினர் விசாரணை செய்து மும்பைக்கு விரைந்து சென்றனர். அங்கு எலிசபெத் பெயரில் சாட்டிங் செய்தது நைஜீரியாவை சேர்ந்த இளைஞர் கிரிஸ்டோபர் என்பதும் தெரியவந்துள்ளது. மேலும், இது போல **15** க்கும் மேற்பட்ட சம்பவங்களில் ஈடுபட்டு உள்ளதும், சென்னையில் மட்டுமே நான்கு பேரிடம் இலட்சக்கணக்கில் பணம் ஏமாற்றியது தெரியவந்துள்ளது.

இணையம் மூலம் தொடர்பு ஏற்படுத்தி திருமண மோசடி செய்வதும் இவர்கள் வேலையாக இருக்கிறது.

இம்மாத தொடக்கத்தில் ஆன்லைன் மூலம் பழகி திருமணம் செய்வதாக கூறி ரூ.**4.5** லட்சம் மோசடி செய்த பாலினஸ் சிகேலுவோ, சிலிடஸ் கேஸ்சுக்வு கைத் என்ற இரு நைஜீரியர்கள் டெல்லியில் கைது செய்யப்பட்டனர். நெதர்லாந்து மருத்துவர் எனக்கூறி சென்னை



பாலினஸ் சிகேலுவோ, சிலிடஸ் கேஸ்சுக்வு கைத்.

பெண்ணிடம் அவர்கள் இந்த மோசடியை செய்துள்ளனர். விவாகரத்தான வர்களை குறிவைத்து காய் நகர்த்திய இவர்கள், வைர நெக்லஸ், நெதர்லாந்து பணம், கிப்ஃட் அனுப்புவதாக கூறியுள்ளனர். அதற்காக சுங்கவரி கட்டவேண்டுமென்று பணம் பறித்துள்ளனர்.

தொடர்ந்து அவர்களிடம் நடத்திய விசாரணையில், தமிழகம் முழுவதும் **32** பெண்களிடம் **1.5** கோடி ரூபாய் வரை மேட்ரிமோனி மோசடி செய்தது தெரியவந்தது.

முதல் திருமணத்திற்காக மெட்ரிமோனியலில் பதிவிடுபவர்கள் தங்களது பெற்றோர்களின் எண்களை பதிவிடுகின்றனர். இரண்டாம் திருமணத்திற்காக வரன் பார்க்கும் பெண்கள் மட்டுமே சொந்த செல்போன் எண்ணை பதிவிடுகின்றனர். இதை இந்த மோசடி கும்பல் சரியாக பயன்படுத்தியுள்ளது.

ஸ்டூடண்ட் விசா, சுற்றுலா விசா மூலமாக போலி ஆவணங்களுடன் இந்தியாவிற்குள் நுழைந்து டெல்லி உத்தம் நகரில் தங்கி மோசடி செய்துவந்துள்ளனர். கடந்த 5 வருடங்களாக 7 பேர் கொண்ட நைஜீரிய கும்பல் இந்த மோசடியில் ஈடுபட்டு வருவதும் கூடுதல் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்கள் சாலையோரங்களில் வசிக்கும் ஏழை பொதுமக்களிடம் பணத்தை கொடுத்து அடையாள அட்டை பெற்று கொண்டு அதன் மூலமாக வங்கி கணக்கு மற்றும் சிம் கார்டு வாங்கி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இங்கு மட்டுமல்ல, மலேசியா, சிங்கப்பூர் என செல்லும் இடமெல்லாம் தங்கள் சேட்டைகளை நைஜீரியர்கள் செய்கின்றனர். மலேசிய கஜாங்கில் காதல் மோசடி செய்த 33 முதல் 42 வயதிற்குட்பட்ட ஆறு நைஜீரிய ஆண்கள் மற்றும் உள்ளூர் பெண்ணை கடந்த ஜூன் 23ல் போலீசார் கைது செய்தனர். அங்கிருந்து வெளிநாட்டவரிடம் காதல், திருமண மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

**நைஜீரியநாட்டு மக்கள் தங்கள் பிரதான தொழிலான விவசாயத்தை போல், தொலைத்தொடர்பு நுட்பத்தில் திறமையானவர்கள். அதை பயன்படுத்தியே போதை கடத்தல், வங்கி டிஜிட்டல் பரிவர்த்தனை, திருமண மோசடி போன்ற குற்றங்களை நேர்த்தியாக செய்துவருகின்றனர்.**

**உலகளவில் பிரசித்தி பெற்ற 'நைஜீரியத் தேக்கு' போலவே இந்நாட்டு இளைஞர்களும் வலிமையும் முரட்டு நடவடிக்கையும் கொண்டிருப்பதால் இயல்பாகவே இவர்கள் மீது வெளிநாட்டினர் அச்சம் கொண்டு அவர்களை அண்ட விடுவதில்லை.**

விசாரணையில்... ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக அந்தக் கும்பல் செயல்பட்டு வந்தது தெரியவந்துள்ளது. சுற்றுலா மற்றும் கல்வி விசா பெற்று வந்து இந்த வேலையை செய்துள்ளனர்.

இரண்டு தனித்தனி குழுக்களை அமைத்து, சமூக வலைத்தளங்களில் போலி கணக்குகளை உருவாக்கி

மோசடியில் ஈடுபட்டுள்ளனர். சுங்க அதிகாரிகள், கூரியர் நிறுவன ஊழியர்கள் என பல வேடங்களில் நடித்து ஏமாற்றியுள்ளனர். வேறொரு வகையில், இணைய தளத்தில் உள்ளோருக்கு பல இலட்சம் பரிசு விழுந்திருப்பதாக கூறி, குறிப்பிட்ட தொகை டெப்பாசிட் செய்யச்சொல்லி பணத்தை சுருட்டியுள்ளனர்.

இப்படி, திரைகடலோடி திருட்டுத் தொழிலில் ஈடுபடுமளவு நைஜீரியா வறுமை மிகுந்த, மோசமான கலாச்சாரத்தை கொண்ட நாடு அல்ல.

எந்த ஒரு நாட்டு மக்களும் ஆண்டாண்டு காலமாக அரசியல், மொழி, கலாச்சார அடிமைகளாக இருந்தால் பண்பாட்டு ரீதியாக பாதிக்கப்படுவது உண்மை.

அந்த வகையில், ஹீசா, இக்போ, யுவோர் என்ற 3 இனக்குழுக்களாக, ஹௌசா, இக்போ, யொரூபா என்ற மொழிகளை பேசி வாழ்ந்தவர்களை, ஆங்கிலேயர்கள் அடிமை கொண்டு ஆங்கிலத்தை ஆட்சி, அலுவல் மொழியாக்கினர்.

அந்நாட்டு இயற்கை வளத்தையும் எண்ணெய் வளத்தையும் சுரண்டி மக்களை வறுமைக்கு




வாக்கப்படுத்தினர். பின்னாள் வந்த பழங்குடி தலைவர்கள், ராணுவ ஆட்சியாளர்கள் முதல் தற்போதைய ஜனநாயக ஆட்சியினர் வரை மோசமாக ஆட்சி செய்வதால், உலகில் பொருளாதார ரீதியாக சிறப்பாக முன்னேறவேண்டிய இந்த நாடு, ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

நைஜீரியாவில் நிலவும் வன்முறை அரசியலும் அவர்களின் குணபாவம் மாற பெருங்காரணமாகிறது. இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்ற இரு சமயங்களை கொண்ட அந்த நாட்டில், இவ்வாண்டின் முதல் 200 நாட்களில் மட்டும் 3,462 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் .

எப்படியோ, நைஜீரியர்கள் என்றாலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற அளவுக்கு அவர்கள் குடிபுகுந்த நாடுகளில் தங்கள் முத்திரையை பதித்து விடுகிறார்கள்.

**-பரிதிபாலன்**

# தள்ளிப் போன ஆர்.ஆர்.ஆர்




ராஜமவுலியின் ஆர்.ஆர்.ஆர். படத்தை அக்டோபர் மாதம் ரிலீஸ் செய்ய இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தனர்.

ஆனால் தற்போது கொரோனா சூழலால் மக்கள் தியேட்டர்களுக்கு செல்ல தயக்கம் காட்டுகின்றனர். சமீபத்தில் வெளியான அக்ஷய் குமாரின் 'பெல்பாட்டம்' மற்றும் கங்கனா ரனாவத்தின் 'தலைவி' படங்கள் பாக்ஸ் ஆபீஸில் அடி வாங்கியதற்கு இதுவே காரணம் என்கின்றனர்.

இதனால் சுதாரித்துக் கொண்ட ராஜமவுலி, பட ரிலீஸ் தேதியை காலவரையின்றி ஒத்தி வைப்பதாக கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு ஏப்ரலில் ஆர்.ஆர்.ஆர். ரிலீசாகக் கூடும் என்கின்றனர். தீபாவளிக்கு ரஜினியின் அண் ணாத்த, சிம்புவின் 'மாநாடு' படங்கள் வெளியாகும் என்று கூறியிருந்தாலும் ரிலீசாகுமா என்று டவுட் எழுந்துள்ளது.

# சாய் பல்லவியின் லவ் ஸ்டோரி



டோலிவுட்டில் காதல் படங்களை இயக்கி புகழ் பெற்ற சேகர் கம்முலாவுடன் ரெண்டாவது முறையாக 'லவ் ஸ்டோரி' படத்தில் இணைந்திருக்கும் சாய் பல்லவி, நடிகை சமந்தாவின் கணவர் நாக சைதன்யாவுடன் முதன்முறையாக ஜோடி சேர்ந்து நடித்திருக்கிறார். படத்தில் நாக சைதன்யாவுக்கும், சாய் பல்லவிக்கும் கெமிஸ்ட்ரி தாறுமாறாக வொர்க் அவுட் ஆகியிருக்கிறதாம். இருவேறு துறைகளில் சாதிக்க நினைக்கும் மிடில் கிளாஸ் லவ்வர்ஸ் வாழ்க்கையில் சந்திக்கும் சவால்கள் தான் படத்தில் கதையாம். இதற்கு முன்பு சேகர் கம்முலா இயக்கத்தில் சாய் பல்லவி நடித்த 'பிடா' திரைப்படம் பிளாக்பஸ்டர் ஹிட் அடித்தது குறிப்பிடத்தக்கது.

தேவியின் கண்மணி
மலர்-33 vol- 33
மணி-35 Issue - 35
Published by R.Kannan Adityan on behalf of Murasu Publications from No.246, Anna Salai, Thousand Light Chennai-6 and Printed by R.Kannan Adityan at Deviyin Kanmani Achagam, 246, Anna Salai, Thousand Light, Chennai-6 Editor:R.Kannan Adityan


மாலை
முரசு
செய்திகள்
நமது
மாலை முரசு
தொலைக்காட்சியில்
தினந்தோறும் நடக்கும் சினிமா கிசுகிசுக்களை
வாரந்தோறும் ஆரவாரமாக தொகுத்து
வழங்கிடும் நிகழ்ச்சி
கொளுத்தி
போடுவோம்
ஞாயிறுதோறும் இரவு 8.30 மணிக்கு
காணத் தவறாதீர்கள்!

Deviyin KANMANI-Tamil Weekly29-09-2021 Registered With Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.

